பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 25 சனிக்கிழமை (10.09.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :288

# புலிகளைத் தடை செய்வது பற்றி ஐரோப்பிய ஒன்றியம் பரிசீலனை!

## சிலநாடுகள் அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவிப்பு; அழுத்தம் கொடுத்தால்போதும் எனவும் கருத்து

லண்டன், செப்.10

இலங்கையில் அமைதி முயற்சிகள் தொடர்ந்து இழுபட்டுச் செல்லும் நிலையில், ஐரோப்பிய நாடுகளில் விடுதலைப் புலிகளைத் தடைசெய்வது பற்றி ஐரோப்பிய ஒன்றியம் பரிசீலனை செய்து வருகின்றது என்று கூறப்படுகின்றது. ஆனால், இலங்கையில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்தச் சந்தர்ப்பத்தில் தடை விதிப்பதை விடுத்து புலிகள் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து அவர்களை சமாதான வழிக்குக் கொண்டு வருவதே சிறந்தது என்று ஒன்றியத்திலுள்ள முன்னணி நாடுகள் சில கருதுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இது பற்றிப் புலிகளுடன் நேரில் பேசவும் அந்த அமைப்புத் திட்டமிட்டுள்ளது.

இலங்கையில் தொடரும் வன்முறைகளைக் கருத்திற் கொண்டு ஐரோப்பிய நாடுகளில் விடுதலைப் புலிகளைத் தடைசெய்வது பற்றிப் பரிசீலிக்கப்படுகின்றது என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் பெனிட்டா பேராரோ வோல்ட்னர் நேற்று செய்தி நிறுவனம் ஒன்றுக்குத் தெரிவித்தார். விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களுக்கு உடனடியாகத் திரும்பவேண்டும் என்றும் அப்போது அவர் வலியுறுத்தினார்.

ஐ.ஏ.என்.எஸ். செய்தி நிறுவனத்திற்கு

(2ஆம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பி.-மஹிந்த ஒப்பந்தத்தால் ஜனாதிபதி சந்திரிகா கடும் சீற்றம்!

## பிரதமரின் செயலை விமர்சித்து நேற்று மாலை அவருக்குக் கடிதம்



ஒப்பந்தத்தின் பின் மகிழ்ச்சியில் பிரதமர்.

கொழும்பு, செப்ரெம்பர் 10

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலையொட்டி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியினருடன் உடன்படிக்கை செய்துகொண்டதால் கடும் சீற்றமடைந்துள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. இதற்காக அவர் பிரதமரைக் கடுமையாகச் சாடியுமுள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கொள்கைகளுக்கு முழுவதும் முரணாகப் பிரதமர் செயற்படுகின்றார் என்று சீறிப் பாயும் ஜனாதிபதி அதுகுறித்து மிகமிகக் காட்டமான கடிதம் ஒன்றைப் பிரதமருக்கு நேற்று மாலை அனுப்பிவைத்தார்.

ஜே.வி.பியினருடனான உடன்படிக்கையில் பொதுக்கட்டமைப்பைக் கைவிடுவதாகத் தெரிவித்தமை, ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு காண்பதற்கு உடன்பட்டமை ஆகிய விடயங்களிற்காகப் பிரதமரை 'வாங்கு வாங்கென வாங்கி' இருக்கின்றார் ஜனாதிபதி. விடுதலைப் புலிகள் தொடர்பாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடைப்பிடிக்கும் அணுகுமுறைக்காகவும் பிரதமரை அவர் மிகக் கடுமையாகச் சாடியுள்ளார். (18ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்கவில் பேச்சு நடத்துவதில் அரசாங்கம் தொடர்ந்தும் உறுதி!

கொழும்பு, செப்.10

போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பான பேச்சுகளை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நடத்தும் யோசனையை விடுதலைப் புலிகள் நிராகரித்துவிட்டனர். எனினும் அந்த இடத்தில் பேச்சுகளை நடத்துவதில் அரசாங்கம் இன்னும் உறுதியாகவே இருக்கிறது.

-இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும், சுகாதார அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா நேற்றுத் தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதுபற்றி மேலும் கூறியதாவது:-

போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை

(2ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வாளர் உட்பட இருவர் வவுனியாவில் சுட்டுக்கொலை!

### நேற்றுப் பகல் இருவேறு சம்பவங்கள்

வவுனியா, செப். 10

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற இரு வெவ்வேறு சம்பவங்களில் இராணுவப் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் ஒருவரும் புளொட் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

பகல் 11.30 மணியளவில் வவுனியா, 2ஆம் குறுக்குத் தெருவில் வைத்து இராணுவப் புலனாய்வுத் துறை உறுப்பினரான மொகமட் ராபீக் (வயது 41) என்ற நபர் சுட்டுக் கொல்லப்பட்டார். சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் இனந்தெரியாதோரால் இவர் சுடப்பட்டார்.

இவரது உடம்பில் 9 சூட்டுக் காயங்கள் காணப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்

(2ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய சமஷ்டி முறையைப் போன்றே இலங்கையிலும் அதிகாரப் பங்கீடு!

## சுதந்திரக் கட்சி அதைத்தான் விரும்புகிறதாம்

கொழும்பு, செப்.10

இந்தியாவில் இருப்பது போன்ற சமஷ்டி ஆட்சிமுறையின்கீழேயே இலங்கையிலும் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். அதையே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விரும்புகிறது என்று கட்சியின் முக்கியஸ்தரும், அமைச்சருமான மங்கள சமரவீர நேற்றுத் தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டியில் உள்ள கிராமோதய சபையில் ஜே.வி.பியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டின்போதே அவர் இப்படித் தெரிவித்தார்.

அவர் இதுபற்றி அங்கு மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கிலே உள்ள இரண்டு தமிழ் கட்சிகளான ஈ.பி.டி.பியும், ஸ்ரீதரன் தலைமையில் இயங்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியினரும் தமது பூரண ஆதரவைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கியுள்ளனர். அதேவேளை, புலிகளில் இருந்து விலகிச்

(2ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வாசியிடமிருந்து வெளிநாட்டுப் பணம் இரத்மலானையில் சிக்கியது!


கொழும்பு, செப்.10

யாழ்ப்பாணத்தில் இருந்து விமானம்மூலம் கொழும்புக்கு கொண்டுவரப்பட்ட 75 லட்ச ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத் தாள்கள் இரத்மலானை விமான நிலையத்தில் கைப்பற்றப்பட்டன.

(18ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்





வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ்மொழிமூல அரச பாடசாலைகளில் இலங்கை ஆசிரிய சேவையின் 3-I ஆம் தரத்தில் நியமனம் செய்யப்பட்டவர்கள் தமது நியமனக்கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காக நேற்று யாழ். கல்வி வலயத்தில் கூடிநிற்பதை முதல் படத்திலும் நியமனக் கடிதத்தை வலயக்கல்வி அதிகாரிகளிடமிருந்து பட்டதாரி ஆசிரியை ஒருவர் பெறுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

*(படங்கள்:- பிரபா).*

# பட்டதாரி அரச சேவை உள்ளீர்ப்பில் நுண்கலைப் பட்டதாரிகள் புறக்கணிப்பு!

யாழ்ப்பாணம்,செப்.10

பட்டதாரிகளை அரச சேவையில் உள்ளீர்ப்புச் செய்யும் திட்டத்தில் நுண்கலைப் பட்டதாரிகள் புறக்கணிக்கப்படுவதாக பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் வேலையற்ற பட்டதாரிகளுக்குத் தொழில் வழங்குவதற்கென விண்ணப்பங்கள் கோரப்பட்டசமயம், இசைக் கலைமாணி, நாட்டியக் கலைமாணி பட்டதாரிகள் விண்ணப்பித்திருந்தனர். இதனையடுத்து அவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு, அவர்கள் நேர்முகப்பரீட்சைக்கும் அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆயினும் இவர்கள் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படாமல் புறக்கணிக்கப்பட்டனர். இதுதொடர்பாக நிதி அமைச்சுக்கும் கல்வி அமைச்சுக்கும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் முறைப்பாடு செய்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் அண்மையில் வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள அரச பாடசாலைகளிலுள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. இதற்கு விண்ணப்பித்த மேற்படி பட்டதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கும் அழைக்கப்பட்டிருந்தனர்.

தற்போது நியமனங்கள் வழங்கப்பட்ட பட்டதாரிகளின் பெயர்ப்பட்டியலில் தமது பெயர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன என நுண்கலைப்பட்டதாரிகள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர். (எ-202)

## சித்தமருத்துவம் குறித்த விழிப்புணர்வுச் செயலமர்வு

கிளிநொச்சி,செப்.10

சுதேச மருத்துவப் பாதுகாப்புச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட சித்த மருத்துவ விழிப்புணர்வு தொடர்பான செயலமர்வு ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு லங்கா ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியில் நடைபெறவுள்ளதால் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துச் சித்தமருத்துவ வைத்தியர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு சுதேச மருத்துவ பாதுகாப்புச் சபையினர் கேட்டுள்ளனர். (எ)

# பரந்தாமன் ஆச்சிரம கட்டடத் திறப்புவிழா

யாழ்ப்பாணம்,செப்.10

வல்லிபுர ஆழ்வார் ஆலய பரந்தாமன் ஆச்சிரம கட்டடத் திறப்புவிழா நாளை ஞாயிற்றுக்கிமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

கி.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ், வல்லிபுர ஆழ்வார் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் இ.அன்னலிங்கம், ஊர்காவற்றுறை மாவட்ட நீதிவான் பா.சுப்பிரமணியம், நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா ஆகியோர் கலந்துகொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், பருத்தித்துறை விசேட ஆணையாளர் சி.பசுபதி, ஆசிரியர் கருணாமூர்த்தி, வலி. கிழக்கு பிரதேசசபை விசேட ஆணையாளர் த.நடராஜா ஆகியோர் கலந்துகொள்வர். (எ-203)

## ஒன்றுகூட அழைப்பு

யாழ்ப்பாணம்,செப்.10

பட்டதாரி ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியும் நியமனம் கிடைக்காத அனைத்துப் பட்டதாரிப் பயிலுநர்களையும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலயத்தில் ஒன்றுகூடுமாறு பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் கேட்கப்பட்டுள்ளது. (எ-13)

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பெறுபேறு யாழ். வந்து சேரவில்லை

யாழ்ப்பாணம்,செப்.10

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த 7ஆம் திகதி இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட போதிலும் இதுவரை, யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்குப் பெறுபேறுகள் அனுப்பிவைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பெறுபேறுகள் யாவும் வலயக்கல்விப் பணிமனைகள் ஊடாக நேற்று சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு பரீட்சைத் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், நேற்றுமாலை வரை யாழ். மாவட்டப் பெறுபேறுகள் வந்து சேரவில்லை என்று யாழ். கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-13)

# அமைதி முயற்சியில் தலையிடுமாறு ஐ.நாவிடம் அரசு கோரவேயில்லை!

## அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

இலங்கையின் அமைதி முயற்சிகளில் தலையிடுமாறு ஐக்கிய நாடுகள் சபையிடம் இலங்கை ஒருபோதும் கோரவில்லையென்று அமைச்சரவைப் பேச்சாளரும், சுகாதார அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா நேற்றுத் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அமைச்சர் மேலும் கூறியதாவது:-

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்ட பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை பற்றி ஐக்கிய நாடுகள் சபை உட்பட பல்வேறு சர்வதேச அமைப்புகளிடமும் இலங்கை அரசு விவரித்தது. அப்போது இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள், சிறுவர்களைப் புலிகள் படையில் சேர்த்தல் உட்பட பல விடயங்களைப் பார்வையிடுமாறு ஐ.நா. செயலரிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கமையவே இலங்கை வந்த ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதி அனைத்து அரசியற் கட்சிகளுடனும் பேச்சுகளை நடத்தினார். இதுதான் உண்மை நிலைமை. இதன்மூலம் இலங்கை அமைதி முயற்சிகளுக்கு அனுசரணை வழங்கிவரும் நோர்வேயின் பணிகளில் எந்த மாற்றமும் ஏற்படாது. இலங்கையின் நிலைமையினை ஐ.நாவின் கவனத்திற்குக் கொண்டு வருவதே அரசின் நோக்கமாகும்.

-இவ்வாறு அமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ)

## புலனாய்வாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனர். வீதியில் கிடந்து அவரது சடலத்தைப் பொலீஸார் மீட்டனர்.

இவரைச் சுட்டுக்கொன்றவர்கள் பற்றிய தகவல்கள் எவையும் உடனடியாகத் தெரியவரவில்லை. எனினும் விடுதலைப் புலிகளே இவரைக் கொன்றனர் என்று வழமைபோன்று படைத்தரப்புக் குற்றஞ்சாட்டியது.

வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணைகளை நடத்தினார்.

இந்தத் தாக்குதலை அடுத்து வவுனியாவில் கூடுதலான படையினர் குவிக்கப்பட்டு, பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது.

வவுனியா, திருநாவற்குளத்தில் 11.40 மணிக்கு நடந்த மற்றொரு சம்பவத்தில் புளொட் இயக்க முன்னாள் உறுப்பினரான கேதீஸ் என அழைக்கப்படும் வில்வராசா கோபால் (வயது 47) சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தில் மற்றொரு நபர் காயமடைந்தார்.

தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்றும் செல்வராசா பார்த்தீபன் என்பவரே சம்பவத்தில் காயமடைந்தவராவார். அவர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இவர்கள் இருவரும் வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த சமயம் திடீரென அவர்கள் முன்வந்த நபர் ஒருவர் அவர்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என்று பொலீஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகவும் வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலீஸாரையும் பணித்தார். (எ-க)

## புலிகளைத் தடை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளித்த பேட்டி ஒன்றில் வோல்ட்னர், மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தடைப்பட்டுப் போயுள்ள இலங்கையின் அமைதி முயற்சிகளை மீண்டும் உடனடியாக ஆரம்பிக்கும் வகையில் அரசுடன் பேசுவதற்கு விடுதலைப் புலிகள் முன்வரவேண்டும்.

இலங்கையில் தொடரும் வன்முறைகளைக் கருத்தில்கொண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தமது நாடுகளில் தடைசெய்வது பற்றி ஐரோப்பிய நாடுகள் சிந்திக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து விடுதலைப் புலிகளின் உயர் மட்டத்துடன் பேச்சுகளை நடத்துவதற்கும் நாம் திட்டமிட்டுள்ளோம். அவர்களுக்கு எம் சார்பில் முக்கியமான செய்திகள் வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் பேச்சு மேசைக்குத் திரும்பவேண்டும்.

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தம் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அது நடைமுறைப்படுத்தப்படுவதையே நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றோம். இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்கும் ஐரோப்பிய ஒன்றியம் கண்காணிப்பாளர்களை அனுப்பவுள்ளது.

- இவ்வாறு ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் மேலும் கூறினார்.

ஐரோப்பிய ஒன்றியத்திற்குத் தற்போது தலைமை வகித்துவரும் பிரிட்டன் ஏற்கனவே விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

புலிகளைத் தடைசெய்யும் விடயத்தில் பிரான்ஸ் உட்பட வேறு சில நாடுகள் தீவிரம் காட்டுகின்றன. அவ்வாறு செய்வது இலங்கையின் அமைதி முயற்சிகளை வெகுவாகப் பாதிக்கும் என்று ஒன்றியத்திலுள்ள வேறு சில நாடுகள் கருதுகின்றன. இதனால், புலிகள் மீது தடை விதிப்பதை விடுத்து அவர்களுக்கு அழுத்தங்களைக் கொடுக்கலாம் என அவை வலியுறுத்துகின்றன. எதிர்வரும் ஐரோப்பிய ஒன்றியக் கூட்டத்தொடரில் இந்த விடயம் பற்றித் தீவிரமாக ஆராயப்படும் என்றும் தெரிகிறது. (எ-க)

## இந்திய சமஷ்டி முறையைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற கருணாவின் ஆதரவாளர்களும் புலி கள் மீது வெறுப்புக் கொண்டுள்ளனர். அவர்களும் நிச்சயமாகப் பிரதமருக்கே தமது

**வாக்கை அளிப்பர்**

ஏற்கனவே முஸ்லிம் காங்கிரஸில் இருந்து வெளியேறி அரசில் அமைச்சர்களாக இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களது ஆதரவாளர்களின் வாக்குகளும் எமக்கே கிடைக்கும். எனவே, 60 வீதமான வாக்குகளைப் பெற்று பிரதமர் இலகுவாக ஜனாதிபதியாகிவிடுவார். ஐ.தே.க. செய்யும் எந்த பிரசாரமும் மக்கள் மத்தியில் எடுபடாது.

ஐ.தே.கவுக்கும் புலிகளுக்கும் இடையில் நெருங்கிய உறவுகள் இருந்துவருகின்றன. ஜே.வி.பியினருக்கும் பிரதமருக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி ஒருமணிநேர இடைவெளியில் கட்டுநாயக்காவில் பேச்சு நடத்தும் யோசனையைப் புலிகள் நிராகரித்துள்ளனர்.

அதேசமயம், கட்டுநாயக்க விமான நிலையத்தில் குண்டுபுரளியும் கிளம்பியுள்ளது.

புலிகள் இதுவரை தமது தனிநாட்டுக் கோரிக்கையிலிருந்து பின்வாங்கவில்லை. பேச்சுகள் நடத்துவதற்கு ஒரு அடியேனும் அவர்கள் முன்வரவில்லை. எனவே, புலிகளுடன் அச்சமின்றிப் பேசுவதற்கான ஒரு சூழல் ஏற்படவில்லை.

இனப்பிரச்சினையை ஒருபயங்கரவாதப் பிரச்சினையாக உலகுக்கு காட்டிய ஜே.ஆர். இலங்கை - இந்திய உடன்படிக்கையின்மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண முற்பட்டார். அது தோல்வியில் முடிந்தது. புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கி அவர்களுக்கு பிரேமதாச ஊக்கமளித்தார். பின்னர் அவர் புலிகளாலேயே கொலைசெய்யப்பட்டார். புலிகள் தமது கொள்கைகளை இதுவரை மாற்றிக் கொள்ளவில்லை.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சியைக் கைப்பற்றியவுடன் நியாயமான தீர்வொன்றை முன்வைத்தார். அதற்கும் புலிகள் இசையவில்லை. புலிகள் தமது உண்மையான நிலைப்பாட்டை தெரிவித்து நல்லெண்ணத்துடன் செயற்பட முன்வரவேண்டும்.- என்றார் அவர்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, சுசில் பிரேமஜயந்த, நிமால் சிறிபால டி சில்வா, ஸ்ரீபதி சூரிய ஆராச்சி, ஜே.வி.பியின் சார்பில் ரில்வின் சில்வா, விமல் வீரவன்ஸ, நந்தன குணதிலக, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-க)




## கட்டுநாயக்கவில் பேச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செம்மையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நடத்தப்படவுள்ள பேச்சுகள் வெளிநாட்டில் இடம்பெறவேண்டுமென விடுதலைப் புலிகள் இதுவரை கூறிவந்தனர். இல்லையேல் கிளிநொச்சியில் பேச்சு நடைபெற வேண்டுமென அவர்கள் கூறினர்.

இந்நிலையில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இந்தப் பேச்சுகளை நடத்த முடியுமெனக் கருதிய நோர்வே அனுசரணையாளர்கள் அதற்கு அரசின் சம்மதத்தைக் கோரினர். அரசும் சம்மதம் தெரிவித்தது. ஆனால், அதனை விடுதலைப் புலிகள் நிராகரித்துவிட்டனர். இதற்கான காரணம் என்னவென்பதுதான் எமக்குப் புரியவில்லை.

வெளிநாடொன்றுக்குச் செல்வதாயின் புலிகள் இந்த விமான நிலையத்தினூடாகவே செல்ல வேண்டும். அதற்காக 8 முதல் 9 மணிநேரம் வரை அவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தங்கியிருக்க வேண்டியுள்ளது. அப்போது அவர்களின் பாதுகாப்பு உறுதியாகத்தானே இருக்கிறது? எனவே, பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பேச்சை வெளிநாடு ஒன்றில் நடத்தவேண்டுமெனப் புலிகள் கூறுவதில் அர்த்தமில்லை

இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்காக நோர்வே அனுசரணையாளர்களூடாக அரசு தொடர்ந்து கருத்துப் பரிமாற்றங்களைச் செய்யும். -இவ்வாறு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேலும் கூறினார். (எ-க)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## அத்துமீறும் அனுசரணைப் பணி

போர்நிறுத்தம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்த ஏற்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்து நேரடியாகப் பேசுவதற்கு இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் இணங்கியுள்ளனர். ஆனால், பேச்சை எங்கு நடத்துவது என்பதில் தொடர்ந்தும் இழுபறி நீடிக்கின்றது.

அது தொடர்பாக ஓர் இடத்தைச் சிபாரிசுசெய்து, அதனைப் பகிரங்கமாக வெளிப்படுத்தி, அனுசரணைத் தரப் பான நோர்வே கடந்த புதனன்று அறிக்கையொன்றை வெளி யிட்டது.

அனுசரணைத் தரப்புக்குரிய இராஜதந்திரப் பணிக்குப் பொருத்தமற்ற விதத்தில் - ஒரு தரப்பு மீது வேண்டுமென்றே அழுத்தத்தைப் பிரயோகிக்கும் வகையில் - இந்த அறிக்கை அமைந்திருந்ததைத் தமிழர்கள் விசனத்தோடு கவனத்தில் எடுத்திருக்கின்றார்கள் என்பதை இங்கு பதிவுசெய்ய விரும்புகிறோம்.

தமிழர்களின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளை அழுத்தம் பிரயோகித்து அடிபணியவைக்க முடியாது என் பது கடந்த இரண்டு தசாப்தகால இலங்கை வரலாறு அறிந்த எவருக்கும் தெளிவாகப் புரிந்த விடயம். அது அனு சரணைத் தரப்புக்குப் புரியாமல் போனது விந்தையே.

எங்கே பேசுவது என்பது குறித்து அரசும் புலிகளும் தத்தமது கருத்தைத் தெளிவாக எடுத்துரைத்த நிலையில் - கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையமே பேச்சுக்கு ஒரேயொரு சாத்தியமான இடம் எனத் தான் தீர்மானித் திருப்பதாக நோர்வே அறிவித்தமை தமிழர் தரப்பை எள்ளி நகையாடும் செயலாகவும் பார்க்கப்படக் கூடியது என்ப தைச் சுட்டிக்காட்டுகின்றோம்.

இலங்கை அரசின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இந்தப் பேச்சுகளை நடத்தமுடியாது என்று புலிகள் தெளிவுபடத் தெரிவித்துள்ள பின்னணியில் -

வெளிநாட்டில் பேச்சை நடத்துவதற்குச் செல்வதற்காக கட்டுநாயக்கா விமானநிலையம் ஊடாகப் பயணிக்கப் புலிகள் தயார் என்பதை மட்டும் ஒரு காரணமாக வைத்துக் கொண்டு -

கட்டுநாயக்காவில் பேச்சை நடத்தலாமா என்ற விடயம் தொடர்பாகப் புலிகளின் நிலைப்பாட்டை, தமது அனு சரணைப் பணிக்குரிய பொறுப்புடன் இராஜதந்திர வழியில் அவர்களின் தலைமையுடன் தொடர்புகொண்டு அவர்களிடம் கேட்டறியாமல் - அதற்கான இணக்கத்தை அவர் களிடம் பெறாமல் -

கட்டுநாயக்காவே சாத்தியமான இடம் எனத் தாம் கருதுவதாக நோர்வே ஒருதலைப் பட்சமாகப் பகிரங்க அறிக்கை விடுப்பது நோர்வேயின் அனுசரணைப் பணிக்குப் பொருத்தமான - [illegible]கைமையான - நடவடிக்கையல்ல.

கதிர்காமர் படுகொலையை அடுத்து தென்னிலங்கை யில் நோர்வே அனுசரணையாளர்களுக்கு எதிராகக் கிளம்பி யுள்ள உணர்வலைகள் காரணமாகவும் -

நோர்வேயின் தற்போதைய அரசுத் தலைமையினால் சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் பொறுப்பேற்கப்பட்ட தற்போதைய இலங்கை அமைதி முயற்சிகள் இக்காலத்தில் உரிய பலன் எதையும் தரவில்லை என்ற நிலையில், எதிர் வரும் 13ஆம் திகதி நோர்வேயில் நடக்கவிருக்கும் பொதுத் தேர்தல் வாக்களிப்புக்கு முன் இந்தப் பேச்சு முயற்சியில் ஏதேனும் ஆக்கபூர்வமான பெறுபேறைக் காட்டியாகவேண் டும் என்ற அவசரத்தில் - அந்தரத்தில் - தொக்கி நிற்கும் நோர்வேயின் தற்போதைய அரசுத்தலைமையின் முனைப் புக் காரணமாகவும் -

இவ்வாறு தமிழர் மீது அழுத்தம் பிரயோகிக்கும் அறிக்கை நோர்வேத் தரப்பினால் வெளியிடப்பட்டிருக்கக் கூடும்.

அது மட்டுமல்ல. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே ஆகிய இலங்கை விவகாரத்தின் இணைத் தலைமை நாடுகளின் அதிவிசேட கூட்டம் ஒன்றை இம்மாதம் 19ஆம் திகதி நியூயோர்க்கில் கூட்டுவதற்கு நோர்வே வெளி விவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் அழைப்பு விடுத்திருக் கின்றார் என்று அந்த அறிக்கை யில் கூறப்பட்ட விவகாரமும் தமிழர் தரப்புக்கு அழுத்தம் பிரயோகிக்கும் மற்றொரு எத்தன மாகும்.

அடுத்த மூன்று நாள்களில் - செவ்வாயன்று - நோர்வே பொதுத்தேர்தல். அதற்குப் பின்னர் ஜான் பீற்றர்ஸன் அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சராக இருப்பாரோ - இலங்கை அனுசரணைப் பணியைக் கையாளும் பொறுப்பு அவரிடம் நீடிக் குமா - என்பதெல்லாம் சந்தேகமே.

ஆனால், அதற்குப் பின்னர் ஆறுநாள்கள் கழித்து இணைத் தலைமை நாடுகள் கூட்டத்தை அவசரமாக அவர் கூட்டுகின்றார் என இப்போது ஒரு பூச்சாண்டி காட்டப்படு கின்றது.

பேச்சுக்கு இணங்கிய புலிகள் எப்படியாவது பேச்சு நடத்தும் இடத்தைத் தீர்மானிக்கவும் கீழ் இறங்கிவந்து இணங்கவேண்டும். இல்லையேல், அவர்களுக் கெதிராக மோசமான நடவடிக்கை எடுக்கக்கூடியதான ஆயத்த நிலையில் இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் - அதுவும் அமெரிக்காவில் - கூடுவதற்குத் தயாராக காத்திருக்கின்றது என்று காட்டி மிரளவைக்க முயற்சிக் கப்படுவதாகவே இச்செயற்பாடு தோற்றுகின்றது.

தனக்கு எதிரான தென்னிலங்கை உணர்வலைகளைச் சமா ளிக்கவும் -

இலங்கை அமைதி முயற்சிகளில் தனது அரசு ஏதோ வெட் டிப் பிடுங்கி, முன் நகர்வுகளை ஏற்படுத்தியுள்ளது எனத் தனது நாட்டுத் தேர்தல் சமயத்தில் தனது மக்களுக்குக் காட்டவும் நோர்வே மேற்கொண்ட இந்தக் காய் நகர்த் தலுக்கு நல்ல பதிலடி தந்திருக்கிறார் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன்.

"போக்குவரத்திற்காகத் தரித்துச் செல்வது வேறு, பேச்சு நடத்துவதற்கான சூழல் என்பது வேறு. பிணக்கிற்குரிய இரு தரப்புகள் பதற்றமான விடயங்கள் குறித்து பேசித்தீர்ப் பதற்கு சுமுகமான - இயல்பான - சூழல் வேண்டும். நெருக்குவாரங்கள், இறுக்கங்கள், பதற்றங்கள் உள்ள இடங்களில் இத்தகைய சிக்கலான விடயத்தை எப்படிப் பேசித்தீர்க்க முடியும்?" - என்று நோர் வேத் தரப்பிடம் காட்டமாகக் கேட்டிருக்கின்றார் சு.ப.தமிழ்ச் செல் வன்.

வெளிநாட்டுக்குச் செல்வதற்கு வேறு இணக்கமான - பொருத்தமான - வழிமுறை இல்லாததால், பதற்றம், இக் கட்டு, நெருக்குவாரம் ஆகியவற்றுக்கு மத்தியில் - வேறு மார்க்கமின்றி - கட்டுநாயக்கா ஊடாகப் புலிகள் பயணிக் கின்றனர்.

அதற்காக கட்டுநாயக்காதான் பேசுவதற்குப் பொருத் தமான இடம் என நோர்வே ஒரு தலைப்பட்சமாக பகிரங்க மாக அறிவித்திருப்பது தமிழர் தரப்பை எள்ளிநகையாடும் போக்கை மட்டு மல்ல, இவ்விடயத்தில் நோர்வேயின் இயலாமையையும் கூட அப்பட்டமாக எடுத்துக்காட்டுகின்றது.

# காணாமற் போனோரை இறந்தவர்களாக பதிவு செய்யும் நடைமுறை மீண்டும் அமுல்!

யாழ்ப்பாணம்,செப்.10

காணாமற்போனேவர்களை இறந்தவர்களாகப் பதிவுசெய்வதற்கென தற்காலிக ஏற்பாடுகள் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில் இதற்கென சட்டமூலம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது என்றும் - இச்சட்டம் 3 ஆண்டு காலத்திற்கு நடைமுறையில் இருக்கும் என்றும் - வடக்கு- கிழக்கு மாகாண மேலதிகப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவம் ஐயர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பயங்கரவாத அல்லது நாசகார செயற்பாட்டினாலோ, குடியமைதிக் குலைவினாலோ ஒருவர் காணாமற் போயிருந்தால் அவர் காணாமற்போய் ஒரு வருடத்தின் பின் அவரது இறப்பைப் பதிவுசெய்யலாம்.

இதற்கென ஏற்கனவே தற்காலிகச் சட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு அது இடைநிறுத்தப்பட்டது. பதிவுசெய்வதற்கெனப் பலர் முறைப்பாடுகளைத் தெரிவித்ததையடுத்து மீண்டும் இச்சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

காணாமற்போனவர்களை இறந்தவர்களாகப் பதிவுசெய்வதற்கு அவரின் நெருங்கிய உறவினர், குறிப்பிட்ட காணாமற்போன நபர் கடைசியாக வசித்த அல்லது நிரந்தரமாக வசித்த கிராமசேவகர் ஊடாக விண்ணப்பிக்க முடியும்.

இது தொடர்பான சுற்றறிக்கைகள் பதிவாளர் நாயகத்தால் சகல பிரதேச செயலர்களுக்கும் அடுத்தவாரம் அனுப்பிவைக்கப்படவுள்ளன என மேலதிகப் பதிவாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (த-202-203)

# உள்ளூராட்சி வார நிகழ்வுகள் நாளை மறுதினம் ஆரம்பம்!

உள்ளூராட்சி அமைச்சும் மாகாண சபைகளும் இணைந்து வருடாவருடம் நடத்திவரும் 'உள்ளூராட்சி வாரம்' இம்முறை நாளைமறுதினம் 12 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

"மக்களின் உயிர்ப்பான பங்குபற்றுதலுடன் கூடிய மக்கள் நேய உள்ளூராட்சி நிர்வாகம்" என்பது இவ்வாண்டின் தொனிப்பொருளாகும்.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நாட்டிலுள்ள மாகாண சபைகள் பலதரப்பட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லவிருக்கின்றன.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகளின்பங்கு பற்றி மக்களுக்கு அறிவூட்டுவதே இவ்வாரத்தின் நோக்கமாகும்.

அடுத்து உள்ளூராட்சி மன்ற தேர்தல் அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறுமென உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன் கூறினார். உள்ளூராட்சி வாரத்தின் போது சுகாதார முகாம், அபிவிருத்தித் திட்டங்கள், கல்வித் திட்டங்கள் போன்றன செயற்படுத்தப்படலாம் எனக் கூறப்பட்டுள்ளது. (த-64)

# சுனாமியால் இறந்தோர் குறித்த தரவுகளில் பல முரண்பாடுகள்

### தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் சுட்டிக்காட்டு

வலி.மேற்கு,செப்.10

யாழ்.மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் இறந்தவர்களென சில கிராம அலுவலர்களினால் தேர்தல் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளுக்கும் சில பிரதேச செயலர்களினால் செயலகத்திற்கு அனுப்பட்ட தரவுகளுக்கும் இடையே வேறுபாடுகள் இருப்பதாக யாழ். மாவட்டத் தேர்தல் திணைக்கள தெரிவத்தாட்சி அலுவலர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத் தேர்தல் திணைக்களம் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. யாழ். தேர்தல் திணைக்களத்தினரால் 2004ஆம் ஆண்டுக்கான தேர்தல் இடாப்பில் பதியப்பட்டுள்ள வாக்காளர்களுள் இறந்தவர்கள், ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக காணாமற்போனவர்கள் பற்றிய விவரங்கள் கிராம அலுவலர்கள் மூலம் திரட்டப்படுகின்றது.

இது தொடர்பான சுற்றறிக்கையொன்றினை யாழ்.மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் சகல கிராம அலுவலர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

இச்சுற்றறிக்கையில் முன்னைய தேர்தலின்போது அனுப்பிய அறிக்கைகளில் இறந்துபோனவர் எனக் குறிப்பிட்ட சிலர் உயிரோடு இருந்து முறைப்பாடு செய்த சம்பவங்களும் உண்டு என்பதையும் ஆழிப்பேரலையால் இறந்தவர்களென சில கிராம அலுவலர்களினால் தேர்தல்கள் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளுக்கும் சில பிரதேச செயலர்களினால் செயலகத்திற்கு அனுப்பப்பட்ட தரவுகளுக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. (த-175)

## பேராயர் ஜெபநேசனுக்கு தென்மராட்சியில் கௌரவம்

தென்னிந்தியத் திருச்சபையின் ஓய்வுபெற்ற பேராயர் அருட்திரு. சு.ஜெபநேசன் அடிகளாரின் பாராட்டு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் சாவகச்சேரி தென்இந்தியத் திருச்சபை வளாக மண்டபத்தில் சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபைப் போதகர் வண ரி.எச்.வசந்தகுமார் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் காலை தென்னிந்தியத் திருச்சபை தேவாலயத்தில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து வணக்கத்திற்குரிய ஜெபநேசன் அடிகளார் குடும்பத்தினர் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி வளாகத்தில் இருந்து ஊர்வலமாக தென்னிந்தியத் திருச்சபை வளாக மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டுப் பாராட்டு உரைகள் இடம்பெற்றன.

நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், பேராயர் அருட்திரு. சு.ஜெபநேசனை பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார். (ப-31)

## விபத்தில் இளைஞர் படுகாயம்!

கைதடி,செப்.10

வீதியில் சென்றுகொண்டிருந்த ஓட்டோ எதிரே வந்த வாகனத்துக்கு வழி விடுகையில் திடீரெனத் தடம்புரண்டதில் அதனை ஓட்டிச் சென்ற இளைஞர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை நாவற்குழிப் பாலத்தடியில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் நாவற்குழி செல்வநகரைச் சேர்ந்த நவரத்தினம் பிரசன்னா (வயது 19) என்பவரே கால் முறிந்த நிலையில் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (ஐ-75)

## நாளை

*ஆவணி 26*
*ஞாயிற்றுக்கிழமை*
*12.09.2005*
*திதி: அட்டமி*
*பின்னிரவு 12.17 வரை*
*நட்சத்திரம்: கேட்டை*
*முன்னிரவு 10.58 வரை*
*சுபநேரம்: 09.03 - 10.33*
*ராகுகாலம்: 04.33 - 06.03*
*(யாவும் பழைய நேரப்படி)*

# சர்வதேச புகைப்படப் போட்டி நவம்பர் மாதம் கொழும்பில்

### ஆர்வமுள்ள அனைவரும் பங்கேற்கலாம்

தேசிய புகைப்படக் கலைக்கழகம் 55 ஆவது ஆண்டு விழாவையொட்டி சர்வதேச புகைப்படப் போட்டியையும் கண்காட்சியையும் எதிர்வரும் நவம்பர் 12-15ஆம் திகதிகளில் கொழும்பு கலாபவனத்தில் நடத்தவுள்ளது.

உலகத்தின் எந்தப்பாகத்திலுமுள்ள புகைப்படக் கலைஞர்கள் இப்போட்டிக்கு விண்ணப்பித்துக் கலந்துகொள்ள முடியும். இக்கழகம் இலங்கையில் 13 ஆவது தடவையாக இச்சர்வதேச புகைப்படப் போட்டியை நடத்துவது குறிப்பிடத்தக்கது. (த-64)

# வெளிமாவட்ட வாக்காளர் இடாப்புகள் யாழ். செயலகத்தில் பார்வைக்கு!

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ்.மாவட்டத்தில் பணிபுரியும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்,தமது வாக்காளர் பதிவை உறுதிப்படுத்துவதற்காக யாழ்.மாவட்டச் செயலகத்தில் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். செயலகப் பதிவாளர் திணைக்களத்தின் கீழ்த்தளத்தில் இதற்கென வாக்காளர் பதிவுப் புத்தகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இதற்கான ஏற்பாட்டைத் தேர்தல் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த பொலீஸார் மற்றும் இராணுவத்தினர் கடமையிலுள்ளனர். இவர்கள் அஞ்சல் மூலமான வாக்களிப்பை மேற்கொள்வதற்கும் தமது வாக்காளர் பதிவை உறுதிப்படுத்துவதற்கும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த ஏனைய உத்தியோகத்தர்களின் நன்மை கருதியும் இந்த விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (3-202-203)

# மின்சார சபையின் புதிய அலுவலகம் 16ஆம் திகதி தொடக்கம் செயற்படும்

யாழ்ப்பாணம்,செப்.10

கணனிமயப்படுத்தப்பட்ட இலங்கை மின்சார சபையின் யாழ். அலுவலகம் எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

அன்றையதினம் முற்பகல் 10 மணிக்கு இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொதுமுகாமையாளரால் இந்தப் புதிய கட்டடத் தொகுதி திறந்துவைக்கப்படவுள்ளது எனவும் -

அன்றுமுதல் இக்கட்டடத் தொகுதியில் மின்கட்டணத்தைக் காசோலையாகச் செலுத்த முடியும் என்றும் -

புதிய கட்டடத் தொகுதியில் பணிகள் பூரணமான ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பின்னர் மின் கட்டணத்தைப் பணமாக ஏற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் - வடமாகாண மின்சார சபைக் கணக்காளர் சு.நாகராஜா தெரிவித்தார்.

யாழ். மனோகரா திரையரங்கச் சந்திக்கு அருகில் இலங்கை மின்சார சபையின் யாழ். அலுவலகத்தின் புதிய கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (த-12)

## உதயவாக்கு

**நாம் மற்றவர்களைப் போல் அறிவாளிகளாக இருக்கலாம். ஆனால் அவர்களைப் போல் ஞானிகளாக இருக்கமுடியாது.**

– மைக்கேல் டி மாண்டேய்ன்.


5 ஆவது உலக சேக்கிழார் மாநாடு
5 th INTERNATIONAL CONFERENCE ON SEKKIZHAR
மேன்மை கொள் சைவ நீதியை உலகமெல்லாம்
அறியச் செய்ய சேக்கிழாருக்கு இலங்கையில்
முதல் விழாவாக நடைபெறுகின்றது
காலம்: இன்று (10.09.2005), நாளை (11.09.2005)
இடம் : இராம கிருஷ்ண மண்டபம், வெள்ளவத்தை, கொழும்பு - 06
நேரம் : காலை 8 மணியிலிருந்து மாலை 8.30மணிவரை
"இன்பமே சூழ்ந்து எல்லோரும் வாழ
இறையருள் வேண்டி ஒன்று கூடுவோம்"
இந்து சமய அலுவல்கள் அமைச்சு
Ministry of Hindu Religious Affairs
(C-44927) (25-18)

## புதுக்குடியிருப்பு மாநாட்டுக்கு ஏற்பாடுகள் மும்முரம்!

# பார்க்கும் இடமெல்லாம் எழுச்சிக் கோலம்; திரும்பும் திசையெங்கும் உரிமை முழக்கம்

புதுக்குடியிருப்பு, செப்.10

புதுக்குடியிருப்பில் எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள தமிழர் உரிமைப் பிரகடன மாநாட்டுக்கான ஏற்பாடுகள் முல்லைத்தீவு மாவட்டம் எங்கும் களைகட்டத் தொடங்கியிருக்கின்றன.

மாவட்டத்தின் சகல பகுதிகளும் எழுச்சிக் கோலம் பூண்டிருக்கின்றன.

தமிழீழ அரசை அங்கீகரிக்குமாறு சர்வதேசத்திடம் கோரும் இந்த மாநாட்டுக்கு மக்களை அணிதிரண்டு அழைக்கும் வகையில் ஒலிபெருக்கி வாகனங்கள் மூலம் அறை கூவல் விடுக்கப்படுகிறது.

எழுச்சிப் பாடல்களும் உரிமை முழக்க வசனங்களும் திரும்பும் திசை எங்குமே ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

வீதிகள், பிரதான சந்திகள், வீடுகள், கடைகள், பொது நிறுவனங்கள் என்பன சிரமதானம் செய்யப்பட்டு சுத்தமாக்கப்படுகின்றன.

அலங்கார வளைவுகள் அமைத்தல், எழுச்சிக் கீதங்களை இசைக்க விடுதல், உணர்வு பூர்வமான வாசகங்கள் அடங்கிய பதாதைகள் கட்டுதல் போன்ற செயற்பாடுகளில் பொது மக்கள் ஆர்வத்துடன் ஈடுபடுவதைக்காண முடிகிறது.

ஆங்காங்கே, மக்கள் சந்திப்புகள், கலந்துரையாடல்கள் என்பன நடத்தப்படுகின்றன.

மூத்தோர்கள், புத்திஜீவிகள், சமூகநலன் பேணும் நிறுவனப் பிரதிநிதிகள், பாடசாலை அதிபர்கள் இவற்றை முன்வந்து நடத்துகின்றனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேசம் மக்கள் எழுச்சியால் புதுப் பொலிவு பெற்றுள்ளது.

அரங்கச் செயற்பாட்டு ஒத்திகைகளிலும் மக்கள் பங்களிக்கின்றனர்.

முல்லைத்தீவுப் பிரதேசமும், மக்கள் எழுச்சியால் களைகட்டியுள்ளது. பிரதேச செயலர் பிரிவு ரீதியாக ஆரம்ப முன்னோடிக் கலந்துரையாடல்கள் ஒழுங்கமைக்கப்பட்டு பிரதேச செயலர்களின் தலைமையின் கீழ் நடைபெற்று வருகின்றன.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்கான கலந்துரையாடல் கடந்த 26 ஆம் திகதி புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில், பிரதேச செயலர் தயானந்தா தலைமையில் நடைபெற்றது.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்கான கலந்துரையாடல் கடந்த 27 ஆம் திகதி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் தி.நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்கான கலந்துரையாடல் கடந்த 27 ஆம் திகதி மாந்தைப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் மா.ஜெகூ தலைமையில் நடைபெற்றன.

இந்தக் கலந்துரையாடல்களில் முல்லைத்தீவு மாவட்ட எழுச்சிப் பேரவைத் தலைவரும் கரைதுரைப் பற்றுப் பிரதேச சபை விசேட ஆணையாளருமான இ.கிருஷ்ண பிள்ளை, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்ணம், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் சி.வேதவனம், முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகள் நிகழ்த்தினர்.

பிரதேச செயலர் பிரிவு மட்டத்திலும் கிராமமட்டத்திலும் மக்களை அணி திரட்டும் குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டன.

கிராம சேவையாளர்கள், பாடசாலை அதிபர்கள், பிரதேச செயலர் பணிமனை உத்தியோகத்தர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச, கிராம மட்டப் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இக் குழுக்களில் இடம்பெறுகின்றனர். (த-353-341-204)

# தமது உரிமைகளைத் தாமே நிர்ணயிக்கும் காலம் தமிழ்மக்களுக்கு நெருங்கிவிட்டது

## சர்வதேசத்துக்கு அதனை வெளிப்படுத்த அழைக்கிறார் முகுந்தன்

எமது மக்கள் தமது உரிமையைத் தாமே நிர்ணயிக்கும் காலம் நெருங்கிவிட்டது. கடந்த காலங்களில் யுத்தத்திற்காக அணி திரண்டவர்கள் இன்று சமாதானத்திற்காக ஒருமுறை குரல் எழுப்ப வேண்டும்.



எங்களின் குரல்களைச் சர்வதேசம் கேட்டு ஒரு முடிவிற்கு வரட்டும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன். எதிர்வரும் 14 ஆம் திகதி புதுக்குடியிருப்பில் நடைபெறவுள்ள எழுச்சி நிகழ்வு தொடர்பாக நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த மூன்றரை வருட சமாதானம் எமது மக்களுக்கு எதனையும் பெற்றுத்தரவில்லை. அதனால் போரைத் தொடங்குமாறு எமது தேசியத் தலைவருக்கு ஆலோசனை கூறுகிறார்கள். இந்தச் சமாதானக் காலத்தில் எமது மக்களும் விடுதலைப் புலிகளும் இழந்தவை ஏராளம். ஆழிப்பேரலையால் அழிவுகள் ஏற்பட்டன. எமது மாவட்ட மக்கள் யுத்தத்தினாலும் ஆழிப்பேரலையினாலும் இழப்புகளை வைத்துக்கொண்டு எம்மக்கள் மீது சிறிலங்கா அரசு போரைத் திணிக்க முனைகிறது.

தமிழர்களுக்கு எதனையும் தர சிறிலங்கா தயாரில்லை. சிங்களம் எங்கள் மீது பேரினவாதத்தைக் காட்டுகிறது. எமது போராட்டத்தினை நசுக்க முனைகிறது. வெளிநாடுகளின் முன் புலிகள் இயக்கத்தினை ஒடுக்கி அடக்கி எமது நியாயங்களை நசுக்க முனைகிறது. எமது மக்கள் விழிப்பாக இருக்கிறார்கள்; இருக்கவேண்டும்.

உலகம் சற்று ஒதுங்கி நிற்கிறது. அவர்களுக்குத் தேவை சிறிலங்காவின் வர்த்தகம், முதலீடு, சிறிலங்கா அமைதியாக இருந்தால் போதும், எமது போராட்டம் பற்றி நாம் நசுக்கப்படுகிறது குறித்து அவர்களுக்கு அக்கறையில்லை.

இன்று மக்கள் எழுச்சி கொண்டு விட்டார்கள். அவர்கள் சர்வதேச சமூகத்தில் எமது போராட்ட நியாயங்களை எடுத்துக் கூறுகிறார்கள்.

இன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் புத்திஜீவிகள், அறிஞர்கள், சிறந்த எழுச்சிபிரகடனத்தைச் செய்ய முன்வந்துள்ளார்கள். அதற்கு அவர்களே குழுக்களைச் அமைத்து செயற்படுகிறார்கள். இதற்காகவே இந்தப் பிரதேச மக்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டரங்கில் ஒன்று திரள உள்ளனர். இது ஒட்டு மொத்தமாகத் தமிழினத்தின் வெளிப்பாடு- என்றார். (த-352-202)

### கல்வி முகாமைத்துவ பிரதிப்பணிப்பாளர் நியமனம்

வட்டக்கச்சி,செப்.10

கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தின் கல்வி முகாமைத்துவத்திற்கான புதிய பிரதிக் கல்விப் பணிப்பாளராக க.முருகவேல் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே இப்பதவியில் இருந்த க.வைரமுத்து ஓய்வுபெற்றுச் சென்றதையடுத்தே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக் கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த இவர் கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கிளிநொச்சி வலயத்தில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-405-203)

### 'தேடல்' ஒன்றுகூடல்

கிளிநொச்சி,செப்.10

மாதாந்த 'தேடல்' அறிவோர் ஒன்றுகூடல் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் 'கலை இலக்கியமும் சமூக மாற்றமும்' என்னும் பொருளில் ஆய்வாளர் எஸ்.திருநாவுக்கரசு (திருமாஸ்ரர்) உரை நிகழ்த்துவார். (த-204)




# மாணவருக்கான உணவுத்திட்டம்: நிதி வழங்கப்படவில்லை; சிரமம்

வட்டக்கச்சி,செப்.10

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் செயற்படுத்தப்பட்டுவரும் மாணவர்களுக்கான உணவு வழங்கல் திட்டத்திற்கான நிதி வழங்கப்படாமையால் பாடசாலை அதிபர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

உலக உணவுத்திட்டதின் கீழ் செயற்படுத்தப்படும் இத்திட்டத்திற்கான அரிசி மற்றும் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான மரக்கறி போன்ற செலவுகளுக்கான நிதி மாதந்தம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்ட போதிலும் கடந்த ஏப்ரல் மாதத்தின் பின்னர் இக்கொடுப்பனவுகள் வழங்கப்படாமையால் அதிபர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

ஏற்கனவே பளை, கண்டாவளை, பூநகரி கோட்டப்பாடசாலைகளில் செயற்படுத்தப்பட்டு வரும் இத்திட்டம் மூன்றாம் தவணையில் இருந்து கரைச்சிக் கோட்டப் பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில், இத்திட்டத்தைச் செயற்படுத்துவதில் அதிபர்கள் இடர்படுகின்றனர். இதுவிடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (த-405)




இலங்கை வங்கியின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு முல்லைத்தீவுக் கிளையில் 'பொன் அரும்பு' கணக்கினை ஆரம்பித்த சிறுவர்களுக்கு பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இலங்கை வங்கியின் வன்னிப் பிரதேச முகாமையாளர் ச.திருச்செல்வம் சிறுமி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் அருகில் முல்லைத்தீவு கிளை முகாமையாளர், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# நிகொட் திட்டத்தின் கீழ் முல்லையில் 200 வீடுகள்

புதுக்குடியிருப்பு, செப்.10

'நிகொட்' திட்டத்தின் கீழ் முல்லைத் தீவு மாவட்டத்தில் 200 வீடுகள் கட்டப்படவுள்ளன.

இத் தகவலை நிகொட் திட்ட முல்லைத்தீவு மாவட்டத் திட்டப் பணிப்பாளர் சி.இரகுநாதபிள்ளை தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 75 வீடுகளும், பாண்டியன்குளம் பிரதேச செயலர் பிரிவில் 50 வீடுகளும், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 70 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன. இதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-353-202)

# முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் புதிதாக விடுதிகள் அமைப்பு

புதுக்குடியிருப்பு, செப்.10

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் விடுதிகள், அவசர சிகிச்சைப் பிரிவு என்பன புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றின் திறப்பு விழா கடந்த 4 ஆம் திகதி மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி தர்மேந்திரா தலைமையில் நடைபெற்றது.

மங்கள விளக்கினை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஜேர்மன் நாட்டு வைத்திய கலாநிதி பவுல், வைத்திய அதிகாரி சிவசிவ, முல்லைத்தீவு பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் ஆகியோர் ஏற்றினர்-

தமிழீழத் தேசியக் கொடியினை முல்லைத்தீவு மாவட்ட கடற்புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் மா.ரங்கன் ஏற்றினார்.

பெயர்ப் பலகையினைப் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராசா திரைநீக்கம் செய்துவைத்தார்.

விடுதியினை முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார்.

மகப்பேற்று விடுதியினை வைத்திய கலாநிதி க.விக்னேஸ்வரன் திறந்து வைத்தார்.

சிறுவர்களுக்கான விடுதியினை வைத்திய கலாநிதி சுதர்சன் திறந்து வைத்தார்.

கதிரியக்க சிகிச்சைப் பிரிவினை நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் திறந்து வைத்தார்.

தொடர்ந்து சிறப்புரைகள் இடம் பெற்றன. (த-353-204)

உ
சிவமயம்

# புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி

## நிறுவுநர் நினைவுச் சிறப்பிதழ் - 2005



### தர்மகர்த்தா சபைத் தலைவரின் செய்தி

கல்விக்கண்களைத் திறக்கவெனக் கிராமந் தோறும் அமைக்கப்பட்ட பாடசாலைகளில் அதுவும் பல்கலைக்கழக புகுமுக வகுப்புடன் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி முதலிடம் வகிக்கிறது. இத்தகைய கல்வித்தானத்தைச் செய்த வள்ளல் திரு.மழவராயர் கந்தையா வையத்துள் வாழ் வாங்கு வாழ்ந்தவர். இப்பாடசாலையில் யாழ்ப் பாண மாவட்டத்தின் ஏனைய பகுதிகளான வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிப் பிள்ளைகள் உயர்தர வகுப்பு கற்றுப் பல்கலைக்கழங்களில் புகுந்தமையை புள்ளி விவரம் காட்டுகிறது. பல மாணவர்களின் வாழ்க் கைக்கு வழிகாட்டியாக அமைந்த இக்கல்லூ ரியையும் தாபகரையும் போற்றிச் செய்தி வழங்குவதில் பெருமையடை கின்றேன்.

**வே.தி.செல்வரத்தினம்**
வலயக்கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம். தலைவர் (பதவிவழி)
ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி தர்மகர்த்தா சபை.

### அறக்கொடை நிதியத்தின் பணிகள்

**மழவராயர் கந்தையாவின் அறக்கொடை நிதியத்தால் முன்னெடுக்கப்படும் பணிகள்**

* ஸ்ரீ சோமஸ்கந்தர் ஆலய காலை, மாலைப் பூசைகள்
* அறுபத்து மூன்று நாயன்மார் குரு பூசைகள்
* நிறுவுநர் தினம், வித்தியாரம்பதினம், அத்திவாரதினம்
* மாவட்ட மட்டம், கோட்ட மட்டம், கல்லூரி மட்டம் என நடைபெறும் திருக்குறள் போட்டி கள்
* முறைசாராக்கல்விக் கற்கை நெறிகள் மெல்லக்கற்கும் 300 மாணவர்களுக் கான கற்றல் உபகரணங்கள் வழங்கல்
* திருக்கேதீச்சர ஆலய திருவிழா உப யம், புத்தூர் சிவன் சப்பர உபயம்
* விசேட செயற்றிட்டத்திற்கு உட்படும் மாணவர்களுக்குச் சிற்றுண்டி வழங் கிக் கற்றலில் ஈடுபடச் செய்தல்

### பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகிய மாணவர்களின் பிரார்த்தனை

'கற்றாங்கு ஒழுகுக' என்ற வாக்கைத் தாரக மந்திரமாகக் கொண்டு செயற்படும் எங்கள் கல்லூரி இன்று நிறுவுநர் தினத்தைக் கொண்டாடு கிறது.

எமது பிரதேச மக்கள் அறிவாற்றலில் மேம்பட வேண்டும் என்ற தூர நோக்கோடு வள்ளல் மழவராயர் கந்தையா அவர்கள் எங்கள் கல்லூரியை நிறுவினார்.

அவரது ஆசிகளுடன் இன்று பல்கலைக் கழ கங்களுக்குத் தெரிவாகிக் கற்கைநெறிகளைத் தொடரும் பாக்கியம் பெற்றுள்ளோம்.

நிறுவுநரின் அறப்பணிகளினால் நேரடியாக நன்மையடைந்தவர்கள் என்ற வகையில் அவரது பிறந்த தினமாகிய இன்று அன்னாரின் பாதங்களைப் பணிகின்றோம் .

**ம.வதனகீர்த்தனா, சி,சிவதாஸ், சி.சிந்துஜா த.அம்பிகா, பு.சுகன்யா, க.திருவேணி, வி.கணேசன், சி.ஜீவனா, சி.சிவகௌரி, ந.கீர்த்திகா, இ.சிந்துஜா.**



### நிறுவுநர் அமரர் மழவராயர் கந்தையா வள்ளலார்

தந்தை - சிற்றம்பலம் மணியகாரன் மகன் மழவராயர்
தாய் - சின்னையா மகள் சின்னத்தங்கச்சிப்பிள்ளை
தோற்றம் - 10.09.1887
(விபவ ஆண்டு ஆவணிமாதம் 25ஆம் நாள் ரோகினி நட்சத்திர நாள்)
மறைவு - 15.05.1936
(வைகாசி மாதம் பூர்வபக்கப் பஞ்சமி)

### சிறப்பான பணிகள்

* விசாலாட்சி சமேத விசுவநாதப் பெருமானுக்கு ஆலயம் அமைத்தமை. (புத்தூர் சிவன் கோயில்)
* சைவத்தையும் தமிழையும் காக்கவெனச் சைவச் சூழலில் ஆங்கிலக்கல்வியை வழங்கும் பாடசாலையாக புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரியை 1931இல் நிறுவி இலவசக் கல்வி அளித்தமை.
* பசிப்பிணி போக்க் அன்னசத்திரம் அமைத்தமை.
* நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் அமைப் பதற்காக கதிர்வேலாயுதசுவாமி மடாலயத்துடன் கூடிய நிலத்தை நல்லூரில் வழங்கியமை.

### ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி–புத்தூர்

நிறுவுநர் நாளும் பரிசில் நாளும் 2005

*இடம்: கல்லூரி பிரதான மண்டபம்*
*காலம்: 10.09.2005 சனிக்கிழமை மு.ப.9.30 மணி*
*தலைவர்:* ***திரு வ. ஆறுமுகம் (கல்லூரி முதல்வர்)***

அருளாசி வழங்குநர்
சிவஸ்ரீசாமி.சோமசுந்தரக்குருகக்ள்
(பிரதம குரு,சிவன் தேவஸ்தானம், புத்தூர்)
முதன்மை விருந்தினர்
வைத்திய கலாநிதி கு.மகேசன்
(பெருமைமிகு பழைய மாணவர், பதில் வைத்திய நிபுணர், போதனா மருத்துவமனை, யாழ்ப்பாணம்)
சிறப்புவிருந்தினர்
திரு இ. சிவஞானசுந்தரம்
(உதவிக்கல்விப் பணிப்பாளர், கோப்பாய்.
நிறுவுநர் நினைவுப் பேருரைஞர்
திரு ஆ. சுந்தரலிங்கம்
(பழையமாணவர், இளைப்பாறிய கணக்காய்வு அத்தியட்சகர்)
'சோமாஸ்கந்தன்- 2005'- மலர் மதிப்புரைஞர்
திரு செ. சுப்பிரமணியம்
(பழைய மாணவர், அதிபர்,வரணி ம.வி)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பா.அ.ச., ப.மா.ச., தர்மகர்த்தா சபை.**

(C/45085)(53)

### ஆசிச் செய்தி

இன்று புத்தூர் கோமகன் அமரர் மழவராயர் கந்தையாவின் பிறந்ததினம். ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரிச் சமூகத்தவர் யாவரும் கூடி அப்பெருமகனாருக்கு விழா எடுக்கின்றோம்.

தனது குபேர சம்பத்துக்களை சமூகப்பணிகளுக் காக அள்ளி வழங்கிய பெரியாரை நன்றியுடன் நினைவு கூர்வது பெருமைப்படத்தக்க விடயம்.

அரனாலயம், அறிவாலயம் அமுதாலயம் எனப் பல கைங்கரியங்களைச் சிறப்பாக நிறைவேற்றிய பெரியார் இவர் இன்று நடைபெறும் நிறுவுர் நாள் நிகழ்வு கள் யாவும் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல ஸ்ரீவிசாலாட்சி அம்பிகா சமேத விஸ்வநாதப் பெரு மானின் பாதாரவிந்தங்களைப் பிரார்த்தித்து ஆசி கூறி அமைகின்றேன் .

**சிவஸ்ரீ சாமி சோமசுந்தரக் குருக்கள்**
பிரதம சிவாச்சாரியார், ஸ்ரீ விசாலாட்சி அம்பிகாசமேத விஸ்வநாத சுவாமி தேவஸ்தானம், புத்தூர்.

### வள்ளலார்க்கு அர்ப்பணமாகும் புதுமலர்

'சோமாஸ்கந்தன் - 2005'
(கல்லூரிச் சஞ்சிகை)
மலரின் உள்ளே மணம் வீசுபவை

**வாழ்த்தியல்**

* அருட்கவி சீ.விநாசித்தம்பி M.A
* திரு. ஜெ.இராஜேந்திரன் (இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளர், பழையமாணவர்)
* திரு.V.K.சுப்பிரமணியம் (1931 இல் கல்லூரியில் கல்வி கற்பித்து நிறுவுநருடன் சமகாலத்தில் பழகும் பாக்கியம் பெற்றவர்)
* திரு.ந.கணேசபிள்ளை (S.L.E.A.S.).முன்னாள் அதிபர்)

**பொதுவியல்**

அறிஞர்களின் ஆக்கங்கள்

* கோப்பாய் சிவம் (பழைய மாணவர்)
* திருமதி சுகந்தினி சிறிமுரளீதரன் (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)
* சைவப்புலவர் மு.முரளீதரன் (கல்லூரி ஆசிரியர்)
* திரு சு.மோகனராசன் (கல்லூரி ஆசிரியர்)
* மாணவர்களின் ஆக்கங்கள் (தமிழ், ஆங்கிலம்)

**பதிவியல்**

* அதிபர் அறிக்கை -2005
* சேவை நயப்புரைகள்
* நீத்தார் நயப்புரைகள்
* மன்றங்களின் செயற்பாட்டறிக்கைகள்
* கடந்த ஓராண்டுச் செயற்பாடுகளின் காட்சிப் பதிவுகள்
* பரிசுப்பட்டியல்
* பணிக் குழுப்பட்டியல்

### கல்லூரி அதிபரின் பிரார்த்தனை

சைவச் சூழலில் ஆங்கிலக்கல்வியை வழங்கும் நன்னோக்கோடு 1931 இல் எங்கள் கல்லூரி உதய மாகியது

சைவமும் தமிழும் எம்மிரு கண்கள் எனப் போற்றும் உணர்வுடன் நிறுவுநர் காட்டிய வழியில் செயற்படுகின்றமை இன்றும் எமக்குப் பெருமை தருகின்ற விடயம்.

அவரது அபிலாஷைகளை நிறைவேற்றும் வண்ணம் கல்வியிலும் விளையாட்டிலும் எம் மாணவச் செல்வங் கள் சிறப்புற்று விளங்குகின்றனர்.

என்றும் எப்போதும் எம்கல்லூரியில் இடம்பெறும் செயற்பாடுகள் யாவும் எங்கள் நிறுவுநருக்கு அர்ப் பணமாகி குருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து மேற்கொள்ளும் பாரம்பரியத்தைக் கொண்டிருக்கின்றோம்.

எம் கல்லூரியில் அருளாட்சி நல்கும் ஸ்ரீசோமஸ் கந்தப் பெருமானின் திருவருளும் நிறுவுநர் மழவராயர் கந்தையா வள்ளலாரின் குருவருளும் எம்மை நல் வழியில் ஆற்றுப்படுத்தப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**வ.ஆறுமுகம்**

### ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் சிறப்பான தினங்கள்

அத்திபார தினம்:- தைமாத அத்தநட்சத்திர தினம் (06.02.1931)
வித்தியாரம்ப தினம்:- சித்திரை மாத மிருக சீரிட நட்சத்திரதினம் (22.04.1931)
நிறுவுநர் தினம்:- நிறுவுநரின் பிறந்ததினம்(10.09.1887)

**கணேசன் ரெக்ஸ்**
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**சாரங்கன் நகைமாடம் அன்ட் சென்ரர்**
45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ரட்ணம்ஸ் பாட்டா**
49, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**CITY TAILORS**
Specialist in Wedding Coats & Suits
73, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

**யாழ்.வாச் வேக்ஸ்**
55, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**மதுரா நகைமாடம்**
59, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 2204

**EVEREST WATCH WORK**
65, Kasthuriar Road,Jaffna.

# பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் "பால விகாஸ்" கல்வித்திட்டம்

*11.09.2005 பாலவிகாஸ் தினம். இதை முன்னிட்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இந் நாளில் சிறுவர்களின் நிகழ்ச்சி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி, மானிப்பாய் பிரதேச சபை மண்டபம், தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய இடங்களில் மாலை 4 - 6 மணிவரை நடைபெறும்.*



விஞ்ஞானம், தொழில் நுட்பம் அதிதீவிரமாக வளர்ச்சியடைந்தாலும், உலகம் போகின்ற போக்கில் ஏதோ பிழையிருக்கிறதென்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். புத்திக் கூர்மை மேலோங்கி இருந்தாலும், தகவல் பரிமாறல் துரிதமாக உலகளாவிய ரீதியில் கடுகதியில் நடைபெற்றாலும் வன்மை, வக்கிரம், தன்னலம் ஓங்கியுள்ளதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள்.

மனத்திருப்தி, அமைதி, மகிழ்ச்சி தேடுவதில் மனிதன் கடும் முயற்சியிலீடுபட்டாலும் தொடுவானம் போல் இவை எட்டுவதில்லையே என்று கலங்குகின்றார்கள். இதற்கு என்ன பரிகாரம்? பகவான் சத்திய சாயி பாபா கூறுகின்றார், "உலகத்தைத் தனி மனிதனால் ஒருபோதும் திருத்த முடியாது. ஆனால், தனிமனிதன் சங்கற்பம் பூண்டால், தன்னைத் திருத்திக்கொள்ளமுடியும். மனிதன் தன்னைத் திருத்தினால் உலகம் தானாகவே திருந்தும்." திருந்தியவர்களின் எண்ணிக்கை ஓரளவு தொகையை (Critical Number) மனித மாற்றம் தொடர்த் தாக்கத்தினால் (Chain reaction) துரிதமடைவதுடன் பரவலாக்கமுமடையும். இவ்வாறு உலகம் திருந்த நெடுங்காலம் எடுக்கும். உன்னத மாற்றம் ஏற்படுவதைத் தடுப்பதற்கு துரிதப்படுத்த கல்வித் திட்டத்தைச் சீராக்க வேண்டும். நடைமுறையில் இருக்கும் கல்வித்திட்டம், தொழில் மயமாக்கப் பட்டதொன்றாகையால் (Industrial model) இதில் மாற்றம் ஏற்படுத்துவது மிகவும் கடினம். இதற்கு என்ன மாற்றுவழி? நடைமுறையிலிருக்கும் கல்வித் திட்டத்துடன் மனிதமேம்பாடுகளை இணைக்கவேண்டும். இவ்வாறு இணைக்கப்பட்ட கல்வித்திட்டங்களையே பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா அறிமுகப்படுத்தியுள்ளார். இவற்றுள், பாலவிகாஸ், மனிதமேம்பாட்டுக் கல்வி, எஜூகெயர் (Educare) ஆகியன அடங்கும். முன்பள்ளி தொடக்கம் பட்டப்பின் படிப்புவரை, மனித மேம்பாடு இணைக்கப்பட்ட கல்வி புகட்டும் நிறுவனங்களை நிறுவியுள்ளார். இக்கல்வித் திட்டத்தை புகட்டும் சத்திய சாயி உயர் கல்வி நிறுவனம், இந்தியப் பல்பலைக்கழக மானியர் குழுவினால் சிறந்ததென அறிக்கை விடுத்துள்ளது. இக்கல்வித்திட்டம் பல்வேறு நாடுகளிலும் அங்கீகரிக்கப்பட்டு, சிறந்த திட்டம் என்றும் பெயர் எடுத்துள்ளது.

பகவான் சத்திய சாயி பாபாவினால், 'பால விகாஸ்' திட்டமே முதன் முதலில் அறிமுகப் படுத்தப்பட்டது. இது இப்பொழுது இந்தியாவில் பல இடங்களிலும், வெளிநாடுகள் பலவற்றிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் நோக்கம், பிள்ளைகளில் உள்ளிருக்கும் தெய்வீகத் தன்மையை (மேம்பாடுகளை) மலரச் செய்வதேயாகும்.

முன்பள்ளி, ஆரம்பப்பள்ளி, இடைநிலைப் பள்ளி, மாணவர்களிடையே, கல்வியூடாக மேம்பாடுகளை மலரச் செய்வது அதிக பலனைக் கொடுக்கும். பச்சைச் சிமெந்தில் போட்ட கோடுகள் எவ்வாறு நெடுங்காலம் பதிந்திருப்பதைப் போல, சிறுவர்களின் உள்ளங்களிலும், கொடுக்கப்படும் தகவல்கள் ஆழமாகப் பதிந்து நெடு நாள்கள் நிலைத்திருக்கும். இதைவிட உளவளவியலாளரின் ஆராய்ச்சி முடிவு; "பத்து வயதுப் பிள்ளையின் நடத்தை ஒன்றை மாற்ற இரு மாதங்கள் எடுக்கும். அறுபது வயது மனிதன் நடத்தையை மாற்ற நூறு மாதங்கள் எடுக்கும்" என்பதேயாகும்.

வைத்திய கலாநிதி **இ.கணேசமூர்த்தி**

ஆகவே தான், பகவான் சத்திய சாயி பாபா, சிறு பிள்ளைகளின் கல்வியில்தான் அதிக அக்கறை செலுத்த வேண்டுமென்று 'பால விகாஸ்' திட்டத்தைத் தந்துள்ளார். 'பால விகாஸ்' கல்வியின் நோக்கம்; பிள்ளையின் ஆளுமை வளர்ச்சி (மனித உன்னதம்) அறிவுத்திறன், செயற்றிறன், தன்னம்பிக்கை, சுயதிருப்தி, தியாக மனப்பாங்கு, ஆன்மீக ஈடேற்றம் ஆகியவற்றை விருத்தி செய்வதேயாகும். பகவான் இதற்காக, ஐந்து கற்பிக்கும் முறைகளான அமைதி இருக்கை, பிரார்த்தனை (அல்லது நல்வாக்கு), கதை கூறல், குழுப்பாடல், குழுமுயற்சியைத் தந்துள்ளார். இக் கல்வித் திட்டத்தில் குருமாரின் பொறுப்பு மிகையானது. அவர்களின் முன்மாதிரியே முக்கிய பங்கு வகிக்கின்றது. குரு பாடத்தில் மட்டுமல்ல பிள்ளையினிடத்திலும் அதிக விருப்பம் கொள்ளவேண்டும். பிள்ளையினுடைய தாயிலும் பார்க்கக் கூடிய அன்பு குருவிலிருந்து பரிணமிக்க வேண்டும். குரு தனது இதயத்திலிருந்து பிள்ளையின் இதயத்திற்கே (Heart to Heart) தகவல்களையும் விளக்கங்களையும் கொடுக்கின்றார். இதனால் பிள்ளையின் அடிஅறிமனம் (Sub conscious mind) தூய்மையாக்கப்பட்டு, அறிமனம் (consciousmind) உயர் அறிமனத்தின் (Super conscious/ Conscience) ஆதிக்கத்தில் செயற்படத் தொடங்கும். எண்ணம் சொல், செயலில் ஒருமையும் தூய்மையும் ஏற்படும் எண்ணம், மனச்சாட்சியின் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பின்பே செயலாக முடிகின்றது. பகவான் இதைத்தான் 3H இன் (Head, Heart and Hands) ஒருமை, இணைப்பு என்று வலியிறுத்தியுள்ளார்.

தற்போது மக்கள் மத்தியில் பணம்தான் பலமென்ற நிலைப்பாடு நிலவுகின்றது. ஆனால் பகவான் கல்வியிலும் பார்க்க ஒழுக்கமே அதி பலம் வாய்ந்தது என்று கூறியுள்ளார்.

ஆகவே,

*முன்பள்ளிக் கல்வியின் நோக்கம் ஒழுக்கம்*
*கல்லூரிக் கல்வியின் நோக்கம் ஒழுக்கம்,*
*பல்கலைக்கழகக் கல்வியின் நோக்கம் ,*
*ஒழுக்கம்,*
*மருத்துவக் கல்வியின் நோக்கம் ஒழுக்கம்,*
*பட்டப் பின் படிப்புக் கல்வியின் நோக்கம்*
*ஒழுக்கமேயாகும்*

கல்வியின் முடிவு ஒழுக்கம் பரீட்சையில் அதிசித்தி பெறுவது, பட்டம் பெறுவது, உத்தியோகம் பெறுவது, பணம் அந்தஸ்து எல்லாம் இடை நோக்கங்களாகும்.

உலகை உய்விக்க, மனித உன்னதத்தை நிலைநாட்ட பாலவிகாஸ் போன்ற மேம்பாடுகள் இணைக்கப்பட்ட கல்வித் திட்டங்களைப் பிரபல் யப்படுத்த இம் மாதம் பதினொராம் திகதி (11-09-2005) 'பாலவி காஸ்' தினமாக சத்திய சாயி நிறுவனத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஜெய்சாயிராம்

# யுத்தம் செய்வதற்கு அஞ்சி பின்வாங்க மாட்டோம்

## சோமவன்ஸ சூளுரைப்பு

கொழும்பு,செப்.10

நாம் யுத்த வெறியர்கள் அல்லர்; ஆனால் யுத்தம் செய்வதற்கு அஞ்சி பின்வாங்கவும் மாட்டோம். பிரிவினைவாதத்தை இல்லா தொழிப்பதே எமது நோக்கம். - இப்படிச் சொல்கிறார் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க.

அலரிமாளிகையில் நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்ட பின்னர் உரையாற்றிய ஜே.வி.பி. தலைவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கிலே இன்று ஜனநாயகம் இல்லை. அங்கு புலிகள் சட்டத்தையும், ஒழுங்கையும் மீறி வருகின்றனர். அதிகாரத்தை பலவந்தமாகத் தமது கைகளில் எடுத்துள்ளனர். இதற்கு ஒரு முடிவு காணப்படவேண்டும்.

500 வருடங்களாக எமது நாட்டை அந்நியர்கள் ஆட்சி செய்தனர். இனியும் நாட்டை யாருக்கும் அடிமைப்படுத்த இடமளிக்க முடியாது. பிறருக்கு அடிபணியாமல் சுயாதீனமான முடிவுகளை எடுப்பதற்கு நாம் அஞ்சக்கூடாது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நாம் ஆதரிக்க முடிவு செய்தவுடன் அவரது வெற்றி உறுதியாகிவிட்டது.

எமது முடிவுகள் பிழையானதல்ல. நாம் சொல்வதைச் செய்பவர்கள்; செய்வதைச் சொல்பவர்கள். எமது இந்த முடிவு காரணமாக எதிரணியினர் குழம்பிப் போயுள்ளனர். அவர்கள் குழம்புவதற்கும் நியாயமான காரணங்கள் உண்டு.

மஹிந்த ராஜபக்ஷ என்பவர் இலங்கை மக்களின் பொது வேட்பாளராகிவிட்டார். நாம் அவருடன் செய்துகொண்ட கூட்டு என்பது சந்தர்ப்பவாதக் கூட்டல்ல. இது வரலாற்று ரீதியான கூட்டு. அவரை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற வைப்பதே எமது பிரதான நோக்கமாகும்.

இந்தக் கூட்டானது எதிரிகளை விரட்டியடிப்பதற்கான கூட்டாகவே இருக்கும். இதில் எந்த மாற்றமும் இல்லை. நாம் ரோஹண விஜேவீர வகுத்த சிறந்த அரசியற் பாதையில் பயணம் செய்பவர்கள் - என்றார் அவர்.

(க-3)

# மட்டக்களப்பில் கிரனேட் வீச்சு

ஏறாவூர்,செப்.10

மட்டக்களப்பு - எல்லை வீதியில் அமைந்துள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய களஞ்சியசாலையில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது வியாழன் மாலை இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கைக்குண்டு வீழ்ந்து வெடித்த போதிலும் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று மட்டக்களப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டங்கன் போல் தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இனந்தெரியாதநபர்கள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டுத்தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. மாலை 7.35 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பான மேலதிக புலன்விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையகப்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, திருகோணமலை மாவட்டம் கீழ்க்கரை வீதியிலும்நேற்றிரவு படையினர்மீது கிரனேட்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனினும் பாதிப்பு ஏற்படவில்லை.(ற - 157)

# திருத்தங்கள் இன்றியே ஒப்பந்தம் கைச்சாத்து

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஜே.வி.பியுடன் ஏற்படுத்திக் கொள்ளவிருக்கும் கொள்கைத் திட்டங்களில் திருத்தங்கள் செய்யப்படுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவர்களிடம் முன்னதாக உறுதியளித்திருந்தார் எனினும் நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் அந்த திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

முன்னதாக கடந்த செவ்வாய்க்கிழமை பிரதமரை அலரி மாளிகையில் சந்தித்த பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள், பொதுக்கட்டமைப்பு, போர்நிறுத்த ஒப்பந்தம், அமைதிப் பேச்சுகள் என்பன குறித்து கலந்துரையாடியிருந்தனர்.

இந்த விடயங்கள் பற்றி செய்தியாளர் மாநாடொன்றில் ஜே.வி.பி. வெளியிட்ட தகவல்கள் குறித்தும் இந்தப் பேச்சுகளின் போது தெரிவித்திருந்த பொ.ஐ.மு. கட்சித் தலைவர்கள் இதுபற்றி பிரதமர் கவனஞ் செலுத்த வேண்டுமென வலியுறுத்தியிருந்தனர்.

இந்த விடயத்தைக் கருத்திற்கொள்வதாகவும், ஜே.வி.பியுடனான இறுதி உடன்படிக்கையில் இவை திருத்தப்படுமென்றும் பிரதமர் மஹிந்த உறுதியளித்திருந்தார். ஆனால், நேற்றுமுன்தினம் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையில் இந்த திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

திருத்தங்கள் எதனையும் மேற்கொள்ளாமல் மஹிந்த ராஜபக்ஷ இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டமை பொ.ஐ.முவில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களுக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது.

(க-3)

# ஜே.வி.பியுடனான உடன்படிக்கை நாட்டைப் பாதுகாப்பதற்கானதாம்!

## *கைச்சாத்திட்ட பின் பிரதமர் தெரிவிப்பு*

கொழும்பு, செப்.09

ஜே.வி.பியினருடன் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் நாட்டை பாதுகாக்கவே ஒழிய யுத்தமொன்றை நோக்கிச் செல்வதற்கானதல்ல. எதிரணியினர் கூறுவது போல எதுவும் நடைபெறாது என்று அடித்துக் கூறுகிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

ஜே.வி.பியினருக்கும் பிரதமருக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் காலை 11.57 மணிக்கு இருந்த சுபநேரத்தில் அலரி மாளிகையின் திறந்த வெளியில் கைச்சாத்திடப்பட்டது.

உடன்படிக்கையில் ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வாவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் கைச்சாத்திட்டனர். இந்த உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

1956ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பிலிப் குணவர்தனவுடன் பண்டாரநாயக்க செய்துகொண்ட உடன்படிக்கை, அதன் பின்னர் 2004ஆம் ஆண்டு ஜே.வி.பியுடன் செய்த ஒப்பந்தம் போன்றவற்றையும் ஐக்கிய தேசியக் கட்சியினர் கடுமையாக விமர்சித்தனர். ஆனால், அவர்கள் கூறியது போல எதுவும் நடைபெறவில்லை. நான் ஜே.வி.பியுடன் செய்துகொண்ட உடன்படிக்கை என்பது நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்தவேண்டும் என்பதையும், சமாதான ரீதியில் பிரச்சினைக்கு முடிவுகாண வேண்டும் என்பதையும் நோக்கமாகக் கொண்டது.

நாட்டில் உள்ள அனைத்து சக்திகளையும் அணிதிரட்டி அவர்களின் ஆதரவுடன் நான் வெற்றிபெறுவேன். நாட்டை நேசிப்பவர்கள் என்னுடன் இணைந்துகொள்வார்கள். சகல மக்களும் அச்சமின்றி வாழும் ஒரு யுகத்தை ஏற்படுத்துவதே எனது ஒரே நோக்கமாகும்.

நான் மீண்டும் யுத்தமொன்றை ஆரம்பிக்கப் போகிறேன் என ஐ.தே.கவினர் செய்து வரும் பிரசாரமானது முற்றிலும் அபத்தமானது. பின்தள்ளப்பட்ட மக்களை முன்னேற்றி நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதே எனது பிரதான நோக்கமாகும்.- என்றார் அவர்.

(க-ஐ)

# பிரதமருக்கான ஆதரவை ஹெல உறுமய மீளாய்வு?

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்குவது தொடர்பான தனது தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்ய ஜாதிக ஹெல உறுமய தீர்மானித்திருக்கிறது என்று கூறப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்காக சிங்கள மகா சம்பத, பூமி புத்ர கட்சி உட்படப் பல சிறிய கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள பிரதமர் தீர்மானித்திருக்கிறார் என்பதும் -

ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கைகளை தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்காதிருக்க பிரதமர் மஹிந்த முடிவு செய்திருக்கிறார் என்பதுமே-

ஹெல உறுமயவின் இந்த மீள் பரிசீலனைக்கான காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பிரதமர் மஹிந்தவிற்கு ஆதரவு தெரிவித்த விடயத்தில் ஜாதிக ஹெல உறுமயவிற்குள் இரு வேறு கருத்துகள் கொண்ட குழுக்கள் இருக்கின்றன என அக்கட்சி வட்டாரங்கள் கூறின. பிரதமருக்கு ஆதரவு தெரிவித்து 12 அம்ச உடன்படிக்கை ஒன்றில் அவருடன் கட்சி கையெழுத்திட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

அன்னையின் மடியில்
05 - 03 - 1927



ஆண்டவன் அடியில்
11 - 08 - 2005

திருமதி

# முதலி தங்கம்மா

மண்ணில் பிறந்த நாள் முதலாய் வாழ வழிகாட்டி
நேசமுடன் எமை வளர்த்த கோலக் குலவிளக்கே!
காலமெலாம் எமைக் காத்திருப்பாய் எனப் பார்த்திருந்தோம்
காலன் கவர்ந்து சென்றானே? கோலத்தால் நீ மறைந்தாலும்
ஞாலத்தில் உள்ளவரை நாம் மறவோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

2005.08.11 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவியின் பிரிவறிந்து பல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோர், அனுதாப அஞ்சலிகளைத் தெரிவித்தோருக்கும் யாழ்.கல்வி வலய, யாழ்.போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (10.9.2005) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விடத்தற்பளை வீதி,
உசன், மிருசுவில்.

குடும்பத்தினர்.

(சி/45080)(21-26-16-19)

## நல்லூர் பிரதேச சபை
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் இக்ராட் (ICTAD) தரம் M-9 பதிவுச்சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்து கோரப்படுகின்றது. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி, படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:- 09.09.2005 ஆம் திகதி தொடக்கம் 15.09.2005 ஆம் திகதி பிற்பகல் 3 மணிவரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:-16.09.2005 நண்பகல் 12 மணி வரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி:- 16.09.2005 பிற்பகல் 2.30 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.
05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை செயலாளர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு 2ஆம் பந்தியில் குறிப்பிட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் | மீளளிக்கப்படாத வற்வரி |
|---|---|---|---|---|
| 01. | காந்திஜி வீதி, கல்லிட்டுத் தாரிடல் கொக்குவில். | 3250.00 | 500.00 | 75.00 |
| 02. | பூதவராயர் வீதி, கல்லிட்டுத் தாரிடல் கல்வியங்காடு, திருநெல்வேலி. | 7550.00 | 500.00 | 75.00 |
| 03. | மடம் வீதி, கல்லிட்டுத் தாரிடல் திருநெல்வேலி. | 2200.00 | 500.00 | 75.00 |
| 04. | மடம் வீதி, கல்லிட்டுத் தாரிடல் கல்வியங்காடு. | 2240.00 | 500.00 | 75.00 |
| 05. | கொக்குவில் 2ஆம் குறுக்கு வீதி, கல்லிட்டுத் தாரிடல். | 2500.00 | 500.00 | 75.00 |
| 06. | வைரவர் வீதி, கல்லிட்டுத் தாரிடல் கொக்குவில். | 2000.00 | 500.00 | 75.00 |
| 07. | கோண்டாவில் மேற்கு வீதி, 2ஆம் முறை தாரிடல் . | 330.00 | 500.00 | 75.00 |
| 08. | வைரவர் வீதி, கல்லிட்டுத்தாரிடல் கொக்குவில். | 1350.00 | 500.00 | 75.00 |
| 09. | நல்லூர் பிரதேச சபை கொல்களம் திருத்தம் . | 3450.00 | 500.00 | 75.00 |

தலைமை அலுவலகம்,
நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி. 07.09.2005

(C/45684)
(21.19.16)

பொன்னையா வைரமுத்து
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

## பலவேலைக்கு ஒருவர் தேவை

சாவகச்சேரி அருள்மிகு துர்க்கா தேவி தேவஸ்தானத்திற்கு பலவேலையும் செய்யக்கூடிய ஒருவர் தேவை. குடும்பப் பொறுப்பு அற்றவருக்கு முதலிடம் உண்டு.
சம்பளம் நேரில்.

(39720)
(16-19-21)

- தர்மகர்த்தா.

## வேலையாள்கள் தேவை

பேக்கரி வேலையில் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

தொடர்பு:-
புதிய துர்க்கா வெதுப்பகம்,
கலைவாணி லேன்,
பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(39773) (21.16.19)

## D.C.M

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

A/L DAY CLASS

பொருளியல்- வரதராஜன்
கணக்கீடு- பாலவாசன்
வணிகக்கல்வி- உமாகாந்த்

ஆரம்பம்- 12.09.2005
திங்கள் 8.00 (ப.நே)

(39766)

## பொஸ்கோ வித்தியாலய பொன்விழா நிகழ்வுகள்

குருநகர்,செப்.10

யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் பொன்விழா நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

வித்தியாலயத்தின் அருகில் அமைந்துள்ள புனித திரேசாள் ஆலயத்தில் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பொன் விழாச் சிறப்புத்திருப்பலி யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பொன்விழாசிறப்பு மலர்வெளியிட்டு வைக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலயத்தின் திறந்த வெளியரங்கில் அதிபர் அருட் சகோதரி ஜே. செல்வராணி தலைமையில் நடைபெறும். (த-51)

## நெடுந்தீவு ஆஸ்பத்திரிக்கு புதிய பொறுப்பதிகாரி

குருநகர், செப்.10

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையின் புதிய மாவட்ட வைத்திய அதிகாரியாக டாக்டர் எஸ்.திருஞானசம்பந்தமூர்த்தி இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். இவ்வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரியாக சேவை புரிந்த டாக்டர் திஸ்ஸகுமார் குணவர்த்தன அனலைதீவு சுற்றயல் கூறு வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக மேற்கூறிய திகதியில் இருந்து பணிபுரிந்து வருகிறார். இவர்கள் இவரும் மீள் நியமன அடிப்படையில் சேவை புரிந்து வருகிறார்கள்.(த-51)

## B.M.I.C.H. புத்தகக் கண்காட்சி

உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

பெருந்தொகையான பாடசாலை நூல்கள், நாவல்கள், அறிவுசார் நூல்கள், தமிழ் ஆங்கில உள்ளூர், வெளியூர் நூல்கள், சிங்கள நூல்கள் மற்றும் சர்வதேச பாடசாலைகளுக்கான அனைத்து நூல்களும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
நூல் நிலையங்களுக்கான தெரிவுக்கு விசேட கழிவும் உண்டு.
"இன்றே விரைந்திடுங்கள்"

காலம் :- செப்ரெம்பர் 10 ஆம் திகதி - 18 ஆம் திகதி வரை
இடம் :- பண்டார நாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபம் (B.M.I.C.H)
காட்சி அறை :- மக்மிலன் புத்தகசாலை மண்டபம் `B' 114 -115
{(B.M.I.C.H) MAKKMILAN BOOK DEPOT STALL `B' 114-115}

(சி/45075)(26-19-16-21)

## Vacancy for Computer Assistant

Applications are invited by us up to15th. Sept. 2005, from suitably qualified candidates for the above post.

Qualification : Minimum A/L Qualified.
Experience : Minimum 6 Month experience in Tamil& English Typing, MS Office, Coral Draw, Photoshop, Page maker
Selection : By Interview
Salary scale : Negotiable

Active Theatre Movement,
Arulaham, Adiyapatham Road,
Thirunelvely, Jaffna.

(C/45094)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்

இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் (Business English) - 2005

முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் பின்வரும் BAd/B.Com. மாணவர்களில் அனைத்து பாட அலகுகளிலும் சித்திபெற்றும் இரண்டாம் மொழி ஆங்கிலத்தில் (Business English) மாத்திரம் சித்தியின்மையால் பட்டக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்ய முடியாதுள்ள மாணவர்களுக்காக இரண்டாம் மொழி ஆங்கில பாடத்திற்கான (Business English) பின்வரும் கல்வியாண்டுகளுக்கான விசேட மீள் பரீட்சைகள் 16.09.2005 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

✧ முதலாம் வருடம் இரண்டாம் அரையாண்டு
✧ இரண்டாம் வருடம் இரண்டாம் அரையாண்டு (பகுதி - I)
✧ மூன்றாம் வருடம் இரண்டாம் அரையாண்டு (பகுதி - II)

இதுவரை மீள் பரீட்சைக்கு விண்ணப்பிக்காதவர்களும் மற்றும் ஏற்கனவே தங்களது விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தவர்களும் தங்களுக்கான அனுமதி அட்டைகளை 12.09.2005 ஆம் திகதி திங்கட்கிழமை முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(சி/45068)(21-16-19)

- பதிவாளர்.

## NEW SCIENCE HALL

இரசாயனவியல்
க.சிவத்திரன் B.Sc. (Hons)

2006 A/L மீள் பரீட்சார்த்திகளுக்குரியது

1) மாதிரி வினா-விடை வகுப்பு
Sat. 3.15-5.30 p.m.
2) சேதன இரசாயனம் (Theory)
Sun. 3.15-5.30 p.m.
3) அசேதன இரசாயனம் (Theory)
Wed. 3.15-5.30 p.m.
4) பௌதிக இரசாயனம் (Theory)
Thu. 3.15-5.30 p.m.

(ஆரம்பம் Wed., 14.09.2005 - 3.15 p.m.)

5) கைத்தொழில் இரசாயனம் (Theory) விரைவில்
6) DAY CLASS இற்குரிய கடந்தகால வினா விடை வகுப்பு (1979-2005) வாரத்தில் 5 நாள்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

பிரிவு- I 8.15-9.45 a.m.
பிரிவு - II விரைவில் 9.45-11.15 a.m.

மாணவர்கள் எவரும் இணையலாம்
(யாவும் பழைய நேரப்படி) (21-19-16)

(39757)



# சாதிக்க வேண்டும் என்ற துடிப்பு சிறுவயது முதலே இருந்தது...

நடைபெற்று முடிந்த ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்று அகில இலங்கை ரீதியாக முதலாவது நிலையைப் பெற்று யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கே பெருமை தேடித் தந்திருக்கிறார் யாழ்.இந்துக்கல்லூரி மாணவன் சிவப்பிரகாசம் மயூரன்.

அல்லாரை என்ற கிராமத்தில் பிறந்த இவர், தனது ஆரம்பக் கல்வியைச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கற்றார். பின்னர் யாழ். இந்துக் கல்லூரியில் சேர்ந்து கொண்டார்.

ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் 10 பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றார். இவரது தந்தையார் சிவப்பிரகாசம். வீதி அபிவிருத்தி அதிகார சபையில் படவரைஞராகக் கடமையாற்றுகிறார்.

தாய், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தில் எழுதுவினைஞர். அண்ணா, பேராதனை பல்கலைக் கழகத்தில் மூன்றாம் வருட மாணவன்.

தனது அயாரத முயற்சி மூலம் சாதனை படைத்துத் தனக்கும் தனது பெற்றோருக்கும் பாடசாலைக்கும் மட்டுமன்றி, ஒட்டுமொத்த தமிழினத்துக்கே பெருமை சேர்த்த இந்த மாணவனைச் சந்தித்தோம்.

வணக்கம் மயூரன்! தேசிய ரீதியில் கணிதபாடத்தில் முதலிடம்பெற்று யாழ். மாவட்டத்திற்கு மட்டுமன்றி தமிழ்ச் சமூகத்துக்கும் பெருமை தேடிக்கொடுத்திருக்கிறீர்கள். உங்களுக்கு உதயன் சார்பாக மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மயூரன்:** நன்றி உங்களைப் போன்றோரின் வாழ்த்துக்கள் எனது எதிர்காலக் கல்விக்கு மேலும் உரமூட்டட்டும்.

**கேள்வி:** எப்படி உங்களால் சாதிக்கமுடிந்தது...?

**மயூரன்:** நான் ஆரம்பத்திலே ஒரு பொறியியலாளராக வரவேண்டும் என்ற இலக்குடன்தான் கல்வி கற்றேன். அந்த இலக்கு நாளடைவில் உயர்தரம் படிக்க ஆரம்பிக்கின்றபோது ஏ.எல். பரீட்சையில் அகில இலங்கைரீதியில் முதலிடம் பெறவேண்டும் என்ற முதற்படி இலக்காக மாறியது.

அந்த இலக்கினை எட்டிவிடவேண்டுமென்ற துடிப்புடன் என்னை முழுமையாக அர்ப்பணித்தேன். அந்த அர்ப்பணிப்பினால் தான் சாதிக்க முடிந்தது.

**கேள்வி:** வேறு துறைகளில் ஈடுபாடுகள் இருந்ததா?

**மயூரன்:** நிறைய ஈடுபாடு இருக்கிறது. கலைத்துறை, விளையாட்டுத்துறை என்றெல்லாம் பல துறைகளில் ஆர்வமுள்ளவனாக என்னை வளர்த்திருக்கிறார்கள் என் பெற்றோர்கள், ஆசிரியர்கள். நாடகங்கள் பலவற்றில் நடித்திருக்கிறேன்.

அது மட்டுமன்றி, கிரிக்கெட் விளையாடுவதில் அதிக நேரமெடுத்து ஆர்வத்துடன் பங்குபற்றுவேன்.

**கேள்வி:** ஏனைய துறைகளின் ஈடுபாடு உங்கள் கல்விக்குத் தடையாக இருந்ததா?

**மயூரன்:** இல்லவே இல்லை. என்னைப் பொறுத்தவரையில் இந்தக் காரணம் ஏற்றுக் கொள்ள முடியாததொன்று. ஒரு மாணவன் வெறுமனே புத்தகப்பூச்சியாகக் குறுகிய வட்டத்தில் இருந்துவிடக்கூடாது. அவன் ஆளுமைகள் பல வழிகளில் விருத்திசெய்யப்பட வேண்டும். அதற்காக அவன் பலதுறைகளில் தேர்ச்சி பெற்றிருக்கக் கூடியவனாக உருவெடுக்க வேண்டும். அதற்கென நேரங்களை ஒதுக்கிச் செயற்பட்டால் அதிலும் வெற்றி பெறலாம்.

## தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற யாழ்.இந்து மாணவன் மயூரன்

**கேள்வி:** இப்படியான சாதனையை எதிர்பார்த்தீர்களா?

**மயூரன்:** இத்தகைய சாதனையை நிலைநாட்ட வேண்டும் என்ற உணர்வுடன் செயற்பட்டேன். பெறுபேறு இன்ரநெற்றில் வெளியானதும் லண்டனில் இருக்கிற உறவினர் மூலம்தான் நான் தேசிய ரீதியில் முதலிடம் பெற்றதை அறிந்தேன். உண்மையில் என்னுடைய ஆனந்தத்திற்கு எல்லை எதுவென்று சொல்ல முடியவில்லை. உடனடியாக அப்பாவுக்குப் போன் பண்ணி விடயத்தைக் கூறினேன்.

**கேள்வி:** உங்களுடைய இத்தகைய வெற்றிக்கு உந்துதலாக யாராவது... (கேள்வி முடிப்பதற்குள்)

**மயூரன்:** எந்தவொரு மாணவனுக்கும் ஆற்றல் இருந்தாலும் அவனை வெளிக்கொணர்கின்ற சக்தியாக ஒரு தூண்டுதல் வேண்டும் என்பதை என்னுடைய அனுபவத்தில் உணர்ந்து கொண்டேன்.

என்னுடைய இத்தகைய வெற்றிக்குப் பெற்றோர்கள் பக்கபலமாக இருந்திருக்கிறார்கள். அத்துடன், என்னைக் கற்பித்த ஆசிரியர்கள் அடிக்கடி ''நீ 3 ஏ எடுப்பது மட்டுமன்றி, அகில இலங்கையிலும் முதலிடம் பெறுவாய்'' என்று நம்பிக்கையினை ஊட்டினார்கள். அந்தத்தூண்டுதல் என்னைத் திடமாக்கியது. அவர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும் என்ற வைராக்கியமும் எனக்குள்ளே எழுந்தது.

**கேள்வி:** யாழ்ப்பாணத்தில் உருவாகின்ற கல்விமான்கள் எல்லாம் இங்கு சேவை செய்வதில்லை என்ற குற்றச்சாட்டு நிலவுகிறதே... இந்த விடயத்தில் நீங்கள் எப்படி..?

**மயூரன்:** இத்தகைய குற்றச்சாட்டு உண்மையானது தான். அது மன வேதனையையும் உண்டு பண்ணுகின்றது. என்னைப் பொறுத்தவரையில் என்னுடைய வளமான கல்விக்காக வெளிநாட்டிற்குச் சென்றாலும் அங்கு என்னை முழுமையாக வளப்படுத்தி என் இலக்கினை அடைந்து பெரும் கல்விமானாக என்னை வளர்த்தெடுத்த தாயகத்துக்கு அளப்பெரும் சேவையாற்ற எங்கிருந்தாலும் வருவேன். இது வெறும் பேட்டிக்காகச் சொல்லவில்லை. நிஜமான வாக்குறுதியும் இதுதான்.

**கேள்வி:** இறுதியாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்...?

**மயூரன்:** என்னுடைய இதுவரை காலக் கல்வியின் அனுபவத்தை வைத்துச் சொல்வதானால், ஒரு மாணவன் வெற்றியாளன், என்ற நிலைக்கு உயர்ந்துகொள்ளவேண்டுமென்றால் அவனுக்கு நல்ல ஆசிரியர்கள், நண்பர்கள் கிடைக்கவேண்டும். முன்செல்லும் ஒரு விளையாட்டு வீரனுக்கு போட்டியாக ஒரு வீரன் இருக்கும் போதுதான் அந்த வீரனின் வெற்றி மேலும் உறுதியாகும்.

**செவ்வி: கவிதரன்**

அதுபோல, ஒரு மாணவனின் வெற்றிக்கு அவனோடு சேர்ந்து படிக்கின்ற நண்பர்களின் நல்ல நட்பும் அவர்களுக்கிடையில் உருவாகும் போட்டித் தன்மையான கல்விச் சூழல் தான் வழிசமைக்கின்றது.

என்னைப் பொறுத்தவரையில் நல்ல நண்பர்களின் நட்பு அவர்களிடத்தில் உருவான வஞ்சகமில்லாப் போட்டித் தன்மை என்னுடைய வெற்றிக்கு இன்னொரு காரணம் என்று சொல்லலாம்.

ஆக, புத்தகப் பூச்சியாக மட்டுமன்றி, பரந்துபட்ட வாசிப்புப் பழக்கம், எதையும் சாதிக்க வேண்டும் என்ற திடகாத்திரமான மனத்துடிப்பு எம்மிடத்தில் இயல்பாக உருவெடுக்க வேண்டும். அத்துடன், பெற்றோர்களிடத்தில் நாம் காட்டும் அன்பு, அதன் மூலம் அவர்கள் எங்கள் மீது காட்டும் ஆதரவு இன்னொரு வகையான பலமாக இருக்கும்.

இத்தனையும் நிறைவாக இருந்தால் எங்கும் எந்தத் துறையிலும் சாதாரணமாக வெற்றி பெறலாம்.

(யாழ்.மாவட்டத்தில் 3 பாடங்களிலும் 'ஏ'.சித்திபெற்ற ஏனையோருடனான செவ்விகள் பின்னர் உதயனில் வெளியாகும்.)

---

### பாடசாலைகளுக்கு இடையிலான
# தேசியமட்ட விளையாட்டு விழா இன்று கொழும்பில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.10

பாடசாலைகளுக்கிடையேயான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை கொழும்பில் ஆரம்பமாகின்றன.

இந்தப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் கொழும்பு வந்து சேர்ந்துள்ளனர். இந்தப் போட்டிகளில் தடகளப் போட்டிகள் யாவும் இன்று தொடக்கம் மூன்று தினங்களுக்கு கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நடைபெறும்.

பெருவிளையாட்டுப் போட்டிகளும் அவை நடைபெறவுள்ள இடங்களின் விவரமும் வருமாறு:-

* கரபந்தாட்டம்- ஆண்கள், பெண்கள் ஹங்வெல்ல இராஜசிங்க மத்திய மகா வித்தியாலயம்.
* ஹொக்கிப்போட்டி- ஆண்கள், பெண்கள்- கொழும்பு பல்கலைக்கழக மைதானம், ஸ்ரீமாவோ பெண்கள் வித்தியாலயம், றோயல் கல்லூரி.
* மென்பந்து கிரிக்கெட்- ஆண்கள் - பாணந்துறை ஸ்ரீசுமங்கலி வித்தி, பாணாந்துறை பரியோவான் கல்லூரி, வாதுவ பொது ஜன விளையாட்டு மைதானம், வாதுவ மத்திய மகாவித்தியாலயம்.
* கராத்தே- ஆண்கள், பெண்கள் - கிரிபத் கொட விகார மாதேவி பெண்கள் வித்தியாலயம்.
* மேசைப்பந்து - ஆண்கள், பெண்கள் - கல்கிசை சென்தோமஸ் கல்லூரி.
* பட்டமின்ரன் - ஆண்கள், பெண்கள் - கல்கிசை சென்தோமஸ் வித்தியாலயம்.
* குத்துச்சண்டை- ஆண்கள்- வியாங்கொட பண்டாரநாயக்க மகாவித்தியாலயம்.
* ஜிம்னாஸ்ரிக்- ஆண்கள், பெண்கள் - சுகததாச உள்ளரங்கு
* கபடி - ஆண்கள், பெண்கள் -மகரகம இளைஞர் சேவை மன்ற விளையாட்டரங்கு.
* சைக்கிளோட்டப்போட்டி- ஆண்கள், பெண்கள்- விகாரமகாதேவி பூங்கா சுற்றுவட்டம்.
* சதுரங்கம் - ஆண்கள், பெண்கள் - கொழும்பு நீட்மாவத்தை சதுரங்கசங்கத் தலைமைப் பணிமனை.

(3-203)

---

### மினி ரெனிஸ் சென்.பற்றிக்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம்,செப்.10

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான மினி ரெனிஸ் சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலாம் இடத்தினையும் பெண்கள் பிரிவில் யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மூன்றாவது இடத்தினையும் பெற்றது.

கடந்த 3 ஆம், 4 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம்பெற்ற இந்தச் சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து நீர்கொழும்பு சென்.பீற்றஸ் கல்லூரி அணி மோதியது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி நீர்கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரி அணியை 4:3 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனானது.

பெண்களுக்கான மூன்றாவது இடத்திற்கான ஆட்டத்தில் யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி கொழும்பு விசாகா கல்லூரியுடன் மோதியது.

யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரியை எதிர்த்து விளையாடிய கொழும்பு விசாகா கல்லூரி 5:2 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாவது இடத்தினைத் தனதாக்கிக்கொண்டது. (3-190)

---




# முல்லை,கிளிநொச்சி அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் இளந்தாரகை சம்பியன்

கிளிநொச்சி,செப்.10

கிளிநொச்சி விளையாட்டுத் துறையினரால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் தருமபுரம் இளந்தாரகை விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றுச் சம்பியனானது.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் விசுவமடு தோழர்கள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தருமபுரம் இளந்தாரகை விளையாட்டுக் கழகம் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தோழர்கள் விளையாட்டுக்கழக அணி 15 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது. சுகிர்தன், யூட்சன், கார்த்தீபன் ஆகியோர் முறையே 44,14,13 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

யோகீசன், சாந்தன் முறையே மூன்று விக்கெட்டுக்களையும் மயூரன் இரண்டு விக்கெட்டுக்களையும் சுகந்தன் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.


பதிலுக்குத் துப்பெடுத்தாடிய இளந்தாரகை விளையாட்டுக் கழக அணி 13.3 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 81ஓட்டங்களைப் பெற்றது. யோகீசன், மயூரன், சுதர்சன் முறையே 16,12,12 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

விஜயதர்சன், டினேஸ், தர்மேந்திரா, சிவபாலன், உதயேந்திரன் முறையே தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

வெற்றிபெற்ற அணியினருக்கு வெற்றிக் கிண்ணம் மற்றும் 10ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றைத் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் வழங்கிக் கௌரவித்தார்.

இரண்டாவது இடத்தைப்பெற்ற அணியினருக்கு வெற்றிக் கிண்ணமும் ஐயாயிரம் ரூபா பணப் பரிசிலும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (3-402-190)

---



யாழ்.மாவட்டத்தில் விளையாட்டுத் துறையை அபிவிருத்திசெய்யும் நோக்குடன் துரையப்பா விளையாட்டரங்கில் அமைக்கப்பட்ட தசைநார் பயிற்சி நிலையம் மூன்று வருடங்களுக்கு மேலாகியும் இன்னும் இயங்காத நிலையில் உள்ளது.

இயங்காத நிலையிலுள்ள தசைநார் பயிற்சி நிலையத்தையும், கொழும்பு விளை யாட்டு அமைச்சினால் இந்த நிலையத்திற்கென வழங்கப் பட்ட பெறுமதி வாய்ந்த உபகரணங்கள் பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: தமிழினியன்)

# வேலை இல்லையா?

விருப்பமில்லை? தகுதியில்லை? முயற்சியில்லை?

**SAAMSTECH இன் பயிற்சிநெறிமூலமாக இதுவரை 120 பேர் பணி நியமனம். 60 பேர் பயிற்சியில்.**

*ஆங்கில ஆசிரியர்கள், அலுவலர்களுக்கான*

## பயிற்சியும் பணிநியமனமும்

**பயிற்சியின் பின்னரான பணிநியமனம் :** உள்நாட்டு மற்றும் சர்வதேச செயற்பாடுகளில் கல்வி, இணையத் தள, மென் பொருள் மற்றும் கற்கைநெறி விருத்தியாக்கம் மற்றும் நிர்வாகம்.

பயிற்சிக்காலம் : 3 மாதங்கள். தினமும் நான்கு மணிநேரம், வாரத்தில் 5 நாள்கள்

பணி நியமனம் : 05.12.2005

கட்டணம் : ரூபா 12000/-

கல்வித்தகுதி :க.பொ.த உயர் தரத்தில் சித்தி (ஆங்கில பாடத்தில் சித்தி எதிர்பார்க்கப்படவில்லை)

**பயிற்சிக் காலத்தின்போதும் ஊதியம் வழங்கப்படும்**

**பல்கலைக்கழக அனுமதியை தவறவிட்டவரா?**

சான்றிதழ்களல்ல திறமையுள்ளவர்களையே நாங்கள் தேடுகிறோம்
உங்களுடைய தகுதி உங்கள் முயற்சியும் விருப்பமுமே

அடித்தளம், பழக்கப்படுத்தல் மற்றும் பிரயோகம் என்ற அடிப்படையில் எந்த ஒரு வேலையையும் முழுமையாக ஆங்கில மூலமாக கையாள்வதற்கான பயிற்சி வழங்கப்பட்டு முடிவில் ஆங்கிலமூலமான உள்நாட்டு மற்றும் சர்வதேச செயற்பாடுகளில் பணிநியமனம்.

**ஒரு பிரிவில் 40 பேர் மட்டும் பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்படுவர்**

**அனுமதிக்கு சுயவிபரக்கோவையுடன் இன்று அல்லது நாளை நேரில் வரவும்**

**SAAMSTECH**
**TEACHERS TRAINING COLLEGE**
841, HOSPITAL ROAD, JAFFNA. PH : 0773068968


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 20 - 06 - 1938 |  | 11 - 09 - 2004 |

அமரர்

### சின்னத்தம்பி தங்கவடிவேல் (குஞ்சியர்)

நாளை (11.09.2005) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சுப்பர்மடம்,*
*பருத்தித்துறை.*

(சி-45079)

**மனைவி,**
**பிள்ளைகள்.**

## அஞ்சலிக்கும் ஆண்டொன்று

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 22 ✽ 09 ✽ 1954 |  | 22 ✽ 08 ✽ 2004 |

திருமதி தவபாலசிங்கம் ஜெகதீஸ்வரி

பணிவின் உறைவிடமாய் பாசத்தின்இருப்பிடமாய்
குடும்பத்தின்குலவிளக்காய்~இங்கு
மிளிர்ந்திட்ட எம் அன்னையே
என்நாளும் உமையெண்ணி நெஞ்சு தவிக்கிறதே
அம்மா! எமைவிட்டு எங்குசென்றீர்?
ஆண்டுகள் பல அகன்றோடினாலும்
உண்டுமது நினைவு நெஞ்சைவிட்டகலாது.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்!

பிள்ளைகள்: சுதன் , தீபன்
சிவாஜினி
மருமக்கள்:இராஜேஸ்வரன்
தவராணி

க.அம்பிகைபாலன்
பழைய பொலிஸ்நிலைய வீதி
**சுன்னாகம்**

### ஆரம்ப வகுப்பு மாணவருக்குஉணவு வழங்கவில்லை

தென்மராட்சி,செப்.10

பாடசாலைகளில் மூன்றாம் தவணை ஆரம்பமாகி இரு வாரங்களாகியும் இதுவரை ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு மதியஉணவுவழங்கப்படவில்லை எனப் பெற்றோர் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக உரிய கல்வித் திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு கேட்டபோது மூன்றாம் தவணைக்குரிய மதிய உணவுக்கான பொருள்கள் இன்னமும் வந்து சேரவில்லை எனத் தெரிவித்தனர்.

(9-117)

### சட்டவிரோத மது விற்பனை

தென்மராட்சி,செப்.10

அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாக சாராயம் மற்றும் கள் விற்பனை செய்த 7 பேருக்கு 49 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றில் மதுவரித் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த நீதிவான், அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்த நால்வருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதமும்கள் விற்பனை செய்த மூவருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதமும் அபராதம் விதித்தார்.

(9-117)

### கலையரங்கு நிர்மாணம்

தென்மராட்சி,செப்.10

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் ஐந்து லட்சம் ரூபா செலவில் கலையரங்கு நிர்மாணிக்கப்படவுள்ளது.

இக்கட்டடத்திற்கான அடிக்கல் கடந்த புதன்கிழமை வித்தியாலய அதிபர் ச.ஞானலிங்கத்தினால் நடப்பட்டது.

தற்போது வெளிநாடொன்றில் வதியும் வித்தியாலய பழைய மாணவர் ஒருவரால் இக்கட்டட நிர்மாணத்திற்கு நிதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(9-117)

### பயிற்சி நிறைவு

யாழ்ப்பாணம்,செப்.10

நோர்வேயின் நிதியுதவியுடன் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் நடத்தப்பட்ட வர்ணம் தீட்டும் பயிற்சியின் நிறைவுவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோண்டாவில் மேற்கு வேதபாராயண சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

பயிற்சிநெறியில் ஈடுபட்டோரினால் வர்ணம் தீட்டுதல் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட பொருள்களும் கண்காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

(9-ரி)

# கேள்வி கோரல்கள்

**இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு**
**பெருந்தெருக்கள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## பருத்தித்துறை கிழக்கு கடற்கரை வீதியின் புனர்நிர்மாணத்திற்கான கேள்விகோரல்கள் அறிவித்தல்

*சர்வதேச ஒத்துழைப்பிற்கான*
*ஜப்பான் வங்கியின் (JBIC) நிதி வழங்கல்கள்*

**உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலைகோரல்கள்**

01. பருத்தித்துறை கிழக்கு, கடற்கரை வீதியின் புனர்நிர்மாண வேலைக்கான மூடிய கேள்விகோரல்களை மாகாணப் பணிப்பாளர் கேள்விச்சபையின் சார்பாக மாகாணப் பணிப்பாளர், வ-கி (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகார சபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் பெற்றுக்கொள்வார்.
 கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 30.09.2005 அன்று பிற்பகல் 2 மணியுடன் முடிவடையும்.
 கேள்விப் பத்திரங்களைத் தயாரிப்பதற்குரிய படிவங்களை பின்வரும் காரியாலயங்களில் பெற்றுச் சமர்ப்பிக்கவேண்டும்.
 I. மாகாணப் பணிப்பாளர் வ-கி (வ) அலுவலகம், கடற்கரைவீதி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.
 II. பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.
 III. மாகாணப் பணிப்பாளர் வ-கி(வடக்கு) அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கண்டிவீதி, வவுனியா.
 கேள்விப் பத்திர ஆவணங்கள் 08.09.2005 தொடக்கம் 29.09.2005 வரை மீள் அளிக்கமுடியாத வைப்புத் தொகையான 750.00 (பெறுமதிசேர் வரி உள்ளடங்கலாக) செலுத்திப் பெறவேண்டும்.
02. தகுதிவாய்ந்த கேள்விகோரல்களைக் கோருபவர்கள் பின்வரும் தகைமை பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.
 அ. கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணித்தல் துறையில் தரம் M - 6 இல் அல்லது அதற்குமேல் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
 ஆ. கேள்விகோரல் விலை கோருபவர் இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தில் (NCASL) செல்லுபடியாகும் ஒழுங்கான உறுப்புரிமையை கேள்வி கோரல் படிவம் பெற்றுக்கொள்ளும் பொழுதும் ஒப்பந்தத்தை வழங்கும் பொழுதும் கொண்டிருத்தல் வேண்டும். கேள்விகோரல் ஆவணங்களைப் பின்வரும் அலுவலகங்களில் இலவசமாகப் பார்வையிடமுடியும்.
 I. மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
 II. மாகாணப் பணிப்பாளர் வ-கி (வ) அலுவலகம், கண்டி வீதி, வவுனியா.
04. முன்கேள்விகோரல் கூட்டம் 21.09.2005 அன்று காலை 10 மணிக்கு மாகாணப் பணிப்பாளர் வ-கி(வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.
05. கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்விகோரல் முடிவுதிகதியில் இருந்து 120 கலண்டர் நாள்கள் வரை செல்லுபடியாக இருக்கும்.
06. கேள்விப் பாதுகாப்புப் பணமான ரூபா 60,000 உரிய பாதுகாப்புப் பத்திரம் கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைத்திருத்தல்வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய பாதுகாப்புப் பத்திரம் இல்லாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
07. மூடி ஒட்டப்பட்ட கேள்விப் பத்திர ஆவணங்கள் மாகாணப் பணிப்பாளர் வ-கி (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண காரியாலயத்தில் மேற்குறிப்பிடப்பட்ட முடிவு காலத்திற்கு முன் சேர்ப்பிக்கப்படவேண்டும்.
08. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக மாகாணப் பணிப்பாளர் வ-கி(வடக்கு), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரைவீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும்.
 கேள்விகோரல் கோருபவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாகி இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
09. மேலதிக விவரங்களைப் பின்வரும் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களுடன் தயவுசெய்து தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளவும்.

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|
| மாகாணப் பணிப்பாளர் வ-கி(வ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரைவீதி, யாழ்ப்பாணம். | 021-2222517 |
| மாகாணப் பணிப்பாளர் வ-கி(வ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கண்டிவீதி, வவுனியா. | 024-2222826 |
| அல்லது | |
| பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம். | 021-2222968 |

**மாகாணப் பணிப்பாளர் வ-கி (வடக்கு),**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கடற்கரை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-44889)

# லண்டன், காஷ்மீர் தாக்குதல்களுக்கு பாகிஸ்தான் தீவிரவாதிகளே காரணம்



## பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் குற்றச்சாட்டு

புதுடில்லி,செப்ரெம்பர்10

**லண்டன், காஷ்மீர், ஆப்கானிஸ்தான் ஆகிய பகுதிகளில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களுக்குப் பாகிஸ்தான் தீவிரவாதிகளே காரணம்.**

**இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர்.**

இரண்டுநாள் சுற்றுப் பயணமாக இந்தியா வந்த பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் ஜனாதிபதி அப்துல் கலாம், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன்சிங் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

இதன் பின்னர் அவர் புதுடில்லியில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது:-

லண்டனில் கடந்த ஜூன் மாதம் தீவிரவாதிகள் அடுத்தடுத்து வெடிகுண்டு தாக்குதல் நடத்தினார்கள். இதனால் இங்கிலாந்து முழுவதுமே அதிர்ச்சியில் உறைந்து விட்டது. இது போன்ற தீவிரவாதம் தான் காஷ்மீர் மற்றும் ஆப்கானில் நடைபெற்று வருகிறது.

இப்படிப்பட்ட வன்முறைகள் விரும்பத்தகாதவை. மதத்தை மையமாக வைத்து தீவிரவாதத்தில் ஈடுபடுவது சரியில்லை. லண்டன், காஷ்மீர், ஆப்கானில் தாக்குதல் நடத்தி வரும் தீவிரவாதிகள் அனைவரும் ஒரே அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று நான் நம்புகின்றேன்.

லண்டன் குண்டு வெடிப்பில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலானவர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் அல்லது பாகிஸ்தானில் பயிற்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களது கலாசாரம் மற்றும் கொள்கை தீவிரவாதத்தை வளர்த்து விடுகிறது.

தீவிரவாதிகளின் பாதை சரியல்ல. அவர்கள் பாடம் கற்பிக்க வேண்டும் என்று எண்ணி செயல்பட்டு வருகிறார்கள். இதை தடுக்க பாகிஸ்தான் தீவிரமாகக் களம் இறங்கவேண்டும். இது ஒரு முக்கியமான வேலை. தற்போது பாகிஸ்தான் அதிபர் முஷாரப் இந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அவரது முயற்சியை நான் பாராட்டுகின்றேன்.

லண்டன் குண்டு வெடிப்பை பார்த்த பிறகு தான் தீவிரவாதத்தால் இந்தியா சந்தித்து வரும் பிரச்சினை தெளிவாகத் தெரிந்தது. ஒரு பிரச்சினைக்கு வன்முறை மட்டுமே தீர்வல்ல. அதை தீர்க்க முயற்சி செய்யாமல் அப்பாவிப் பெண்கள் மற்றும் குழந்தைகளை கொல்வதை ஒரு போதும் அங்கீகரிக்க முடியாது.

சர்வதேச தீவிரவாதிகள் தங்கள் ஆதரவாளர்களை ஈராக்கிற்கு அனுப்பி தாக்குதல் நடத்தி வருகிறார்கள். ஈராக்கில் மட்டுமல்லாமல் ஆப்கான், பலஸ்தீனம், காஷ்மீர் மற்றும் பொஸ்னியா ஆகிய இடங்களிலும் இவர்களது தாக்குதல் நடந்து வருகிறது. இதை ஒழிக்க கூட்டுமுயற்சி தேவை - என்றார் அவர். (8)

## ஊழல் புகார் அதிகரிப்பு: உக்ரைன் அரசு கலைப்பு

கிவ்,செப்.10

உக்ரைன் நாட்டின் அரசை அந்நாட்டு அதிபர் விக்டர் யுஷென்கோ கலைத்துள்ளார்.

உக்ரைன் அரசு மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. 'அதிபரின் ஆலோசகர்கள் அனைவரும் ஊழல் பேர்வழிகளாக உள்ளனர். இந்த அரசில் நான் அங்கம் வகிக்க விரும்பவில்லை' என்று கூறி உக்ரைன் துணை பிரதமர் நிகோலாய் டொமென்கோ நேற்றுமுன்தினம் ராஜினாமாச் செய்தார். இதைத் தொடர்ந்து உக்ரைன் அரசைக் கலைக்க அதிபர் விக்டர் யுஷென்கோ உத்தரவிட்டார்.

உலக அரங்கில்



இந்தியாவின் தமிழ்நாட்டிலுள்ள வேளாங்கன்னி மாதா திருத்தலத்தின் வருடாந்த திருவிழா கடந்த 8ஆம்திகதி நடைபெற்றது. இதன் முன்னோடியாக கடந்த 7ஆம் திகதி நற்கருணைப் பெருவிழாநடைபெற்றது. இதன்போது ஆலயம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளதையும் பக்தர்கள் கூடிநிற்பதையும் படத்தில் காணலாம்.

# 38 போர் விமானங்களை ரஷ்யாவிடம் வாங்குகிறது சீனா

மொஸ்கோ,செப்.10

ரஷ்யாவிடமிருந்து 38 போர் விமானங்களை வாங்குவதற்கு சீனா சம்மதித்துள்ளது. இதற்கான ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் கையெழுத்தானது.

சீன இராணுவ அமைச்சர் காவோ கங்சுவான் ரஷ்யா சென்றுள்ளார். இருதரப்புக்கும் இடையே இராணுவ ஒத்துழைப்புக் குறித்து 2 நாடுகளும் பேச்சு நடத்தின. ரஷ்ய இராணுவ அமைச்சர் செர்ஜில்வனோவுடன் நடத்திய பேச்சுக்களில் ஏற்பட்ட முன்னேற்றத்தைத் தொடர்ந்து 38 போர் விமானங்களை 15 ஆயிரம் கோடி ரூபாவுக்கு வாங்குவதற்கு சீனா சம்மதித்தது. இதற்கான ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையெழுத்திட்டன.

போக்குவரத்து விமானங்களையும் எரிபொருள்களை நிரப்ப உதவும் விமானங்களையும் சீனா வாங்குவதற்கு இணங்கியுள்ளது.

கடந்த மாதம் சீனாவும் ரஷ்யாவும் சேர்ந்து இராணுவ ஒத்திகைகளை மேற்கொண்டன. அடுத்த ஆண்டு இந்த இரு நாடுகளும் சேர்ந்து பெரிய அளவில் கூட்டு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளன. (8)

## தொற்றுநோய்கள் பரவும் அபாயம்

# நியூ ஓர்லியன்ஸ் நகர மக்களை கட்டாயமாக வெளியேற்ற உத்தரவு

நியூ ஓர்லியன்ஸ்,செப்.10

சூறாவளியால் பாதிக்கப்பட்ட நியூ ஓர்லியன்ஸ் நகரில் இருந்து எஞ்சியிருப்போர் அனைவரையும் கட்டாயமாக வெளியேற்ற வேண்டும் என அந்நகர மேயர் ரே நாகின் உத்தரவிட்டுள்ளார்.

வெளியேற்றுவதற்கான அதிகாரம் பொலீஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேயர் ரே நாகின் தெரிவித்ததாவது:-

சூறாவளியாலும், வெள்ளத்தாலும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நியூ ஓர்லியன்ஸ் நகரில் குடிதண்ணீர் நஞ்சாகிவிட்டது.

வாயுக் கசிவு ஏற்பட்டுள்ளதால் பல இடங்களில் வெடிவிபத்து ஏற்படும் ஆபத்து நிலவுகிறது.

நல்ல தண்ணீருக்கு வழியில்லை. இறந்தவர்களின் சடலங்களைக் கடிக்கும் கொசுக்களால் நோய் பரவும் ஆபத்துள்ளது. இனியும் நகரில் தங்கியிருப்பது எந்த விதத்திலும் பாதுகாப்பானது இல்லை.

வீடுகளை விட்டு வெளியேற மறுப்பவர்களிடம் சென்று மீட்புப் பணியாளர்கள் வெளியேறக் கூறும்போது அவர்களைத் திட்டி அனுப்பிவிடுகின்றனர்.

எனவேதான், பொலீஸாரைக் கொண்டு அவர்களைக் கட்டாயமாக வெளியேற்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (8)

## அமெரிக்காவில் கத்தரீனாவின் தாக்கம்

# நான்கு லட்சம் வேலைவாய்ப்பு பறிபோகிறது நிவாரணத்துக்கு 95 ஆயிரம் கோடி ரூபா தேவை

வொஷிங்டன்:

வல்லரசு நாடான அமெரிக்காவில் சூறாவளி வீசியதில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இறந்துவிட்டனர் என்ற தகவல் ஒரு புறமிருக்க, பொருளாதார பாதிப்பும் அதிகளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

4 லட்சம் வேலைவாய்ப்புகள் பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது. நிவாரணப் பணிகளை மேற்கொள்ள 4 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபா தேவைப்படும் என கணக்கிடப்பட்டுள்ளது.

சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள அமெரிக்க நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் முதல் கட்டமாக 95 ஆயிரத்து 500 கோடி ரூபா நிதி கேட்டு அதிபர் புஷ் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்தார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் தற்போது மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம், மேலும் 4 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபா தேவை என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இத்தொகையை அனுமதிப்பது குறித்து நாடாளுமன்றத்தில் புஷ் இரண்டாவது முறையாக அறிக்கை தாக்கல் செய்வார், அதை நாடாளுமன்றம் ஏற்றுக்கொள்ளும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க நிதி அமைச்சக இயக்குனர் டக்ளஸ் ஹோல்ட்ஸ் ஹியாகின் நாட்டின் பொருளாதார பாதிப்புகள் குறித்து கூறியதாவது:-

சூறாவளியால் அமெரிக்கப் பொருளாதார வளர்ச்சியில் கண்டிப்பாக பாதிப்புகள் இருக்கும். இருப்பினும், இந்த பாதிப்பு சமாளிக்கக் கூடிய வகையில் இருக்கும். இயற்கைச் சீற்றத்தால் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து மீள புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இந்தப் பணியால் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும். அதன்மூலம், வேலைவாய்ப்பு தேடுவோரின் பிரச்சினைகள் தீரும். இந்தப் பாதிப்பு உண்மையில் துன்பம் நிறைந்த எதிர்காலத்தை ஏற்படுத்தி விட்டது என்பதை ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும்.

சூறாவளிப் பாதிப்பால் நடப்பு ஆண்டில் ஒட்டு மொத்தமாக 4 லட்சம் வேலை வாய்ப்புகள் பறிபோகும். இதற்கு அடுத்த மாதங்களில், பாதிக்கப்பட்ட பகுதிகளை சேர்ந்தவர்கள் வீடுகளுக்கு திரும்புவர். வர்த்தக நிறுவனங்கள் செயல்படத் தொடங்கும். மறு சீரமைப்புப் பணிகள் ஆரம்பமாகும். இதனால் வேலைவாய்ப்பு வசதிகள் பெருகும் - என்றார். (8)

# 371 இந்தியக் கைதிகளை பாக்.விடுதலை செய்கிறது

இஸ்லாமாபாத்,செப்.10

பாகிஸ்தான் சிறைகளில் இப்போது 388 இந்தியர்கள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் மீனவர்கள். அவர்களில் 371 பேர் எதிர்வரும் 12 ஆம் திகதி விடுதலை செய்யப்படுகிறார்கள்.

'வாகா' எல்லையில் இவர்கள் இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவார்கள். இந்தத் தகவலை பாகிஸ்தான் உள்துறை செயலாளர் செய்யது கமால் ஷா தெரிவித்துள்ளார்.

இதேபோல் இந்திய சிறைகளில் உள்ள பாகிஸ்தான் கைதிகளும் விடுதலை ஆகிறார்கள். பாகிஸ்தான் கைதிகள் ஒக்ரோபர் மாதம் விடுதலை செய்யப்படுவார்கள். (8)

# அல்கெய்டா தீவிரவாதிகள் ஐவர் சவூதி அரேபியாவில் சுட்டுக்கொலை

சவூதி அரேபியாவில் குடியிருப்புப் பகுதியில் மறைந்து இருந்த அல்-கெய்டாத் தீவிரவாதிகள் ஐந்து பேர் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மூன்று நாள்களாக அப்பகுதியில் நடந்த தொடர் துப்பாக்கிச் சண்டைக்கு பிறகே தீவிரவாதிகளை அழிக்க முடிந்தது' என்று உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஈராக் மீது அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படை போர் தொடுத்த பிறகு, சவூதி அரேபியாவில் தங்கியிருக்கும் அமெரிக்கர்கள் மீது தீவிரவாதிகள் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அல்- கெய்டா தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் அமெரிக்கர்களை கடத்திச் செல்வது, பின்னர் அவர்களை கொலை செய்வது போன்ற செயல்களில் ஈடுபட்டிருந்தனர். இதையடுத்து, தீவிரவாதிகளை வேட்டையாடும் பணியில் சவூதி அரேபிய பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்நிலையில், ஐந்து தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாக சவூதி உள்துறை அமைச்சகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. (8)

# மசகு எண்ணெய் விலை மீண்டும் அதிகரித்தது

சிங்கப்பூர்,செப்.10

ஆசிய சந்தையில் மசகு எண்ணெயின் விலை மீண்டும் உயர்ந்தது. கடந்த புதன்கிழமை பீப்பா ஒன்றுக்கு 64.37 அமெரிக்க டொலராக மசகு எண்ணெய் விலை இருந்தது. ஆனால் கடந்த வியாழக்கிழமை 64.60 டொலராக அது உயர்ந்தது. அமெரிக்காவில் ஏற்பட்ட சூறாவளியால் எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டது. இருப்பினும் நிலைமையைச் சமாளிக்க அவசரகால கையிருப்பாக தான் வைத்திருக்கும் மசகு எண்ணெயை வெளியிட அமெரிக்கா சம்மதித்தது. அதுபோல 70 லட் சம் பீப்பா மசகு எண்ணெயை குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு விநியோகித்துள்ளது. (8)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

குறோட்டன், பாம்ஸ், அரக்கெரியா, சைபிரஸ், றெசீனா, பாங்கொக் போகன்விலா (கடதாசிப்பூ), செவ்வரத்தை, மூசந்தாஸ் (வெள்ளை, பிங்), அரலியா, ரொரண்டா ஆகிய பூங்கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.பாக்கியநாதன், 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 6563. (39627)

## வீடும் வளவும் விற்பனைக்கு

மானிப்பாய் Green Hospital இற்கு அருகில் இணுவில் வீதியில் 4½ பரப்புடன் கூடிய வீடு வளவு உடனடியாக விற்பனைக்குண்டு. வசதியான, நிம்மதியான இடம். எவரும் தொடர்பு கொள்ளலாம். வீட்டுத்தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0779084848, 0776648688, 021-2223484. (39701)

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியில் புதிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.ஜெயபாலசிங்கம், 105, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (சி-45081)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

கிறேட் டயன் நாய்க்குட்டி விற்பனைக்கு. தொடர்பு: New R.S.K Farm மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில் New R.S.K Farm பெரிய மதவடி, மானிப்பாய் றோட் உடுவில். (39790)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் 1 Kg 180/- சுத்தம் செய்தது. 270/- மற்றும் கல்பேட்ஸ், புறொயிலர் குஞ்சுகள் கோழித்தீன் என்பனவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: New R.S.K Farm மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில் New R.S.K Farm பெரிய மதவடி, மானிப்பாய் றோட், உடுவில். (39789)

## ஜோதிடம்

கைரேகை, ஜாதகம் கொண்டு உங்களின் எதிர்காலப் பலன்களை அறிந்துகொள்ளவும் உங்கள் வாழ்வில் வெற்றி பெறவும் ஆலோசனை பெற்றுக்கொள்ளவும் ஒரு முறை நாடுங்கள். இந்தியப் பரம்பரை ஜோதிடர் அருள் வாக்கு அம்பிகா அம்மா, 121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (39656)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள் (44/-) பேட்டுக்குஞ்சுகள் 19.09.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக்கிளைகளிலும், சுட்டி பாம்- வட்டுக்கோட்டை, சிவகலை களஞ்சியம் - கோப்பாய், உடுவில் பாம் சென்ரர்-ஆலடி முருகன்- சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39763)

## கோவிலில் திருட்டு

கைதடி தெற்கு தக்கடியன் புலவுஞான வைரவர் ஆலய விடுதியின் பின் பக்க ஜன்னல் அண்மையில் உடைக்கப்பட்டு அங்கிருந்த துவிச்சக்கர வண்டி, கசெற் றேடியோ, உடுப்பு வகைகள் உட்பட பல பொருள்கள் திருடப்பட்டிருக்கின்றன.

இதேவேளை, நாவற்குழி மாதா கோயில் உண்டியலும் அண்மையில் உடைக்கப்பட்டு உண்டியலிலிருந்த பணம் அபகரிக்கப்பட்டுள்ளது. (ஐ-75)

## A/L DAY CLASS

கலைப்பிரிவிற்கான முன்னணி ஆசிரியர் குழு

| | |
|---|---|
| TAM. : நாக.தமிழிந்திரன் | LOG. : S.S.மனோகரன் |
| H.C . : T. ஸ்ரீஸ் | GEO. : S.R.பாலா |
| DRA.: T.J.சுதன் | CRI. : S.மல்லிகா |
| Pal.Sc.: T.விமலா | ECO.: P.மோகன் |
| | S.ஜெயக்குமார் |

ஆரம்பம்: 12.09.05 திங்கள் காலை 7மணி [ப.நே]

(39786) **BEACON** யாழ். நகர். (21.16.17)

## சேவைநலன் பாராட்டு

யாழ்.செட்டித்தெரு மெ.மி.த.க பாடசாலையின் அதிபராக அரும்பணியாற்றி 01.09.2005 அன்று ஓய்வுபெற்ற

**திரு.வீ.ந.சிறீதரன்**

S.L.P.S 2:1



அவர்களின் தன்னலம் கருதாத சேவையைப் பாராட்டுவதோடு, அவர் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்

ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகம்

யா/செட்டித்தெரு மெ.மி.த.க.பாடசாலை

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(39707) (21.16.17)

## 9ஆம் ஆண்டு நினைவலைகள்



**சிவஞானம் சிவநேசன்**

**கப்டன் செங்கண்ணன் [அசோ]**

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 05-10-1972 | 30-09-1995 |

இளம் வயதில் புலியாகி
இன் தமிழின் துயர்களைந்த
செங்கண்ணன் தங்கநிகர் இளமதியே!
உளமதிலே அசோ வென்று நாம்
துதித்த கொள்கைப் பெரும் சுடரே
உன் நினைவால் தவிக்கின்றோம்

21, நெடுங்குளம் வீதி,
கொழும்புத்துறை.

- குடும்பத்தினர்.

(39782)(21.16.17)

## 100 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
28.03.1997

மறைவு
29.05.2005

**ஸ்ரீ.தேவப்பிரியன் [தனுசன்]**

பாசத்தோடு வளர்த்தேன் தேவப்பிரியா?
பார்த்துப் பார்த்து வளர்த்தேன்
ஒவ்வொரு பொழுதும் பார்த்து ரசித்தேன்
நூறு நாள்கள் ஓடிப் போனது ஐயா!
திரும்பி வருவாய் என தினமும் வாசலில்
உமது வரவை எதிர்பார்த்துக் காத்து
இருக்கின்றேன் தனுஷா. அம்மாவின்
இரண்டு விழியிலும் ஓடும் நீரை துடைக்க
வருவீரா! தேவப்பிரியனே எனது கனவை நனவாக்க ஓடி வருவீரா?
அண்ணா தேடுகின்றான். பிள்ளை காணமல் தவிக்கின்றான்
ஆறுதல் சொல்ல வரமாட்டானோ
தனுக்குட்டி. உமது இழப்பை எம்மால் தாங்க முடியவில்லையே!

73/1, சந்தனமாதா கோவில் வீதி,
சண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

என்றும் பிரியாது வாழும்:
அப்பா (ஸ்ரீ), அம்மா (சித்திரா),
அண்ணா (ஜவிதன்).

(39781) (39.16.17)



# தரமான உணவுப் பொருள்களையே கூ.சங்கங்கள் விநியோகிக்க வேண்டும்

## தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் விக்கிரமன் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,செப்.10

கூட்டுறவுச் சங்கங்கள் தரமான உணவுப் பொருள்களையே கொள்வனவு செய்து விநியோகிக்கவேண்டும். இது தொடர்பில் சங்கங்கள் விழிப்புடன் செயற்படவேண்டும்.

- இவ்வாறு தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் ச.விக்கிரமன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் விவசாய நுகர்வோர் கூட்டுறவுச் சங்க சமாச கேட்போர் கூடத்தில் சுகாதாரமும் கூட்டுறவாளர் பங்களிப்பும் என்ற தலைப்பில் இடம்பெற்ற கூட்டுறவாளர்களுடனான சுகாதாரக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுகாதாரம் என்பது உணவு, நீர் மற்றும் கழிவகற்றலில் தங்கியுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களூடாகவே பெருமளவு உணவுப் பொருள்கள் மக்களைச் சென்றடைகின்றன.

மக்கள் ஆரோக்கியமான சுகதேகியாக வாழவேண்டும் எனும் நோக்கோடு தலைவரின் பணிப்புக்கமைய 1995ஆம் ஆண்டு தமிழீழ உணவுச் சட்டம் ஆக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

சுகாதார மேம்பாட்டில் கூட்டுறவாளர்களின் பங்களிப்பு முக்கியமானது.

தென்னிலங்கையிலிருந்து தரமற்ற பொருள்கள் தமிழர் தாயகத்திற்கு கொண்டுவரப்படுகின்றன. பொருள்களின் தரம் தொடர்பில் கூட்டுறவுச் சங்கங்கள் விழிப்பாக இருப்பது முக்கியமானது.

கூட்டுறவுச் சங்கங்கள் தரமான பொருள்களையே மக்களுக்கு கொள்வனவு செய்து விநியோகிக்க வேண்டும்.

அத்துடன், கூட்டுறவுச் சங்கங்கள் தமது உணவுக் களஞ்சியங்களைச் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். காலாவதியான பொருள்களை விற்பனை செய்வதை முற்றாக தவிர்க்கவேண்டும்.

தென்னிலங்கை வர்த்தகர்கள் தமது பொருள்களை விற்பனை செய்யும் இடமாக வடபகுதியை கொண்டுள்ளனர். இதன் காரணமாகத் தரமற்ற பொருள்கள் வட பகுதிக்குள் கொண்டுவரப்படுகின்றன.

சூழல் மாசடைவதற்கு பொலித்தீன் கழிவுகள் முக்கியமான காரணிகளாக உள்ளன.

இதன் காரணமாக அழியக்கூடிய பொலீத்தீன் வகைகள் உற்பத்தி செய்யும் தொழிலகம் ஆரம்பிக்கபட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இத்தகைய கலந்துரையாடல்கள் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய இடங்களிலும் இடம்பெற்றுள்ளன. (த)

## வளலாய் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள பாடசாலையை மீள இயக்கக் கோரிக்கை

வளலாய் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ள அமெரிக்க மிஷன் பாடசாலையினை மீள இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கவும்.

- இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுவிடயமாக, சிவனேசன் எம்.பி. எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்ப தாவது:-

கடந்த போர்க்கால சூழ்நிலையின் போது உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் உள்வாங்கப்பட்ட மேற்படி பாடசாலை கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இயங்கவில்லை.

தரம் ஒன்று தொடக்கம் தரம் 8 வரை வகுப்புக்களைக் கொண்டுள்ள இப்பாட சாலையின் நிலை தற்போது பரிதாபகரமாகவுள்ளது. இதேவேளை- இந்தப்பாடசாலை இயங்காமையால் வளலாயில் மீளக் குடியமர்ந்துள்ள மாணவர்கள் நீண்டதூரம் நடந்து சென்று இடைக்காடு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, வளலாய் மாணவர்களின் பரிதாப நிலையைக் கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுத்துக் குறிப்பிட்ட பாடசாலை மீள இயங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (எ-13)

## பண்ணையில் நிர்மாணிக்கப்பட்டு வரும்
# மார்புநோய் சிகிச்சை நிலைய கட்டடப் பணிகள் யாவும் பூர்த்தி

வலி.தென்மேற்கு,செப்.10

யாழ்.பண்ணைப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் யாழ். மார்புநோய் சிகிச்சை நிலையத்தின் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

விரைவில் இக்கட்டம் திறந்து வைக்கப்படவுள்ளது. தற்போது யாழ். மணிக்கூட்டு வீதியில் தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கிவரும் மார்புநோய் சிகிச்சை நிலையம் விரைவில் அங்கு இடம்மாற்றம் செய்யப்பட்டு இயங்கும் என்று யாழ். சுகா தாரத் திணைக்கள வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இதேவேளை -

பண்ணையில் நிறுவப்பட்டு வரும் யாழ். சுகாதாரத் திணைக்களத்தின் பிராந்திய மருந்துக் களஞ்சியத்திற்கான கட்டடமும் பூர்த்தியடையும் நிலையில் உள்ளது.

கடந்த யுத்தகால அனர்த்தங்களின்போது பண்ணைப் பகுதியில் செயற்பட்டு வந்த மேற்படி மார்புநோய் சிகிச்சை நிலையத்தின் கட்டடமும் பிராந்திய மருந்துக் களஞ்சியக் கட்டடமும் பலத்த சேதமடைந்திருந்தன என்பது தெரிந்ததே. (த-135)

## வெள்ளிவிழா

யாழ்ப்பாணம்,செப்.10

மானிப்பாய் 'அசெம்பிளி ஒப் கோட்டி'ன் வெள்ளிவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

நன்றி ஆராதனையுடன் நிகழ்வுகள் நடைபெறும். (த-202)

# குடாக்கடலில் போடப்படும் பட்டி வலைகளில் மீன் திருட்டு




குருநகர்,செப்.10

யாழ். குடாக்கடல் பகுதியில் தொழில் செய்யும் மீனவர்களது பட்டி வலைகளில் இருந்து மீன் திருடப்படும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருவதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

இக்கடற்பகுதியில் பட்டி வலைகள் அமைத்து மீன்பிடிப்பவர்கள் வலைகளை விட்டுவிட்டே வருகின்ற னர். நாளாந்தம் தமது வலைகளில் மீனைச் சேகரித்துவரும் இம் மீனவர்கள் தொழிலுக்குச் செல்லத் தாமதமாகும் நாள்களில் இவர்களது பட்டிவலைகளில் சேருகின்ற மீன்கள் களவாடப்படுகின்றன என்று பாதிப்படைந்த மீனவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு மீன்களைக் களவாடும் சிலர் அண்மையில் குருநகரிலுள்ள கடற்றொழிலாளர் சங்கம் ஒன்றால் விசாரணைக்குள்ளாக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப் பட்டது. (த-51)

## கலந்துரையாடல் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,செப்.10

'அபிவிருத்திப் பணிகளில் இணைந்து செயற்படல்' தொடர்பான கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால், மேற்படி கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் உள்ள அலுவலகத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

தவிர்க்கமுடியாத காரணத்தினால் இக்கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது எனவும் கலந்துரையாடல் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (3-204)

## பரிசாரகர் பயிற்சி

வலி.தென் மேற்கு,செப்.10

பரிசாரகர்கள் பயிற்சிநெறி ஒன்று அடுத்த மாதம் யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் நடைபெறவுள்ள அப்பயிற்சிக்கு சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றிவரும் சாதரண தொழிலாளர்கள் மற்றும் சுகாதாரத் தொழிலாளர்கள் மத்தியிலிருந்து 50 பேர் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டுள் ளனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள அரச வைத்தியசாலைகளில் நீண்டகாலமாக நிலவிவரும் பரிசாரகர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காகவே இப்பயிற்சிநெறி நடத்தப்படவுள்ளதாக யாழ். சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (த-135)

## உள்ளூராட்சி வார நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.10

வலிகாமம் தெற்குப் பிரதேச சபை, உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பிரதேச சபை உத்தியோகத்தர்கள் தவிர்ந்த பொதுமக்களுக்கான பொது அறிவுப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

வலி.தெற்குப் பிரதேச சபை எல்லைக்குள்வசிக்கும் சகலரும் சபையால் விநியோகிக்கப்படும் வினாப் பத்திரத்தைப் பெற்று விடைகளை எழுதி, எதிர்வரும் 16 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் பிரதேச சபை உப அலுவலகங்கள், பொது நூலகங்கள் ஆகியவற்றில் கையளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

விடைத்தாள்களை நீளக் கடித உறையிலிட்டு 'பொது அறிவுப் போட்டி, செயலாளர், வலி.தெற்குப் பிரதேச சபை, சுன்னாகம்' என முகவரியிட்டு, போட்டியாளரின் பெயர் விவரங்களையும் எழுதி ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-202)



யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்து புனரமைக்கப்பட்ட சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மட்டுவில் சோமஸ்கந்தா கிளையினை சங்கத் தலைவர் கு.ந.பாலச்சந்திரன் நாடா வெட்டித் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் சங்கப் பொது முகாமையாளர் சோ.சிறிதரன் மற்றும் கிளைக் குழு உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். (படம் : தென்மராட்சிச் செய்தியாளர்)

# காக்கைதீவுப் பசளைத் தொழிற்சாலை வெகுவிரைவில் செயற்பட ஆரம்பிக்கும்

## மாநகர ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,செப்.10

காக்கைதீவில் கொட்டப்பட்டு வருகின்ற குப்பைகளைக் கொண்டு பசளை தயாரிக்கும் பொருட்டு அங்கு அமைக்கப்பட்டுவரும் தொழிற்சாலை வெகுவிரைவில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இத்தகவலை யாழ்.மாநகர ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

நகரப் பகுதியில் உள்ள குப்பைகள் மாநகர சபையினரால் அகற்றப்பட்டு காக்கைதீவில் கொட்டப்பட்டு வருகின்றன. அவற்றைக் கொண்டு பசளை தயாரிப்பதற்கான தொழிற்சாலை ஒன்று இந்த ஆண்டு முற்பகுதியிலிருந்து அங்கு அமைக்கப்பட்டு வருகின்றது.

'நொராட்' நிறுவத்தினரால் 24 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவரும் இக்கட்டடம் அமைக்கும் பணிகள் விரைவில் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

பெரும்பாலும் இந்த ஆண்டு இறுதிக்குள் தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டு அடுத்த ஆண்டு ஜனவரி மாத முற்பகுதியில் பசளை தயாரிக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னாள் ஆணையாளர் கலாநிதி க.குணராசாவின் பதவிக் காலத்தில் இக்கட்டடத்தின் ஆரம்ப வேலைகள் ஆரம்பமாகின என்பது குறிப்பிடத்தக்கது. (9-13)

## நல்லூர் பாரதி வீதியில் நிறுவப்பட்ட
# குடிதண்ணீர்த் தொட்டிகள் பயன்படுத்தப்படாத நிலையில்

நல்லூர்,செப்.10

நல்லூர் பாரதி வீதியில் சர்வதேச நிறுவனம் ஒன்றினால் கட்டிக் கொடுக்கப்பட்ட குடிதண்ணீர்த் தொட்டிகள் கடந்த ஒரு வருடமாகப் பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளன.

இப்பகுதி மக்களின் குடிதண்ணீர் விநியோகத்திற்கென மேற்படி சர்வதேச நிறுவனம் மூன்று தொட்டிகளை அமைத்துக் கொடுத்திருந்தது.

தொட்டிகள் அமைக்கப்பட்டு ஒருவருடமாக அது பயன்படுத்தப்படாமையால் இப்போது அவற்றில் வெடிப்புகள்ஏற்படஆரம்பித்துள்ளது.

இது தொடர்பாக பாரதிமன்ற சனசமூக நிலையத்தினர் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கும் யாழ்.அரச அதிபர் ஆகியோருக்கும் அறிவித்திருந்த போதிலும் இதுவரை குடிதண்ணீர் விநியோகத்திற்கெனக் குறிப்பிட்ட தொட்டிகளைப் பயன்படுத்தும் நட வடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-111)

## மருத்துவ உபகரணங்கள் விநியோகம்

வலி.தென்மேற்கு,செப்.10

ஆஸ்திரேலியா அரசு ஐ.ஓ.எம் (I.O.M) திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்திலுள்ள அரச வைத்தியசாலைகளுக்கு ஒருதொகை வைத்திய உபகரணங்கள், சக்கர நாற்காலிகள் ஆகியவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

சங்கானை அரசினர் வைத்தியசாலை, வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலை, பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை, காரைநகர் அரசினர் வைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகளுக்கு கடந்த வியாழக்கிழமையன்று யாழ். சுகாதார திணைக்கள களஞ்சியப் பிரிவினால் மேற்படி உபகரணங்கள் மற்றும் சக்கர நாற்காலிகள் நேரடியாக வாகனம் மூலம் கொண்டுவரப்பட்டு விநியோகிக்கப்பட்டன. (த-135)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய பெருந்திருவிழாச் சிறப்பம்சம்

ஊருலகம் காப்பாய் உவந்து!

நல்வளே! நாமெல்லாம் நம்பிக்கை கூப்பிடும்
தெல்லியூர் சேர்ந்துள்ள தேவியே- எல்லவர்க்கும்
பேரருளைப் பெய்யும் பெருவிழாக் கோலத்தில்
ஊருலகம் காப்பாய் உவந்து.

- சிற்பி



அருள்மிகு துர்க்கை அம்மன் ஆலயம் - தெல்லிப்பழை




பாடு. பரவு. பணிசெய். தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க அனுசரணையுடன்

பொட்டென்றும் பிறையென்றும் நேர்த்திவைத்தோம்
இட்டவரம் தந்தெமைக் காா்!
- கவிஞர் துரையர்

விழா சிறப்புற வாழ்த்துவோர் :-
கரிகணன் பிறிண்டேர்ஸ்
424, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்
தொலைபேசி : 021 222 2717, 021 4590123

# யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

# பொன்விழா சிறப்பு மலர் 1955 - 2005

## 10.09.2005 சனிக்கிழமை

### அருள் ஆசிச் செய்தி



அன்புசார் பெருந்தகையீர்! யாழ்ப்பாணம் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் தனது 50 ஆவது ஆண்டை அடைந்திருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். 50 ஆண்டுகள் இப்பாடசாலை மாணவ சமுதாயத்தை கல்வியும் ஒழுக்கமும் பண்பும் கொண்ட மாணவர்களை உருவாக்கித்தந்த பெருமைக்குரியது. எல்லா மத மக்களையும் கல்வி கற்கும் வாய்ப்பை வழங்கிய இப் பாடசாலை பல்லாண்டு காலம் வாழவாழ்த்துகின்றோம். கல்வி ஒரு மனிதனை முழுமை யாக்குகின்றது. அதனிலும் இளமையில் கல்வியே பூரண மனிதனை நமக்கு தருகின்றது. வள்ளுவரும் -

"உடையார் முன் இல்லார் போல் ஏக்கற்றுங்
கற்றார் கடையரே கல்லாதவர்"

இக்குறள் நமக்கு உணர்த்துகின்றது. கல்வியின் உயர்வை கண்டு இப் பாடசாலை வருடத்திற்கு 80 இற்கு மேற்பட்ட மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய வைத்துள்ளது. இப்பாடசாலையின் 50 வருட வளர்ச்சியில் பங்கெடுத்துக்கொண்ட அதிபர்களை, ஆசிரியர்களை வாழ்த்துகின்றோம். இன்றைய அதிபர், ஆசிரியர்களை இறைவன் ஆசீர்வதிப்பாராக. பாடசாலை பல்லாண்டு காலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,**
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், ஆதீன முதல்வர்.

### MESSAGE FROM THE BISHOP



It is with joy and appreciation,I send my warm greetings to the principal, staff and students of St. John Bosco's Vidyalayam on the occasion of their golden jubilee.

The needs of the times were realized when, Fr. James declared open St. John Bosco's Vidya layam in 1955 Due to the sincere, dedicated and energetic efforts of the principals and staff the institution has grown to what it is today. It is counted as one of the leading primary school falling in line with modern trends in education.

The pioneers here to be most gratefully remembered for their dedication and hard labour. the students who here passed through there portals have been given a sound, moral, religious, intellectual and social education.

We are proud of what the school has achieved. We send you our best wishes for on going progress May God bless you richly in the year to come.

**Rt. Rev. Dr. Thomas Savundaranayagam**
Bishop of Jaffna.

### வலயக் கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி



**மாசு அகற்றும் மாதா**

யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் அப்பகுதி யிலிருக்கும் நலிவுற்ற மாணவர்களுக்கு அறிவுக் கண்ணைத் திறக்கும் ஆலயமாக விளங்கு கின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அதியுயர் பெறுபேறுகளைப் பெற்று யாழ்ப் பாணக் கல்வி வலயத்திற்கும், யாழ்ப்பாண மாவட்டத் திற்கும் பெருமை தேடித்தரும் கல்வி பயிலும் மாணவர்கள் முதற் தேர்ச்சியான ஒழுகலாறு சமயம் என்பதிற் சிறப்புத் தேர்ச்சியைப் பெறுவதால் வருங்காலச் சமுதாயத்தை இங்கு கற்கும் மாணவர்கள் ஒழுக்க விழுமியங்கள், பண்பாடு, கலாசாரம் என்பவற்றால் பேணிக்காப்பர் என்பதில் ஐயமில்லை.

அருட்சகோதரிகளால் நிர்வகிக்கப்படுவதால் பாடசாலை புறத்தூய்மை, அகத்தூய்மை என்பவற்றில் சிறந்து விளங்குகின்றது. இப்பாடசாலைக் கான உட்கட்டுமானம் மனிதவளம் என்பவற்றைத் தேடிப்பெறுவதில் முகாமைக் குழு அரும்பாடுபட்டு உழைப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இக்கலாலயம் பல்லாண்டு காலம் கல்வித் தொண்டாற்ற எனது பிரார்த்தனைகள்.

**வே.தி.செல்வரத்தினம்,**
வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

### Message from the Principal



Celebration of a jubilee is a time to remember and to give thanks for all the blessings that have been part of these years. Hence it gives me great joy to give this message at the significant hour of celebration of golden jubilee of St. John Bosco's.

I greatly appreciate the yeomen service rendered by the sisters and teachers of this school. Their dedication and immense contribution to educational and spiritual development of younger generation has been praise worthy.

They have installed in the youn g who passed through the portals of this school qualities such as discipline, faith, moral uprightness, self motivation, leadership qualities, duty consciousness, cheerfulness, creativity and capacity for hard work.

I recall with a deep sense of gratitude all parents well wishers and sponsors whose support and loyalty to the school, whose tremendous sacrifices and devotion, smoothened the rough and rugged road to success.

The challenge for today is to maintain these standards and keep pace with a world rapidly changing in every sector of activity technical, educational, social ethics, religion, life itself, so that anchored firmly on solid Christian principles we may march towards wholeness of life.

I do sincerely thank everyone, and all who tirelessly worked round the clock, to produce this jubilee souvenir.

God bless you

Rev. Sr.J.Selvarani

### Message from the Parish Priest



It gives me great joy to express my sincere appreciation to the principal staff, and students of the John Bosco's Vidyalayam, Jaffna on the 50th anniversary of the school. Your school is one of the leading primary school in Sri Lanka imparting discipline, human values, and solid foundation of initial knowledge to our children in Jaffna.

The seed sown by the Carmelite sisters with faith and commitment, has taken a deep root and giving a great harvest. I thank God to all the sisters and teachers who have laboured hard to nurture this school through out the past 50 years.

In the history of Jaffna this institution has endured and withstood great difficulties during the time of war, trusting in God's providence. It Marches forward to continue its service to Jaffna, and to the whole nation by forming well disciplined and responsible citizens. May this school continue its good work of serving the church society and the nation with renewed strength.

**Fr. T. Jesuthasan**
ST. JOHN THE BAPTIST CHURCH JAFFNA.

### Message from the Provincial Superior



Celebrating a golden jubilee is indeed a proud moment in the history of an institution. It gives me immense joy to send my congratulations and best wishes on this day of jubilation. It is right and just to give thanks to God, for the numerous graces and blessings St. John Bosco's Vidyalayam has received during the past years. St. John Bosco's school has grown in strength and vision by the inspiration of its founders and pioneers and all who followed them in the past years. Today it stands out as one of the reputed primary schools in the island.

Over the years since its inception St. John Bosco's has withstood various challenges successfully overcoming the difficulties, earning a reputation for learning.

Fifty years ago our founders who considered their work as a mission assigned from above, did their best to bring in the light of education. The credit goes to Rev. Fr. James who took the initiative to start the school with merely a she. The keen interest shown by Rt. Rev. Dr. Emilianuspillai, the Bishop of Jaffna then, is worth reording. He donated a piece of land for the school. We remember gratefully all the past principals who served the school, specially Sr. Stanislaus Mary who stood the test as the first principal.

Today St. Bosco Vidyalayam stands out as a very popular primary school and continues to care about the quality of life, safety and long term welfare of students who pass through the portals of this institution.

As we celebrate this jubilee our special thanks go to Sr. Selvarani, the present principal who has worked tirelessly to maintain the standard of education and discipline. We are proud of the past and happy about the present, vaulting ambitions and aspirations are about the future.

My sincere thanks to all the staff of the past and the present who have co-operated with our sisters to achieve the goals of education.

God bless you.

**Sr.M. Sunitha A.C.**
Provincial Superior
Apostolic Carmel

### முன்னாள் அதிபரின் ஆசிச் செய்தி



ஆயிரம் அன்னசாலைகளை அமைப்பதை விட், ஒரு கல்விக்கூடம் அமைப்பது அதி சிறந்தது என்று அழகாகக் கூறியிருக்கிறார். கல்வியின் சிறப்பையும், மகத்துவத்தையும் உணர்ந்த அறிஞர் பாரதியார் அந்த வகையில் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு முன் தோன்றி, வேரூன்றி, வளர்ந்து, தழைத்து ஓங்கி வளர்ந்து வரும் சென். ஜோண் பொஸ்கோ பாட சாலையை அனைவரும் அறிவோம்.

இற்றைக்கு ஐம்பது வருடங்களாக எத்தனை கோடி மாணவர்களை இக்கல்லூரி அவர்களின் ஆரம்பக் கல்வி வளர்ச்சியில் அறிவையூட்டி வளர்த்திருக்கின்றது. சற்று சிந்தித்துப் பாருங்கள். ஆலமர விழுதுகள் போல் சிறுவர்கள் தழைத்தோங்கிடத் தடைகளாக இருக்கும் சவால்களைக் களைந்து சரித்திரம் படைக்கும் ஒரு சாதனைக் களமாக இப்பாடசாலை விளங்குகின்றது. இதன் கருவிகளாக அதிபர்கள், ஆசிரியர்கள் இருந்திருக்கின்றார்கள், இருக்கின்றார்கள்.

சிறுவர் கல்வி விளையாட்டுக் கல்வியாக அமைந்தாலும், இது ஒரு பொறுப்பான பணியாகும். இப் பொறுப்பான பணியை கடந்த ஐம்பது வருடங் களாக எமது அதிபர்களும், ஆசிரியர்களும், மிகவும் பொறுப்புடனும் கண்ணியமுடனும் ஆற்றியதை ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சையில் பெறுபேறுகள் ஊடாக அனை வரும் அறிந்திருப்பீர்கள்.

நான் இப்பாடசாலையின் முன்னாள் அதிபர் என்ற வகையில் இப் பாடசாலையின் சிறப்பைக் கூறி அதை ஆசி கூறி வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கின்றேன். மேலும் பல வருடங்களுக்கு இப்பாடசாலை நமது சிறார்களுக்கு பணிகள் பல ஆற்றிட இறைவனைப் பிரார்த்திப்பதோடு, இப்பாடசாலையில் பணிபுரியும் தற்போதைய அதிபர் அருட்சகோதரி செல்வராணியையும், அவரின் ஆசிரிய குழாமையும் வாழ்த்தி ஆசியளிக்கின்றேன்.

**அருட்சகோதரி அன்ரனிற்றா ஏ.சி,**
முன்னாள் அதிபர், கார்மேல் மடம்.

### முன்னாள் அதிபரின் ஆசிச் செய்தி



முக்கனியின் சாற்றினோடு முத்தமிழின் தேன் கலந்து நாற்றிசையும் புகழ் மணம் பரப்பி நிற்கும் யாழ். குடாவின் தலைநகரில் அமைந்துள்ள தரம் மிக்க பாடசாலைகளில் புனித ஜோண் பொஸ்கோ பாடசாலையும் ஒன்றெனில் அது மிகையாகாது. நக்கா வீதி என்றதும் அத்துடன் ஜோண் பொஸ்கோ என்னும் நாமமும் கூடவே நினைவில் வந்[illegible]டும். இது வெறும் வார்த்தை மட்டுமன்று உண்மையும் அதுதான். யாரும் மறுப்பதற்கில்லை.

இப்பாடசாலை 1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதெனினும் 1957 ஆம் ஆண்டில்தான் கார்மேல் மடத்துக் கன்னியரால் பொறுப்பேற்கப்பட்டது. இப்பாடசாலையின் முதல் அதிபர் என்பதுடன் மூன்று தடவை இங்கு அதிபராகக் கடமையாற்றினேன் என்பதை எண்ணி இந்நன்நாளில் பெருமிதம் அடைகின்றேன்.

ஆரம்ப காலத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த இப் பாடசாலையின் வளர்ச்சிக்காக ஏணிப்படிகளாய் அரும்பாடுபட்டு உழைத்த அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் யாவருக்கும் இவ்வேளையில் நன்றி தெரிவிப்பதுடன், இந்தப் பொன்னான நாளைக் கண்டு மகிழ இன்றுவரை என்னை வாழவைத்த இறைவனை மனதாரப் போற்றுகின்றேன்.

இன்று இந்தப் பொன்விழாவைக் காணும் இப்பாடசாலை மணிவிழா, பவளவிழா, அமுத விழா, நூற்றாண்டு விழா யாவும் கண்டு மகிழ மனமார வாழ்த்துகின்றேன்.

முன்னாள் அதிபர்
**அருட்சகோதரி ஸ்ரனிஸ்லஸ் மேரிஅ.க**
புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.

### Message from the Past Principal



Jubilees are milestones giving hope and encouragement and it brings with it a message of joy and happiness.

With immense gratitude to God I send my warmest felicitation to St. John Boscos vidyalayam was begun as a small school half a century ago now we are happy to see that it has grown to be a school which is well recognized not only in the Jaffna peninsula but also in Sri Lanka. Inspite of all the difficulties that have come upon our school too as a result of the war situation, it has not only managed to survive, but also show remarkable progress. It have produced excellent results.

More than anything else the school has prepared young students to go to secondary school to continue their studies, it has laid the foundation for an all round growth in intellectual development, progress, in the good conduct and beheavier of students, and also moral refinement and spiritual enhancement.

This is the result of a cooperative effort of the teaching staff and parental support, as a post principal at the helm of offices of the school for nine years, it gives me a very special joy to associate myself today with the celebrations of the school's Golden Jubilee, it in my hope that during the coming years, the school will steadily progress especially in contributing to building a society of equality and fairness, justice and compassion, graciousness, love and fraternal harmony, these spiritual qualities will bring lasting luster to the school. They can be instilled in the young children when the teachers are dedicated and self sacrificing with the sole arm of enlivening the young minds with noble ideals, may St. John Bosco's grow from strength to strength and become a beacon of light to many in the peninsula and in Sri-Lanka.

May God bless the students, the staff the parents of the children and all well wishers, friends and benefactors, now and into the distant future.

Sr.M.Jerome A.C
Principal 25.02.1988 11.11.1996

### ஆசிச் செய்தி



**முன்னுக்கும் பின்னுக்கும்
இணையில்லாக் கூடம்**

கல்விப் பயணத்தில் கால் பதித்த ஐம்பதாண்டு களில் சொல்லிப் பெருமை பெறும் வகையில் சாதனை பல பதித்த புனித மிகு பொஸ்கோ வித்தியாலயத்தை இந் நாளில் வாழ்த்திட வார்த்தைகள் இருப்பவற்றில் இன்மை கண்டு தவிக்கின்றேன்.

எண்ணிய பணிகளெல்லாம் திண்ணியமாய் முடிக்க வல்ல கண்ணியக் கலங்கரை விளக்கங்களான ஆசான் குழு இங்கு புண்ணியக் குன்று களாய் தொடர்ந்த அதிபர்களால் ஆளப்பட்டு -

மன்னிய புகழ் பூத்த மாணாக்கப் பரம்பரை கண்டு களித்திடும் கூடம்
எண்ணிய கோட்டப் புகழ்காக்கும் பொஸ்கோ கல்விக் கூடமன்றோ
அன்புக்கு, அறிவிக்கு, பண்பிற்கு, பணியினிற்கு
முன்னுக்கும், பின்னுக்கும், இணையில்லா இக் கூடம்
என்றென்றும் சிறந்தோங்க என் இதய வாழ்த்துக்கள்.

**திரு.எஸ்.எஸ்.தங்கராஜா,**
யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

### செயலாளரின் ஆசிச் செய்தி



பொன்விழாக்காணும் யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தை வாழ்த்துவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். வடமாகாணத்தில் மட்டுமன்றி இலங்கைக்கு பெருமை தேடிக் கொடுத்து வரும் ஆரம்பப் பாடசாலைகளில்முதற்பெறுவதாகஇப்பாடசாலை அமைந்துள்ளது என்பதைக் கூறுவதில் பெருமை கொள்கின்றேன். இப்பாடசாலையில் நீண்ட காலமாக பாடசாலை அபிவிருத்தி சங்கச் செயலாளராக பணி யாற்றும் பாக்கியம் கிடைத்தமையை ஓர் அதிர்ஷ்ட மாகக் கருதிக்கொள்கின்றேன். இப்பாடசாலையில் எண்பதுகளின் இறுதிப் பகுதியிலிருந்தே பெற்றோராக இருந்துவருவதால் இப்பாடசாலையின் வளர்ச்சியைக் கண்கூடாகவே கண்டு வியந்திருக்கின்றேன். இதற்கு வழிசமைத்த இறைவனுக்கு நன்றி கூறுவது எம் கடமையாகும்.

**கு.தேவராஜா, செயலாளர் பா.அ.ச.**
பீடாதிபதி/ முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்,
யா.பல்கலைக்கழகம்.

### பிரதம விருந்தினரின் ஆசிச் செய்தி



புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் பொன்விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி. இப்பாடசாலையின் துரிதவளர்ச்சியை கடந்த 25 வருடகாலமாக அவதானித்து வந்துள்ளேன். இவ்வகையில் இப் பாடசாலையின் வளர்ச்சிக்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆற்றிய பங்களிப்பு மிக மகத்தானது. இப்பங்களிப்பால் இப்பாடசலை நாட்டிலுள்ள முதன்மை ஆரம்பப் பாடசாலைகளுள் ஒன்றாகத் திகழ்கின்றது. உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இன்று உயர்கல்வியைப்பெற்று, பொறுப்பான பதவிகளை வகிக்கும் யாழ்ப்பாணத்தவர்கள் பலர், தம் ஆரம்பக் கல்வியை இப்பாடசலையில் பெற்றவர்கள் என அறியமுடிகிறது.

புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் கல்விச் சேவை தொடர்ந்தும் சமூகத்திற்கு கிடைக்கவேண்டும். பாடசாலையின் கல்விப் பணியும் பொன்விழாவும் சிறக்க என் வாழ்த்துகள்.

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
P.hD. Durham J.P.
சிரேஷ்ட புவியியல் பேராசிரி யர்
முன்னாள் துணைவேந்தர்.

-: விளம்பர அனுசரணை :-

**யாழ். வர்த்தக நிலையம்**
302, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**சதாஸ் மோட்டோர்ஸ் அன்ட் ஹாட்வெயர்**
56/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**சிற்றி ஹாட்வெயர் அன்ட் ஸ்ரோர்ஸ்**
55,57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# பிள்ளைகளை நற்பிரஜைகளாக்க பெற்றோர் முயற்சி எடுக்கவேண்டும்



வலி.தெற்கு, செப்.10

பெற்றோர்கள் சமூகப் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். பிள்ளைகளுக்கு சிறந்த நல்வழிகளைக் காட்டி நல்ல பிரஜைகளாக்குவதற்கு முயற்சிக்கவேண்டும். எமது சமுதாயம் விடுதலை பெறவும் தேசம் விடுதலைபெறவும் அவ்வாறு பெற்ற விடுதலையை அர்த்தமுள்ளதாக அமைத்துக் கொள்ளவும் சமுதாயம் சிறப்பாக அமைய வேண்டும். அழியாத சொத்தான எமது கல்வியைக் குறைய விடாது பேணவேண்டும்.

- இவ்வாறு கூறினார் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம்.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்ற கந்தரோடை ஸ்ரீ.சுப்பிரமணிய வாசிகசாலை முன்பள்ளி விளையாட்டு விழாவில் அவர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நிலையத் தலைவர் அ.தற்பரானந்தம் தலைமையில் விழா நடைபெற்றது. எம்.கே. சிவாஜிலிங்கம் எம்.பி. மேலும் கூறியதாவது:-

இளைஞர்களிடையே அமைதியின்மை, வேலைவாய்ப்பின்மை, கல்வித்தர வீழ்ச்சி என்பவை இன்று ஏற்பட்டுள்ளன. இவற்றுக்கெல்லாம் பெற்றோரையோ மாணவர்களையோ குற்றம் சுமத்திவிட முடியாது. நிர்வாகம், முகாமைத்துவம் என்பன சரியாக இருப்பின் பிரச்சினைகள் எழமாட்டா. இன்று இவ்விளையாட்டுப் போட்டி சிறப்பாக அமைவதற்குக் காரணம் நல்ல நிர்வாகமும் சிறந்த முகாமைத்துவமுமேயாகும்.

கல்வித்தர வீழ்ச்சிக்குரிய காரணம் கண்டறியப்படவேண்டும். வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பிரதேசம், தீவகம் என்பன பின்தங்கிய பிரதேசங்கள். இங்கெல்லாம் கல்வி நிலை இரண்டாம் இடத்தில் உள்ளது. ஆனால் சகல வளங்கள் வசதிகள் கொண்ட தெல்லிப்பழை, உடுவில் கல்விக் கோட்டங்கள் 13 ஆம் 14 ஆம் இடங்களில் உள்ளன. இப்பகுதிகளில் சிறார்களின் கல்வியைக் கட்டிக்காப்பதன் மூலமே மேம்பாட்டை அடைய முடியும்.

தமிழர்கள் தம்மைத் தாமே ஆண்டமைக்கான அடையாளமாக விளங்குவது கந்தரோடைக் கிராமம். ஒரு இராசதானியாக, தலைநகராக விளங்கிய இந்த மண், பாரம்பரிய பண்பாடு கொண்டது. சமூகவிரோத செயல்கள், இளைஞர் குழப்பங்கள் இங்கு இடம்பெறுவதில்லை. இதே பண்பாட்டைக் கந்தரோடை மக்கள் தொடர்ந்தும் பேணி வளர்க்க வேண்டும் - என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஸ்கந்தவரோதயக் கல்லூரி பிரதி அதிபர் இ.ஜோர்ஜ் உரையாற்றுகையில், பெற்றோர்கள், மாணவர்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை செலுத்தவேண்டும். தொடர்ச்சியான கண்காணிப்பு இல்லாவிடின் தமது பிள்ளைகளின் பின்னடைவுக்கு அவர்களே காரணமாகிவிடுவார்கள். சிறு வருமானத்துடன் ஒரு சேவையாகக் கருதி செயற்பட்டு வரும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அவர்கள் மனம் விரும்பும் சம்பளம் பெற நாம் ஏதாவது செய்தே ஆகவேண் டும் - எனக் கூறினார்.

யாழ். தினக்குரல் பத்திரிகை முகாமையாளர் ஆ.சி.நடராஜா, சமாதான நீதிவான் செ.மகாதேவன் ஆகியோரும் உரையாற்றினர்.

(ப-152)




# மனிதநேயப் பண்பை வளர்ப்பதற்கு கலைப் படைப்புக்கள் பெரிதும் உதவும்

## ஆசிரிய கலாசாலை அதிபர் கூறுகிறார்

நல்லூர்,செப்.10

கலைப்படைப்புகள் பரீட்சைக்கு மட்டுமன்றி மனிதநேயப் பண்பை வளர்க்கவும் உதவும். சித்திர பாடத்துக்கான பொருத்தமான தமிழ்மொழி விளக்கத்துடன் கற்றல் வளம் அமைந்துள்ளதால் தமிழர் தம் ஓவியக்கலை ஓங்கும்.

சித்திர பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கு உதவும் வகையில் தமிழ்மொழி மூல விளக்கத்துடன் து.துசியந்தன் ஆக்கிய கற்றல் வளம் (இலங்கைக் கலை) வீடியோ இறுவட்டு வெளியீட்டு விழாவில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி பேசுகையில் மேற்கண்டாவாறு தெரிவித்தார்.

யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கல்லூரி முதல்வர் அ.சிறிக்குமரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி மேலும் பேசும் போது கூறியதாவது:-

சித்திரம் நாங்கள் வரைந்து இயல்பாகக் கிடைக்கும். தென்பகுதியில் புகைப்படக் கருவியுடன் நடமாடுவது ஆபத்தான ஒரு காலமாக இன்று இருக்கிறது.

அபாயகரமான ஒரு சூழலிலும் அந்தப் பகுதிகளில் சென்று தரமான காட்சிகளைத் தனது புகைப்படக் கருவிக்குள் அடக்கி ஒரு சிறந்த சித்திரக் கலைப் பொக்கிஷத்தை மாணவர்களுக்கு வழங்கிய ஆசிரியர் துசியந்தனின் 'கற்றல் வளம்' என்ற இந்த இறுவட்டு வகுப்பறைச்செயற்பாட்டுக்கு அப்பால் மாணவர்களுக்கு சிறப்பான பயனை வழங்குகிறது.

1972இல் கல்வியில் புதியன என்ற ஏற்பாட்டுக்கு அமைய அழகியற் கலை இடம் பெற்றது. அதற்கு முன்பு பலர் ஓவியத் துறையில் இந்தியாவில் பயிற்சிபெற்று ஆசிரியர்களாக இருந்துள்ளனர். அக்காலத்தில் ஒரு குறுகிய சில வரைதல் காட்சிகளுக்குள்ளேயே நின்றோம். அந்த நிலையில் இந்தச் சித்திரக் கலையை அழகியற் கலை என்று சொல்லும் போது அதற்குள் சங்கீதம், நடனம், ஓவியம் என்பன அடங்குகிறது.மகிழ்ச்சியுடன் கற்கும் போது பூரண தெளிவைப் பெறக் கூடிய கலை இது. இங்கே படத்தில் அற்புதமான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

காலத் தேவைக்கு ஏற்ப இது படைக்கப்பட்டுள்ள இந்த அற்புதமான படைப்பு எமது பாடசாலையில் 9ஏ எடுத்த மாணவர்கள்,10ஏ எடுக்க உதவும் என்பதுடன், ஆசிரியர்களுக்கும் கற்றல் கற்பித்தலுக்கு உகந்தது என்பதால் ஆசிரியர் துசியந்தனைப் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன் - என்றார்.

# கூட்டுறவின் ஊடாக அனைத்தையும் வழங்கும் காலம் விரைவில் வரும்

## கட்டமைப்பு உருவாகிறது என்கிறார் சிவனேசன் எம்.பி.

வலி.தெற்கு,செப்.10

எமது சொந்த நிலத்திலே எமது சொந்தக் காலிலே நின்று கூட்டுறவை வளர்த்து மக்களுக்குத் தேவையான சேவைகள் அனைத்தையும் கூட்டுறவு ஊடாக வழங்கும் காலம் வெகுவிரைவில் வரும். அதற்கான கட்டமைப்புகள் தமிழீழ நிர்வாக சேவையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வலிகாமத்தில் இடம்பெற்ற கூட்டுறவு தின விழாவில் உரையாற்றிய யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவனேசன் இவ்வாறு கூறினார்.

83ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு வலிகாமம் பகுதியில் இடம்பெற்ற கூட்டுறவாளர் விழா யாழ். மாவட்ட கூட்டுறவாளர் சங்கத் தலைவர்



பெ.கனகசபாபதி தலைமையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவனேசன் தமது உரையின்போது கூறியதாவது:-

கூட்டுறவு அமைப்பின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு தமிழீழ தேசியத் தலைவரின் சிந்தனைகளுக்கமைய கூட்டுறவை முன்னெடுத்துச் செல்வதற்கான நிர்வாகக் கட்டமைப்புகள் ஒழுங்குபடுத்தப்பட்டு வருகின்றன. ஸ்ரீலங்கா அரசின் உதவிகளை எதிர்பாராமல் எமது சொந்தக் காலில் நின்று கூட்டுறவை வளர்த்து மக்கள் மயப்படுத்தி இணைந்துகொள்ளக்கூடிய செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இச்செயற்றிட்டங்களினூடாக எமது பிரதேசத்தில் அருகி இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி கூட்டுறவை வளர்க்கவேண்டும்.

எமது பிரதேசம் விடுதலை பெறுமேயானால் கூட்டுறவு மூலம் உற்பத்தியாக்கப்படும் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்புக் கிடைக்கும். வெளிநாட்டு செலாவணியை மீதப்படுத்தி தன்னிறைவைப் பெறமுடியும் எமது விடுதலை - சுதந்திரம், உரிமைகள் என்பனவற்றுக்காக நாம் அனைவரும் உழைக்கவேண்டும்.

சிறிதுகாலம் தடைப்பட்டிருந்த கூட்டுறவுத்துறை தற்போது வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. ஆனால், கூட்டுறவுத் துறைக்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சரான தமிழ்மகன் கூட்டுறவு வளர்ச்சிபற்றி இதுவரை சிந்திக்காமல் இருப்பது வேதனைக்குரியது. ஆனால், கூட்டுறவு பற்றி சிந்திக்க நாம் அனைவரும் அணிதிரண்டு விட்டோம் என்பதை அவருக்கு தெரிவித்துக்கொள்கின்றோம். - எனக் கூறினார்.

பனை, தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஐயாத்துரை, இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ.சிவஞானசுந்தரம், தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் விஜிதரன், கூட்டுறவாளர் விஸ்வலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

(ப-152)

# கல்வி நிலையில் யாழ். மாவட்டம் பின் தங்கியமைக்குக் காரணம் என்ன?

## விளக்குகிறார் கல்விப்பணிப்பாளர்



வலி.தெற்கு,செப்10

''கல்வி தொடர்பான மறுசீரமைப்பு விடயத்தில் நாம் போதியளவு கவனம் செலுத்தாமையால் தான் யாழ்ப்பாண மாவட்டம் பின்தங்கிய நிலையில் உள்ளது.

கடந்த நான்கு வருடங்களாக ஜி.சீ.ஈ சாதாரணதர பரீட்சையில் சமூகக்கல்வி பாட பெறுபேற்றில் கடைசி ஐந்து மாவட்டங்களில் ஒன்றாக யாழ்ப்பாண மாவட்டம் இருந்து வருகிறது. ஆசிரியர்களும், பெற்றோர்களும் அக்கறை எடுத்துச் செயற்பட்டால் பிள்ளைகளிடத்தில் பெரிய அளவில் மாற்றங்களை ஏற்படுத்தலாம்''

இன்றைய யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்வி நிலை பற்றி விளக்கிய வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் இவ்வாறு கூறினார்.

உடுவில் கல்வி கோட்ட அதிபர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தமது உரையின்போது மேலும் கூறியதாவது:-

கலைப்பட்டதாரிகளின் எண்ணிக்கை பிள்ளைகளின் தேவைக்கு மேலதிகமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்தும் கூட கலைப் பாடங்களில் மாணவர்கள் பின்னடைந்துள்ளார்கள். சங்கீதம், தொழில் பாடம், அழகியல் போன்றவற்றில் கவனம் செலுத்தாமையால் பல மாணவர்கள் உயர்தர வகுப்புகளுக்கு செல்ல முடியாது போய்விட்டது. கடந்த வருடம் 9 பாடங்களில் அதிவிசேட சித்தி பெற்ற பல மாணவர் சமூகக்கல்வி பாடத்தில் சாதாரண விசேட சித்தி பெற்றதால் பத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்திபெறும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

மாணவர்கள் கல்வியில் பின்னடைவதால் சமூக முரண்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்; வீதிகளில் அலைகின்றனர். 16வயது காலத்தில் அவர்களை நன்நெறிப் படுத்தி விடவேண்டும்.

ஆரம்பக் கல்வி காலத்தில் இருந்தே பிள்ளைகளிடத்தில் அக்கறை காட்டவேண்டும். 4ஆம் தரத்தில் கூட தமது பெயர், கிராமம், பாடசாலை என்பவற்றின் பெயர்களை எழுதத் தெரியாமல் பலர் உள்ளனர். இதற்கு விசேட செயற்றிட்டம் அமைத்துச் செயற்பட வேண்டும்.

மாணவர் மன்றங்கள் அமைத்து அவை மூலம் சமகால நிகழ்வுகள் பற்றி தெரியவைக்க வேண்டும்.

நூல் நிலைய பாவனையை மறந்த சமூகமாக நாம் மாறிவிட்டோம். பாடசாலைகளில் ஏற்படுத்தப்படும் வாசிப்புப் பழக்கம் ஒரு பிள்ளையை பல்கலைக்கழகத்தில் இலகுவாக நூலக பயன்பாட்டை பெறவைக்கும்.

பிரதிக்கல்விப் பணிப்பாளர் கே.சண்முகநாதன், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் செல்வி கந்தையா, சி.மாதவகுமார் ஆகியோரும் உரையாற்றினர்.

(ப-152)

# அனைவரும் இணைந்து செயற்பட்டால் கல்வித் தரத்தை மேம்படுத்த முடியும்

## வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

குடத்தனை,செப்.10

ஆசியர்கள் கற்பித்தலிலும் மாணவர்கள் கற்றலிலும் அதிக கவனம் எடுத்துச் செயற்பட வேண்டும். கல்வியாளர்களும், பெற்றோர்களும் கல்வி அபிவிருத்தியில் சிறப்பாகச் செயற்படவேண்டும். அப்போதுதான் எமது பிரதேசத்தில் கல்வி அபிவிருத்தியில் மேம்பாட்டை ஏற்படுத்த முடியும், நாடு சுபீட்சம் பெறமுடியும். இவ்வாறு தெரிவித்தார் வட மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி. செல்வராஜா

பருத்தித்துறை வட.இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பரிசளிப்பு விழா நிகழ்விற்கு கல்லூரியின் அதிபர் திருமதி எஸ்.சண்முகநாதன் தலைமை தாங்கினார். பிரதி அதிபர் திருமதி எஸ். பாலேந்திரா வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து வலயக்கல்விப் பணிப்பாளர் வி. செல்வராஜா அங்கு உரையாற்றுகையில்,

யாழ்.மாவட்டம் இன்று கல்வித்துறையில் பின் தங்கியிருப்பது மிகக் கவலைக்குரியதாகும். எமது கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்கு நாம் அனைவரும் இணைந்து செயற்படவேண்டும். கல்வி அபிவிருத்திக்கு அரசால் மேற்கொள்ளப்படும் சகலதிட்டங்களையும் நாம் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டம் அவசர கல்வி மாவட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வித்தரம் உயர்வடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார்.

அதிபர் திருமதி எஸ்.சண்முகநாதன் தனது தலைமை உரையில் - இக்கல்லூரியின் அதிபர் பொறுப்பை நான் அண்மையில் பொறுப்பேற்றேன். 10 வருடங்களாக இக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றிய செல்வி அன்னபாக்கியம் கனகரத்தினம் சிறப்பாகச் செயற்பட்டு கல்லூரியின் வைரவிழாவையும் கண்டு இளைப்பாறியுள்ளார். இக் கல்லூரியின் அபிவிருத்திக்கும், மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கும் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே எனது இலட்சியமுமாகும். இதற்கு மாணவிகள், பெற்றோர்கள், பழைய மாணவிகள், நலன் விரும்பிகள் ஆகியோர் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஆய்வுகூடங்கள், கட்புல செவிப்புல அறைகளுக்கு மின் இணைப்பு வசதிகள் இல்லை. மாணவிகளின் சுதந்திரமான செயற்பாட்டுக்கு ஏற்ற பொருத்தமான வகுப்பறைத் தொகுதிகள் பற்றாக்குறையாகவே உள்ளன. க.பொ.த.சாதாரண தரத்திற்கென ஓர் ஆய்வு கூடம் இல்லை. களஞ்சிய அறையையே அவர்கள் தற்காலிக ஆய்வுகூடமாகப் பயன்படுத்துகின்றனர். இங்கு மாணவிகள் அனைவரும் ஒன்றுகூடுவதற்கான ஒன்றுகூடல் மண்டபமோ, பிரார்த்தனை மண்டபமோ இல்லாதது பெருங்குறைபாடகவே உள்ளது. இத்தகைய வளக் குறைபாடுகளை இக்கல்லூரி கொண்டிருக்கின்ற போதும் எமது ஆசிரிய ஆளணியினதும், மாணவிகளின் ஆன்ம பலத்தினாலும், அக்கறையான செயற்பாடுகளினாலும் கற்றல் நடவடிக்கைகளிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் வெற்றிகளையும் சாதனைகளையும் ஈட்டிவருவது நிச்சயம் பாரட்டப்படவேண்டியதாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. மாணவத் தலைவி செல்வி கஜேந்தினி சிவஞானசுந்தரம் நன்றியுரை வழங்கினார்.

(ப-78)

## அருள்மிகு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், சாவகச்சேரி

*அம்பிகை அடியார்களே!*

*எதிர்வரும் 17-09-2005, புரட்டாதிச் சனிக்கிழமை ஆரம்பமாவதை முன்னிட்டு ஐந்து சனிக்கிழமையும் மேற்படி தேவஸ்தானம் அதிகாலை முதல் பகல் ஒரு மணிவரை அடியார்கள் வந்து தரிசனம்செய்ய, அர்ச்சனை செய்யத் தேவஸ்தானம் திறந்திருக்கும். அடுத்து கேதார கௌரி விரதம் அனுஷ்டிப்பவர்கள் முன்கூட்டியே தங்கள் பெயர், நட்சத்திரங்களைப் பதிவு செய்து கொள்ளவும். கௌரி விரத பூசை பிற்பகல் 3 மணிக்கும், 21ஆம் நாள் தீபாவளி அன்று காலை 8மணி முதல் கௌரி விரத நூல் கட்டப்படும். தூர இடங்களில் இருந்துவரும் அடியார்களின் வசதிக்காக.*

**அனைவரும் வருக! அன்னை அருள்பெறுக!**

(39719)(32-14-19)

**-தர்மகர்த்தா.**


## கண்பார்வை அற்றவர்கள் நாட்டில் 20 ஆயிரம் பேர்

நாட்டில் இருபதாயிரம் கண்பார்வையற்றவர்கள் உள்ளனர். ஆனால், ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் பகுதியாகக் கண்பார்வைக் குறைபாடுகளுள்ளவர்கள் இருக்கிறார்களென பார்வைக் குறைபாடுள்ளவர்களின் இலங்கைக்கான சம்மேளனத் தலைவர் ஈ.எம்.நவரத்ன பண்டா தெரிவித்துள்ளார்.

இச்சம்மேளனத்தில் ஆக நான்காயிரம் கண்பார்வையற்றவர்களே பதிவுசெய்துள்ளனர் என்றும் அவர் கூறுகிறார்.

சம்மேளனத்தின் புதிய தலைமையகம் கொழும்பு தேவாலய வீதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சம்மேளனம் தமது சொந்தக் காலில் நிற்கும்வரை வெளியாரின் உதவிகள் வேண்டப்படுகின்றன என்று அவர் மேலும் கூறினார்.

தனியார் அமைப்புகள் பல உண்டியல்களை இலவசமாக வழங்கியுள்ளனர். ஒவ்வொரு உண்டியலும் 800 ரூபா பெறுமதியானவை. இதனை விட நிதி சேகரிக்கும் வேலைத் திட்டமொன்றை விழாக் காலங்களில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (த-64)

## குடும்பஸ்தருக்கு வெட்டுக்காயம்

யாழ்ப்பாணம்,செப்.10

தோட்ட வேலை முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் வெட்டப்பட்டுப் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் மிருசுவில் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நாவற்காடு வரணியைச் சேர்ந்த வேலாயுதபிள்ளை யோகேஸ்வரன் (வயது37) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம் அணிந்து வந்த கும்பலே இத்தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் உடனடியாக மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

(த-12-78)

## அறிவித்தல்

### தமிழீழ மாவட்ட நீதிமன்று - முல்லைத்தீவு

வழ: இல:-504/05
தன்மை :- விவாகரத்து

பாலகிருஸ்ணன் - சத்தியபவான்,
முங்கிலாறு,
உடையார்கட்டு.

வழக்காளி

சத்தியபவான் - சுகந்தினி,
துர்க்கையம்மன் கோயிலடி,
2 ஆம் வட்டாரம்,
கோம்பாவில், புதுக்குடியிருப்பு.

எதிராளி

மேற்படி இலக்க வழக்கானது முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு 2005.09.19 ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது. குறித்த எதிராளி நிரந்தரமாகக் குடியிருந்த மேற்படி விலாசத்தில் தற்சமயம் இல்லையென அறியப்படுவதால் இவ்வழக்குத் தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் எதிராளியோ அவரைச் சார்ந்தவர்களோ 2005.09.19 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ இந்நீதிமன்றில் தோன்றி எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு அறிவித்தல் தரப்படுகின்றது. அவ்வாறு செயற்படத் தவறின் இவ்வழக்கானது ஒருமுக விளக்கம் நடத்தப்பட்டு குடியியல் நடவடிக்கை முறையின் கீழ் ஏற்புடைய முடிவு எடுக்கப்படும் எனவும் அறியத்தரப்படுகிறது.

**மன்றின் கட்டளைப்படி**

வரைவு:
வழ/ சட்டவாளர்

(சி/44918)(26-32-15-17)

பதிவாளர்
மாவட்ட நீதிமன்று


**Dialog GSM**

**100/=, 400/=, 1000/=** விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் Sim (Connection) இணைப்புகளையும், மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்.

சகல தபால் அலுவலக சேவைகள் துரித தபால் சேவைகள் உள்நாட்டு, வெளிநாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகள்.

kit
எந்நேரமும் உன்னுடன்...

**WESTERN UNION** | பணப் பரிமாற்றம்

ஊடாக உலகின் எப்பாகத்தில் இருந்தும் ஒரு சில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக் கொள்ளவும். இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு அளப்பரிய பரிசில்கள் நாடுங்கள்:

**Sri Murugan**

**Tele Communication & Agency Post Office,**

303, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 5392, Fax: 222 3214, E-mail Srimurukan@eureka.lk

(சி-43268) (21-32-14-19)



**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
இல15, சிறாம்பியடி வீதி (off Stanly Rd.)
Tele:- 0777 222422, 0773151647

இலங்கையில் முதற்தடவையாக கம்பனிக்கணக்குகளுடன்

**Computerized Accounting**

*AccPac + Quick Books Pro + MYOB*

ஆகிய முன்னணி Accounting Software அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்

Course Contents
- Fundamentals of IT
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Budgeting
- fore Casting
- Business Planning

இக்கற்கைநெறியின் முடிவில் வேலைகொள்வதற்கு
Audit Firm Experience தேவையில்லை!
Working Experience தேவையில்லை!

ஆரம்பம்
10/09/2005
11/09/2005
9.30 AM

80% Off

Tally Accounting Package
புதிய பிரிவுகள் ஆரம்பமாகிறது



*324, Palaly Road, Jaffna.* தகவல் தொழில் நுட்பத்தில்

MOBILE NET MCS COMPUTER SERVICES

**BIT**



**கொழும்பு பல்கலைக்கழகத்தின்**
வெளிவாரிப் பட்டப்படிப்பு
**விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்**

- கற்கை நெறிகள் MCS நிறுவனத்தில் நடைபெறும்.
- பரீட்சைகள் யாவும் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் யாழ் பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படும்.
- விண்ணப்பிப்போர் O/Lஇல் கணிதபாடத்தில் தேகைமையுடன் A/Lஇல் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- கற்கை நெறிக்கான மாணவர்கள், தெரிவுப்பரீட்சை ஒன்றின் மூலமே தெரிவு செய்யப்படுவர்.
- தெரிவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் MCS நிறுவனத்தில் இலவசமாக நடாத்தப்படும்.
- கற்கை நெறியில் முதல் ஆண்டைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் சான்றிதழ் வழங்கப்படும். *(Certificate in Information Technology)*
- கற்கைநெறி முழுவதனையும் பூர்த்தி செய்வதன் மூலம் நீங்களும் ஒரு கணனிப் பட்டதாரியாகலாம்.
- எந்தவொரு பல்கலைக்கழக மாணவர்களும் BIT கற்கைநெறியை பயில்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.
- BIT கற்கைநெறியின் 1ம் ஆண்டினை MCSஇல் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு கனடிய பல்கலைக்கழகங்களில் கற்கைநெறியினை தொடர்வதற்கான அனுமதி.

**விண்ணப்ப முடிவுத் திகதி : 15-09-2005**
**விண்ணப்பப் படிவங்களிற்கும் மேலதிக விபரங்களிற்கும், நேரில் MCS, 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**

தெரிவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் MCS நிறுவனத்தில் 11/09/2005 நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகின்றது

Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project


## 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

*தோற்றம்* 07 – 12 – 1923



*மறைவு* 28 – 08 – 1985

### அமரர் கந்தையா பூபாலசிங்கம்

திதி - 10.09.2005 ஸப்தமி

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

அன்பின் திருவுருவாய் அமைதியின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
இருந்து எங்களுக்கு நல்வழி காட்டிய எங்கள்
அன்புத் தெய்வமே நீங்கள் எங்களைப் பிரிந்து
இருபது ஆண்டுகள் சென்றாலும் உங்கள்
நினைவு எம் நெஞ்சை விட்டு என்றும் அகலாது!

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, சகோதரர்கள்,பிள்ளைகள்,
மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்.

*சிவன் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு.*

(39682)(32-19-17)

## Hatton National Bank

### அடகு பொருள்களை மீட்டல்/ விற்பனைக்கான அறிவித்தல்

எமது கிளையில் அடகுச்சேவை வசதிபெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு,

நீங்கள் பெற்றுள்ள அடகுக் கடனுக்குரிய சிட்டின் மறுபக்கத்தில் குறிக்கப்பட்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருள்களை ஒரு வருட காலத்திற்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்படவேண்டும் என்பதனை மீண்டும் அறியத் தருகின்றோம்.

உங்களால் பெறப்பட்ட கடனின் முழுப்பகுதியையும் உடனே செலுத்த முடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் செலுத்தி கடனின் காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஒரு வருட காலத்திற்கு மேற்பட்ட அடகுப் பொருள்களை மீட்க/ காலாவதித் திகதியை நீடிக்க ஆவண செய்யாத வாடிக்கையாளரின் அடகுப் பொருள்கள் 01-10-2005 சனிக்கிழமை ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றோம்.

**- முகாமையாளர்.**
Hatton National Bank LTD.
Jaffna.

(சி/44918)(32-17-15)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர்
# பொன்னுச்சாமி சுந்தரலிங்கம்

11.08.2005இல் சிவபதமடைந்த அமரர் பொன்னுச்சாமி சுந்தரலிங்கம் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக் கிருத்தியமும் இன்று (10.09.2005) சனிக்கிழமை அவரது அளவெட்டி இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வுகளிலும் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கும்பழாவளைப் பிள்ளையார் வீதி,
கேணிக்கரை,அளவெட்டி.

குடும்பத்தினர்.
(39821)(38-11-16)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



# தவராசா சுகந்தன்

(காசாளர், நகரசபை, வல்வெட்டித்துறை)
மண்மகிழ - 28.05.1978 விண்மகிழ - 13.08.2005

கடந்த 13.08.2005 அன்று சிவபதமடைந்த அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (11.09.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

பலாலி வீதி,
(நல்லூர் பிரதேச செயலக முன் ஒழுங்கை),
திருநெல்வேலி. (39820)(38-11-16)

மனைவி,
குரும்பசிட்டி தவராசா (தந்தை),
வடிவானந்தம் (குஞ்சு- மாமன்).

## மரண அறிவித்தல்

### அப்புத்துரை ஈஸ்வரமூர்த்தி



மாதகலைப் பிறப்பிடமாகவும், இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை ஈஸ்வரமூர்த்தி 08.09.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரை - மின்னொளி தம்பதியரின் அன்பு மகனும் அமரர் சிவக்கொழுந்து - சிவகாமி தம்பதியரின் அருமை மகனும், இராசகுமாரியின் அன்புக் கணவரும், அனுஷாவின் பாசமிகு தந்தையும் கந்தசாமி (இத்தாலி) , துரைராசா (இத்தாலி), புலேந்திரராசா (அமரர்), துரைசிங்கம் (இத்தாலி) ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.09.2005) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10. மணியளவில் மாதகல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**நாவலர் வீதி, மாதகல்.** (39813)(38-11-16) **மனைவி, பிள்ளைகள்.**

## கைவிரல்கள் துண்டிப்பு

மரஅரிவு இயந்திர வாளில் அகப்பட்டு தொழிலாளியின் இரண்டு விரல்கள் துண்டிக்கப்பட்டன. இச் சம்பவம் நேற்றுமுன்தினம் மட்டுவில் தெற்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த பண்டாரி சந்திரகுமார் (வயது 25) என்பவரே விரல்கள் துண்டிக்கப்பட்டவராவார். இவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.(எ-117)

## பொருளியற் கல்லூரி

**நாவலர்றோட் - கே.கே.எஸ்.றோட்**
**யாழ்ப்பாணம். இணுவில்.**
(இரு இடங்களில்)

**A/L DAY CLASS**

**கலை, வர்த்தகப் பிரிவுகள்**
புதிய பிரிவு ஆரம்பம் – 12.09.2005
(39322) **திங்கள் 8.00** a.m. [ப.நே.]
அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவும்

## நாதன்ஸ் சினிமா

ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

கார்த்திக், ரோஜா, கௌசல்யா, விவேக் நடித்த

### சந்தித்தவேளை

கா.நே.: 10.30,2.30,6.30,9.30. (பு.நே.)
(கி-43363)

## மனோகரா யாழ்ப்பாணம்

சிம்பு, கோபிகா நடித்த

### தொட்டி ஜெயா

காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30.
(கி-44110)

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ் நடித்த

### அந்நியன் (ரீல்ஸ்)

(டொல்பி ஒலியமைப்பு)
காட்சிகள்:
11.00, 3.00, 7.00 (பு.நே.).

## ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
நியூபுகழ் எஸ்.ஜே.சூர்யா, நிலா நடித்த

### அன்பே ஆருயிரே

காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.0 (பு.நே.)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

## Jayoda ஜயோதா ජයෝදා

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7193864 முதல் 7205873 வரை சீட்டிழுப்பு இல. 166 திகதி 08-9-2005

வெற்றி எண்கள் **4 3 9 8 7 8** சுப்பர் எண் **03**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,41,95,275/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,41,95,275/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 103 | 5,000/- | 5,15,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,034 | 500/- | 5,17,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,344 | 50/- | 5,17,200/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,02,486 | 10/- | 10,24,860/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 5,000/- | 60,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 103 | 1,000/- | 1,03,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,038 | 100/- | 1,03,800/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,251 | 20/- | 2,05,020/- |
| | | மொத்தம் | 4,550,100/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 5,152,700/- |

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
**ரூ. 1,44,82,850/-**

தொடர் இல. 6265857 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 செப்டம்பர் 12 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| இரத்தினபுரி | 7199887-2-64 |
| கொழும்பு | 7203853-1-74 |
| கொழும்பு | 7205848-8-50 |
| மாத்தறை | 7198946-7-38 |
| கேகாலை | 7195028-3-03 |
| பொலன்னறுவை | 7195220-8-63 |
| கண்டி | 7196058-5-34 |
| ஹம்பாந்தோட்டை | 7199059-7-12 |

## பாராட்டு விழா

வலிகாமம்,செப்.10

வலிகாமம் கல்வி வலயத்தில் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி தென்மராட்சி வலயத்திற்கு இடமாற்றம் பெற்று சென்றுள்ள திருமதி றெஜினா இருதயநாதனின் சேவையை பாராட்டி பிரியாவிடை நடத்துவது என வலிகாமம் வலய அதிபர்கள் சங்க ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த அதிபர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் வலிகாமம் கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரியாவிடை நிகழ்வினை இம்மாத இறுதிவாரத்தில் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.
(எ-152)



### ஜெய்குருதேவ்
## வாழும் கலை அன்பர்களுக்கு ஓர் அறிவிப்பு

**வாராந்தம் நடைபெறும் சுதர்சனக் கிரியா பயிற்சி நாளை (11.09.2005) காலை 7.30 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபை மண்டபத்தில் வைத்து நடைபெறும் என்று தெரிவித்துக்கொள்கின்றோம்.**
**மேலும் விவரங்களுக்கு: 0779059549, 0779059544.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி குஞ்சிப்பிள்ளை அப்பாப்பிள்ளை

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த திருமதி குஞ்சிப்பிள்ளை அப்பாப்பிள்ளை அவர்கள் 08.09.2005 வியாழக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை (கைதடி வடக்கு)யின் பாசமிகு மனைவியும் விசாலாட்சி (கைதடி வடக்கு), தங்கலட்சுமி (சிங்கப்பூர்), சந்திரவதனி (கொழும்பு), மல்லிகாதேவி (லண்டன்), கமலாதேவி (லண்டன்), விமலாதேவி (சவுதி), ஆனந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் செல்வராசா, கமலநாதன், பாலசுப்பிரமணியம், கனகரத்தினம், மெடோனா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (11.09.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு (பொறளை, கொழும்பு-8) பூதவுடல் மதியம் 12 மணிக்கு கனத்தை இந்துமயானத்தில் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*109/4B, Manig Place,*
*Wellawatte, Colombo-6.*
**சந்திரவதனி (மகள்-மணி).**
(39798)(38-11-16)

### திருமதி சவிரிமுத்து மரியம்மா



மாதகலைப் பிறப்பிடமாகவும்ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சவிரிமுத்து மரியம்மா 08.09.2005 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சவிரிமுத்துவின் அன்பு மனைவியும்லெக்ஸ்சாண்டர்(கொழும்பு), யூடினா (ஆசிரியர், றோ.க.த.க. பாடசாலை ஆனைக்கோட்டை), ஜெறொனி (லிகிதர், புனித சம்பத்தரிசியார் கல்லூரி), பிறிட்ஜெட் (பிரதேச செயலகம், C.R.P.O.)அவர்களின் அன்புத் தாயாரும் செபரட்ணம் அவரின் பாசமிகு மாமியாரும், நிறோசா (பல்கலைக்கழகம், வவுனியா), நிறோஜினி (தொழில் நுட்பக் கல்லூரி, கொழும்பு), நிறோசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (10.09.2005) சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் ஆனைக்கோட்டை இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் பி.ப. 3 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
***உயரப்புலம், ஆனைக்கோட்டை.*** (39809)(38-11-16) **பிள்ளைகள்.**

### சுப்பிரமணியம் நவரட்ணம்



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நவரட்ணம் அவர்கள் 07.09.2005 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-கனகாம்பிகை தம்பதியரின் மூத்த புதல்வனும் பஞ்சரட்ணம், காலஞ்சென்ற இரட்ணசிங்கம் மற்றும் வரதராஜா, தவமணிதேவி, குணரட்ணம், சிறீரட்ணம், ரூபரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தவமணியின் அன்புக் கணவரும் நவநீதன் (சுவிஸ்), நவரஞ்சன் (ஜேர்மனி), நவஜீவன், சுபாங்கி, சித்திராங்கி ஆகியோரின் அன்புத் தந்தையும், தவராஜசிங்கம் (இந்தியா), சிவராஜசிங்கம் (சவுதி), மன்மதராஜசிங்கம் (கனடா), நீலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (11.09.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***சந்தை கிழக்கு ஒழுங்கை,***
***மானிப்பாய்.*** (39818)(38-11-16)
தகவல்:
**குடும்பத்தினர்.**

### கணபதிப்பிள்ளை இராசரத்தினம்

*(கலாபூஷணம் பிரதிமைக்கலைமாமணி, யாழ்.பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்பும் துறை வருகை விரிவுரையாளர்)*



காரைநகர், விக்காவிலைப் பிறப்பிடமாகவும் நவாலிதெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட க.இராசரத்தினம் அவர்கள் 06.09.2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல விஷகடி வைத்தியர், அண்ணாவியார் கணபதிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் இராசம்மா (ராணி ரீச்சர் - ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை) வின் அன்புக் கணவரும் கௌரிசிவம் (லண்டன்), சித்திரலேகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீநாதன் (பொறியியலாளர் - லண்டன்) அவரின் அன்பு மாமனாரும் ஹாரினி, உஷாணி, சங்கீர்த்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற க.பாக்கியம் காலஞ்சென்ற ச.பசுந்தரம், க.ரத்தினவேல் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், பொன்னையா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (11.09.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 11 மணிவரை இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பி.ப. 2.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்றுப் பூதவுடல் நவாலி கொத்துக்கட்டி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
***றெம்பிள் வியூ, நவாலி தெற்கு,***
***மானிப்பாய்.*** (39826)(38-11-16)
**மனைவி,**
**பிள்ளைகள்.**



மஹிந்த - ரில்வின் சில்வா ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டபோது...

ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் கலந்துகொண்டோர்.



# மஹிந்தவை நம்பி ஏமாறுவதற்கு தமிழ் மக்கள் தயாராக இல்லை!

## ஈழவேந்தன் எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, செப். 10

முரண்பாடுகளின் மொத்த வடிவமாகத் திகழும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை நம்பி ஏமாறுவதற்குத் தமிழ் மக்கள் தயாராக இல்லை. ஜே.வி.பியினருடன் கூட்டு வைத்துக் கொண்டதன் மூலம் அவர் தனது அரசியல் வாழ்வில் தற்கொலை செய்துகொண்டார்.

- இவ்வாறு சீறிச் சினக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன்.

ஜே.வி.பியினருடன் 12 அம்ச ஒப்பந்தம் ஒன்றில் பிரதமர் கையெழுத்திட்டமை குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இப்படிக் கூறினார். இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத்தில் நான் பிரதமரைப் பல தடவைகள் சந்தித்தபோதெல்லாம், ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பியுடன் சேர்ந்து ஏன் உங்களையே நீங்கள் தரம் தாழ்த்திக் கொள்கிறீர்கள் என்று அறிவுறுத்தியுள்ளேன். ஆனால், அவற்றையெல்லாம் மீறி அவர் அந்த இரு இனவாதக் கட்சிகளுடனும் தேர்தலுக்கான ஒப்பந்தங்களைச் செய்துள்ளார். இதன் மூலம் அவர் அரசியலில் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கடந்த ஒரு கிழமைக்குள் பிரதமர் பெரும் முரண்பாடான கருத்துகளையே வெளிப்படுத்தி வருகின்றார். மக்களாட்சியை ஏற்படுத்துவேன் என்றும், இனப்பிரச்சினைக்கு பிரபாகரனுடன் பேசியாவது தீர்வு காண்பேன் என்றும் அவர் கூறுகின்றார். ஆனால், இனவாதிகளுடன் கூட்டு வைத்துக் கொள்கின்றார். தமிழரின் தன்னாட்சி உரிமையை அங்கீகரிக்காத, ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு என்று கூறிக்கொள்ளும், இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை ஏற்காத சக்திகளுடன் கூட்டணியமைத்துக் கொண்டு எப்படி விடுதலைப் புலிகளுடனும் பிரதமர் பேசப் போகின்றார்? இவ்வாறு சொல்லிக் கொள்வதன் மூலம் அவர் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கின்றார்.

அவர் ஜே.வி.பியினருக்கு அடிபணிந்துள்ள நிலையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேசுவேன் என்று கூறுவது எள்ளி நகையாடத்தக்கது. இவ்வாறு ஏறுக்கு மாறாகப் பேசி முரண்பாடுகளின் மொத்த வடிவமாகத் திகழ்கின்றார் பிரதமர். அவரை நம்பி ஏமாறுவதற்குத் தமிழ் மக்கள் தயாராயில்லை.

ஜே.வி.பியினருடன் சேர்ந்து கொண்டு ஒற்றையாட்சிக்குள்ளே இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று அவர் கூறுவது தனித் தமிழீழக் கோரிக்கைக்கே வலுச்சேர்க்கும்.

பிரதமரின் இவ்வாறான செயற்பாடுகளுக்காகத் தமிழ் மக்கள் அவரை நிராகரிப்பார்கள் என்பது நிச்சயம். அவர்கள் அவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதற்காக மற்றொரு ஜனாதிபதி வேட்பாளரான ரணிலை அவர்கள் ஆதரிக்கிறார்கள் என்று அர்த்தப்பட்டு விடாது.

இந்திய வம்சாவளித் தமிழர்களின் குடியுரிமையைப் பறித்தது, தமிழ் மக்களின் மீது கொடூரமான போரைத் திணித்தது, அவசரகாலச் சட்டத்தின் கீழ் தமிழர்களை வதைத்தது என்று ஒன்றிரண்டல்ல பல அட்டூழியங்களை ஐக்கிய தேசியக் கட்சியும் செய்துள்ளது. தமிழ் மக்கள் இலகுவில் அவற்றை மறந்துவிட மாட்டார்கள். ஆகவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிங்களப் பெரும்பான்மையின வேட்பாளர்கள் எவரையும் அவர்கள் ஆதரிக்கப் போவதில்லை. இதுவே நிதர்சனம் - என்றார் ஈழ வேந்தன் எம்.பி. (எ-க)

## ஜே.வி.பி. - மஹிந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியினால் பிரதமருக்கு இவ்வாறான கடிதம் ஒன்று நேற்று அனுப்பி வைக்கப்பட்டது என்பதை ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் எரிக் பெர்னாண்டோ நேற்று உறுதிப்படுத்தினார்.

ஜனாதிபதியால் அனுப்பப்பட்ட அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஜே.வி.பியினருடன் நீங்கள் செய்துகொண்டுள்ள உடன்படிக்கை கட்சிக்கொள்கைகளுக்கு முற்றிலும் முரணானது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்கென உருவாக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பை நிராகரிப்பதற்கு முடிவெடுத்திருக்கிறீர்கள். நிவாரணப் பணிகளுக்கான நிதியைப் பகிர்ந்து கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பை விடுதலைப் புலிகளுடன் ஏற்படுத்திக்கொள்வது என்ற விடயத்தை எமது கட்சி தெளிவாக ஏற்றுக் கொண்டுள்ளது. நீங்கள் அடங்கிய அமைச்சரவையும் அதனை அங்கீகரித்துள்ளது.

பொதுக்கட்டமைப்பு நகலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தவரே நீங்கள்தான். ஆனால் இப்போது ஜே.வி.பியினருடன் நீங்கள் செய்துகொண்ட உடன்படிக்கையில் அதனை நிராகரித்துள்ளீர்கள். இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஏற்புடையதாக இருந்த விடயம் இப்போது - திடீரென - ஏற்கத்தகாததாக மாறியுள்ளது எப்படி என்பதுதான் எனக்குப் புரியாத விடயமாகவுள்ளது.

உங்கள் நடவடிக்கை கட்சியின் ஒழுக்கக் கட்டுப்பாட்டை முற்றாக மீறியதாகவே இருக்கின்றது.

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதன் மூலமே நாட்டின் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு ஒன்றை எட்ட முடியும் என்பதே கட்சியின் நீண்ட கால நிலைப்பாடாகும். ஆனால், நீங்கள் ஜே.வி.பியுடன் செய்து கொண்ட உடன்படிக்கை ஒற்றையாட்சி பற்றியே பேசுகின்றது.

ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு வழியே இல்லை. உலக நாடு எதிலும் அவ்வாறு நடந்ததாக வரலாறு இல்லை.

கடந்த பல வருடங்களாக சமாதான முயற்சிகளில் நான் முழுமையாக ஈடுபட்டுள்ளேன். எனினும் காத்திரமான முன்னேற்றம் ஒன்றை என்னால் எட்டமுடியாமல் போய்விட்டது. அப்படியிருக்கையில் நீங்கள் பிரபாகரனுடன் நேரில் சென்று பேசப் போவதாகத் தெரிவித்திருக்கிறீர்கள். ஜே.வி.பியுடனான உடன்பாட்டை வைத்துக்கொண்டு அங்கு நீங்கள் சென்றால் வெறுமனே 'கேக்' துண்டு ஒன்றை உண்டுவிட்டுத் திரும்பி வருவது மட்டும்தான் நடக்கக்கூடிய ஒரே காரியம். சமாதானம் பற்றி எதனையும் பேச முடியாது.

கட்சியின் கொள்கைகளுக்கு முரணாக நீங்கள் இப்படிச் செயற்படுவதை அனுமதிக்க முடியாது. கட்சியின் கொள்கைகளுக்கு முரணான விதத்தில் நீங்கள் ஜே.வி.பியினருடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ஒரு போதும் எமது கட்சியால் ஏற்றுக்கொள்ள முடியாது.

- இவ்வாறு அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (எ-க)

## யாழ். வாசியிடமிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

நேற்றுமுன்தினம் மாலை பலாலி விமான நிலையத்திலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கு வந்த விமானமொன்றில் பயணித்த தமிழர் ஒருவரின் கைப்பையை பரிசோதனைக்கு உட்படுத்தியபோதே அதனுள் பெருந்தொகையான வெளிநாட்டு நாணயத் தாள்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

கல்கிஸ்ஸ பொலீஸார் மேற்படி நபரை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். (எ-க)

## புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறை: ஆலோசனை வழங்க நோர்வேப் பிரதிநிதி!

கொழும்பு, செப். 10

விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையிலான யுத்தநிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பில் ஆலோசனை வழங்க நோர்வே அதன் விசேட பிரதிநிதியை இலங்கைக்கு அனுப்பிவைக்கவுள்ளது.

அந்நாட்டுத் தூதரகம் நேற்று விடுத்த செய்திக்குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த உடன்படிக்கையை கண்காணிக்கும் நோர்வேயின் பங்களிப்புடனான குழுவுக்கு ஆரம்பத்தில் தலைமை வகித்த மேஜர் ஜெனரல் ட்ரொன் புருஹாவ்டே மிகவிரைவில் - ஒரு மாதத்திற்குள் - கொழும்பு வருவார் எனவும் நோர்வே விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு வரும் நோர்வேயின் விசேட பிரதிநிதி, போர்நிறுத்த உடன்படிக்கையை வலுப்படுத்துவது பற்றி அரசுடனும் புலிகளுடனும் பேச்சு நடத்துவார்.

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைவரம், தொடர்பிலும் இரு தரப்பினருடனும் அவர் கருத்துப் பரிமாற்றம் செய்ய உள்ளார் எனவும் நோர்வே தூதரகக் குறிப்பு தெரிவிக்கிறது.

போர் நிறுத்த உடன்படிக்கை பலவீனமடைந்தே போகிறது. இதனைச் சீர்செய்ய நோர்வே அரசினர், அனுசரணையாளர்கள் என்ற வகையில் கடந்த மூன்று வாரங்களாக முயன்று வருகின்றனர்.

எனினும், இரு தரப்பினரும் - புலிகளும், அரசும் - நேரில் சந்தித்துப் பேசுவதற்கான இடம் பற்றி இன்னும் இணக்கம் ஏற்படவில்லை.

இலங்கையில் தொடரும் இந்நிலைமை காரணமாக நோர்வே அரசு அனுசரணையாளர்கள் என்ற வகையில் அதன் கவலையையும் வெளிப்படுத்தியுள்ளது.

அதேவேளை, இம்மாதம் நியூயோர்க்கில் இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமைகளின் - அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், நோர்வே, ஜப்பான் - கூட்டமும் நடைபெறவுள்ளது எனவும் நோர்வே விடுத்துள்ள அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க)



வவுனியாவில் நேற்றுச் சுட்டுக்கொல்லப்பட்ட இராணுவப் புலனாய்வாளரின் சடலத்தின் அருகில் பொலீஸார்.

## மரண அறிவித்தல்

### சுப்பையா சதாசிவம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்ட சுப்பையா சதாசிவம் நேற்று (09.09.2005) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் யோகரத்தினத்தின் அன்புக் கணவருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2005) சனிக்கிழமை பி.ப. 5.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

*75, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.* (39827)

**தகவல்:** மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

SKY COMPUTERS (PVT) LTD.
No, 89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021 - 4590325 : Fax: 021 - 4590325
மிகக் குறைந்த கட்டணத்தில்
On Line Courses
MS Office XP
Desk Top Publishing 3 Months
Only 2000/=
Affiliated with Irish International University (U.K)
தகுந்த முறையில் பயிற்சிநெறி
தங்கள் வசதிக்கேற்ப
நேர ஒதுக்கீடு
தவணைமுறைக் கட்டணம்
Unlimited Practical Hours
E - mail : skycom@wow.lk
(கச்சேரிக்கு அருகில்)
Today you learn Tomorrow you lead

புதிய யூனிவேசல் அக்கடமி
A/L 2007
பொருளியல்
விலைக்கட்டுப்பாடு
By:K.உதயன்
ஆரம்பம்:12.09.2005
7.00 a.m. (N.T.)

COLLEGE OF ENGLISH
பிறவுண் வீதி, யாழ்.
O/L ENGLISH PAPER CLASS
Sat., Sun. - 4.30p.m.
பட்டப்படிப்புக்கான
(E.S.L) ENGLISH PAPER CLASS
Sat., Sun. - 2.30p.m.
SPOKEN ENGLISH
Sat., Sun. - 3.30/5.30
பல்கலைக்கழக புதுமுக மாணவர்களுக்கானது
By. T. THANENDRAN

விஞ்ஞா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்.
A/L DAY CLASS
ஆரம்பம்: 12.09.2005 காலை 8 மணி
எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்குழு
பிரிவு I

| | |
|---|---|
| Acc. | திரு. பாலவாசன் |
| Ec. | திரு.உதயன் |
| B.S. | திரு.முரளி |
| Tam. | திரு.குழந்தை |
| H.C. | திரு.ஜெயக்குமார் |
| Log. | திரு.ஜெயந்தன் |
| Geo. | திரு.பாபு |
| Hin. | திரு.தரன் |
| His. | திரு.சுதன் |
| Chi. | திரு.வசந்தன் |
| Gov. | திரு.றொபின்சன் |

(A-45066)
* பிரிவு II மிக விரைவில்
* வெளியூர் மாணவர்களுக்கு விடுதி வசதி
* மாதாந்தப் பரீட்சைக் கருத்தரங்கு நடைபெறும்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.